# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள NEWUTHAYAN.COM

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 | கதிர் 126 | பங்குனி 19ஆம் நாள் | செவ்வாய்க்கிழமை | 02 ஏப்ரல் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050


# கோடிகளால் கூட்டமைப்பை வளைத்து விட்டாராம் ரணில்!

## சீறுகின்றது மகிந்த ஆதரவு அணி பாதீட்டைக் கவிழ்ப்போம் எனவும் சூளுரை

கொழும்பு, ஏப்ரல்.2

வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி என்ற பெயரில் பல கோடி ரூபாவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சலுகையாகக் கொடுத்து அவர்களைத் தம் பக்கம் வளைத்து விட்டார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. ஆனாலும் எதிர் வரும் 5ஆம் திகதி வரவு - செலவுத் திட்டத்தை நாம் தோற்கடித்தே தீருவோம். » 19

## முடியுமானால் ஏப்.5 இல் பலத்தைக் காட்டுங்கள்

சவால் விடுகின்றது ஐ.தே.க. » 19

## சித்திரவதைக்கு எதிரான குழு இலங்கை வருகிறது

கொழும்பு, ஏப்.2

சித்திரவதையைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் உப குழு இன்று இலங்கை வர » 19

## பிரான்ஸ் நாட்டுத் தூதுவருடன் வடக்கு ஆளுநர் நேற்றுச் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப்.2

வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனுக்கும், இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லெவர்ருக்கும் இடையே நேற்று ஆளுநர் செயலகத்தில் » 19



## யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் ராஜித சிறி தமிந்த நேற்றுக் கடமையேற்பு

யாழ்ப்பாணம், ஏப்.2

யாழ்ப்பாணம் மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபராக ராஜித சிறி தமிந்த நேற்றுக் கடமைக » 19

## கலப்பு நீதிமன்ற விசாரணை: முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பு!

கொழும்பு, ஏப்.2

பன்னாட்டு நீதிபதிகளைக் கொண்டு இலங்கை விவகாரத்தைக் » 19

## கூட்டமைப்பு– ரணில் பேச்சு தீர்க்கமான முடிவு இல்லை

யாழ்ப்பாணம், ஏப்.2

வடக்கு, கிழக்கு துரித அபிவிருத்திச் » 19

## பெற்றோல் ஊற்றிக் கொழுத்தி பட்டப்பகலில் கோரக் கொலை

மட்டக்களப்பு, ஏப்.2

மட்டக்களப்பு, வாழைச்சேனை, கண்ணகிபுரத்தில் குடும்பத் தலைவர் ஒருவர் பெற்றோல் ஊற்றி எரித்துக் கொலை » 06



## வவுனியாவில் கரடி தாக்குதல்: ஒருவர் காயம்

வவுனியா, ஏப்.2

வவுனியா, பாலமோட்டையில் கரடியின் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் காயமடைந்துள்ளார். அவர் » 06

## அபிவிருத்தியை அதிகமாக்கினால் பாதீட்டுக்குக் கூட்டமைப்பு ஆதரவு

இருப்பதைக் கொண்டு திருப்தியடைவது சிறப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஏப்.2

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூடிய அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவு - செலவுத் திட்டத்துக்குச் சாதகமாக வாக்களிக்கும் என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பி » 06


Dialog

இலங்கையில் அதிக நன்மைகளை கொண்ட இன்டர்நெட் கார்ட் மற்றும் ரீலோட்

டபுள் Data

ரு.49/- 750MB

ரு.99/- 1.5GB

50% 4G Bonus உள்ளடங்களாக

*Anytime + Night Time + Anytime Bonus Data on 4G

Dialog எதிர்காலம் இன்றே.

தங்கப்பவுண் எனில், குறைந்த வட்டியில் அதிக தொகை எம்மிடமிருந்து...

சம்பத் வங்கி எதிர்காலத்தின் முன்னோடிகள்

தற்போது தங்க பவுணிற்கு கரட் 24

அதிக அடகுத் தொகை ரு.48,000/-




அதேபோன்று 16% குறைந்த வட்டிக்கு

சம்பத் ரன்திரிய அடகுச் சேவை

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

0112 30 30 50 www.sampath.lk

# உங்கள் பெயருக்கு பின்னால் இருக்கும் இரகசியம்



உங்கள் பெயருக்கு பின்னால் இருக்கும் இரகசியம் என்னவென்று தெரியுமா? தெரிந்து கொள்ள தொடர்ந்து படியுங்கள்.

A -என்பது குறிப்பிடத்தக்க எழுத்தாகும். உங்கள் பெயர் A என்ற எழுத்தில் தொடங்கினால், நீங்கள் உறுதியான ஒரு நபராக இருப்பீர்கள். அதிகார தோரணையுடன் பிறரை வழி நடத்துவீர்கள். மேலும் தீரச்செயல் புரிந்திட தொடர்ந்து முயற்சிப்பீர்கள். வாழ்க்கையின் மீது வலுவான ஈடுபாடு இருக்கும். அதே போல் யாரையும் சாராமல் இருப்பீர்கள். உங்களின் துணிவு, நேர்மை மற்றும் உடல் அம்சம் ஈர்க்கும் வகையில் அமையும்.

B -உங்கள் பெயர் B என்ற எழுத்தில் தொடங்கினால், நீங்கள் உணர்சிபூர்வமானவர்களாக இருப்பீர்கள். நீங்கள் தைரியசாலியாகவும், அன்பு உள்ளவராகவும் இருப்பீர்கள். உங்கள் காதலரின் அன்பின் வெளிப்பாடாக கிடைக்கும் பரிசுகளை சந்தோஷத்துடன் பெற்றுக் கொள்வீர்கள். உங்களை மற்றவர்கள் செல்லம் கொஞ்ச வேண்டும் என நினைப்பீர்கள். அதே போல் உங்கள் துணையை எப்படி கொஞ்சுவது என்பதும் உங்களுக்கு தெரிந்திருக்கும்.

C -உங்கள் பெயர் C என்ற எழுத்தில் தொடங்கினால், பல்துறை அறிவு வாய்ந்த, தகுதி வாய்ந்த, திறமைசாலியாக இருப்பீர்கள். மென்மையானவராக இருந்தாலும், பணத்தை தண்ணீராக செலவளிப்பீர்கள். இயற்கை மற்றும் பிறவி பேச்சாளாராக இருக்கும் நீங்கள், சொல்வன்மைபேச்சாற்றலுடன் விளங்குவீர்கள்.

D -உங்கள் பெயர் D என்ற எழுத்தில் தொடங்கினால், அளவுக்கு அதிகமான மனத் திண்மை, வணிகம் புரியும் அறிவு, ஆளுமை போன்ற குணங்களை கொண்டிருப்பீர்கள். தொழில் புரிய பிறந்தவர் நீங்கள். சுத்தத்தின் மீது அதிகமாக கவனம் செலுத்துவீர்கள். நம்பிக்கை மிக்கவராக விளங்கும் நீங்கள் பிறருக்கு உதவிடும் குணத்தை கொண்டிருப்பீர்கள்.

E -உங்கள் பெயர் E என்ற எழுத்தில் தொடங்கினால், பிறரிடம் தொடர்பு கொள்வதில் வலிமை மிக்கவராக இருப்பீர்கள். மென்மை மிக்கவரான நீங்கள் உங்கள் சுதந்திரத்தை விரும்புவீர்கள். காந்த பெர்சனாலிட்டியை கொண்டவரான நீங்கள் நண்பர்களை சுலபமாக பெறுவீர்கள்.

F -உங்கள் பெயர் F என்ற எழுத்தில் தொடங்கினால், திட்டமிடுவதில் நீங்கள் சிறந்தவராகவும், நம்பிக்கை மிக்கவராகும் விளங்குவீர்கள். பிறரின் மீது அக்கறை கொள்வதிலும், உங்களை சுற்றியுள்ளவர்களை சந்தோஷமாக வைத்திருப்பதிலும், நீங்கள் வல்லவராக இருப்பீர்கள். தன்னம்பிக்கையாளரான நீங்கள் சிறந்த நகைச்சுவை உணர்வுடன் விளங்குவீர்கள்.

G -உங்கள் பெயர் G என்ற எழுத்தில் தொடங்கினால், நோக்கத்துடனான நபராக இருப்பீர்கள் நீங்கள். புதுமை, இயல்பு மற்றும் தத்துவம் மிக்கவராக இருப்பீர்கள். வரலாற்றை படிக்கவும், பயணம் செய்யவும் விரும்புவீர்கள். மதத்தின் மீது அதிக ஈர்ப்புடன் இருப்பீர்கள். உங்கள் போக்கில் வாழவே விரும்புவீர்கள். உங்கள் விஷயத்தில் அடுத்தவர்களின் அறிவுரைகள் மற்றும் தலையீட்டை நீங்கள் விரும்ப மாட்டீர்கள்.

H -உங்கள் பெயர் H என்ற எழுத்தில் தொடங்கினால், நீங்கள் பணத்தை சேர்ப்பவராக இருப்பீர்கள். புதுமையான சக்தியை குறிக்கும் இந்த எழுத்து. சுயமாக ஊக்குவித்து பிறரை சிறப்பான முறையில் கட்டுப்படுத்துவீர்கள்.

I -உங்கள் பெயர் I என்ற எழுத்தில் தொடங்கினால், நல்லது எதுவோ அதற்காக வாழ்பவர் நீங்கள். மேலும் தைரியசாலியாக திகழ்வீர்கள். அழகு மற்றும் நேர்த்தியுடன் இருப்பீர்கள். பேஷன் துறையில் மற்றும் இதர புதுமையான துறையில் சிறந்த எதிர்காலம் அமையும்.

J -என்ற எழுத்து மிகப்பெரிய லட்சியத்தை குறிக்கும். உங்கள் பெயர் J என்ற எழுத்தில் தொடங்கினால், உங்களுக்கு தேவையானவற்றை அடையும் வரை எதற்காகவும் விட்டு கொடுக்காமல், அதை அடைய ஓடுவீர்கள். உங்களுக்கு ஏற்ற வகையிலான அல்லது உங்களை விட ஒசத்தியான ஒரு வாழ்க்கை துணையை தான் நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள்.

K -உங்கள் பெயர் K என்ற எழுத்தில் தொடங்கினால், ஒளிவு மறைவுடன் வெட்கப்படும் குணத்தை கொண்டவர் நீங்கள். நீங்கள் திடமானவராக இருந்தாலும், உணர்ச்சிபூர்வமானவராக இருப்பீர்கள். சூழ்நிலைக்கு தகுந்தவாறு சுய உறுதி கூறும் நபராகவும், பொறுப்பை கையில் எடுக்கும் நபராகவும் விளங்குவீர்கள்.

L -உங்கள் பெயர் I என்ற எழுத்தில் தொடங்கினால், வாழ்க்கையில் நிலைகொள்ள அதிகமாக துடிப்பீர்கள். அடிக்கடி உறவுகளை மாற்றும் நீங்கள் யாருடனும் ஆழமான காதலை கொண்டிருக்க மாட்டீர்கள். தொழில் ரீதியாக அதிகமாக சம்பாதிக்கும் உங்களுக்கு நல்ல விதமான தொழில்/வேலை அமையும்.

M -என்ற எழுத்து தைரியம், அறிவு மற்றும் கடின உழைப்பை குறிக்கும். உண்மையான நட்பை உங்களால் கண்டுபிடிக்க முடியாது. M என்ற எழுத்தில் உங்கள் பெயர் தொடங்கினால் அறிவுரை வழங்குவதில் வல்லவராக இருக்க வல்லவராக இருக்கும் உங்களுக்கு நம்பத்தகுந்த துணை கிடைக்கும். உறவுமுறையில் ஈடுபடும் போது, தன்னை முழுவதுமாக அதில் அர்பணித்துக் கொள்வார்கள்.

*(தொடரும்)*

# 12 ராசியில்

## எந்த ராசியில் குரு இருந்தால் என்ன பலன்கள்



நவகிரகங்களில் சுப கிரகங்களில் தலை சிறந்த கிரகமாக விளங்குவது குரு பகவான். குரு தனத்திற்கும் புத்திரம், பொருளாதார நிலை, வக்கீல் தொழில், கொடுக்கல் வாங்கல், பொது காரியம், தெய்வீக விஷயங்கள், பூர்வீக் புண்ணியம் போன்றவைகளுக்கு காரணன் ஆவார்.

குரு ஒருவர் ஜாதகத்தில் பலம் பெற்று இருந்தால் பொருளாதார நிலை பழக்க வழக்கம் மிகச் சிறப்பாக இருக்கும். பொதுவாக குரு தனித்து இருப்பது நல்லது அல்ல. குரு நிற்கும் இடம் பாழ், பார்க்கும் இடம் கோடி புண்ணியம் ஆகும். குரு தான் இருக்கும் இடத்தில் இருந்து 5, 7, 9 ஆகிய இடங்களை பார்வை செய்வார். பொதுவாக எவ்வளவு தோஷம் இருந்தாலும் குரு பார்த்தால் தோஷம் விலகி விடும். கோட்சார ரீதியாக ஒரு ராசியில் ஒரு வருடம் தங்கும் குரு பகவான் ஜென்ம ராசிக்கு, 2, 5, 7, 11 ஆகிய பாவங்களில் சஞ்சரிக்கும் போது நற்பலனை வழங்குவார். குரு தனுசு மீனத்தில் ஆட்சியும், கடகத்தில் உச்சமும், மகரத்தில் நீசமும் பெறுவார். குருவிற்கு சூரியன், சந்திரன் செவ்வாய் நண்பர்கள், புதன் சுக்கிரன் பகைவர். சனி,ராகு, கேது சமம். பல்வேறு நற்பலனை வழங்கும் யோகங்கள் குரு கிரக சேர்க்கை போது உண்டாக்குவார்.

**ஜென்மத்தில் குரு**

குரு ஜென்ம லக்கினத்தில் இருந்தால் நல்ல உடல் அமைப்பு, நல்ல பழக்க வழக்கம், சிறப்பான பேச்சாற்றல், பரந்த மனப்பான்மை, நீண்ட ஆயுள், சிறப்பான நட்புக்கள்குரு பலம் இழந்து இருந்தாலும் பாவிகள் சேர்க்கை பெற்றாலும் உடல் நிலை பாதிப்பு, தேவையற்ற இடையூறு உண்டாகும்.

**குரு 2இல் இருந்தால்**

தன ஸ்தானமான 2இல் குரு சுபர் சேர்க்கையும் இருந்தால் தாராள தன வரவு, நல்ல பேச்சு ஆற்றல், வசதி, வாய்ப்பு, குடும்ப வாழ்வில் ஒற்றுமை,நல்ல கண் பார்வை உண்டாகும். குரு தனித்து இருந்தால் பொருளாதார ரீதியாக சில சங்கடம் உண்டாகும். குரு பாவிகள் சேர்க்கை பெற்றோ, பலம் இழந்தோ இருந்தால் பண கஷ்டம், குடும்ப வாழ்வில் பிரச்சினை உண்டாகும்.

**குரு 3இல் இருந்தால்**

குரு 3இல் இருந்தால் எடுக்கும் முயற்சியில் அனுகூலம், எதிலும் தனித்து செயல்படும் நிலை ஏற்றம் உயர்வு உண்டாகும். தனித்து குரு இருந்தால் இளைய சகோதர தோஷம் ஆகும். ஆண் கிரக சேர்க்கை உடன் இருந்தால் சேர்க்கை உடன் பிறப்பில் அனுகூலம் உண்டாகும்.

**குரு 4இல் இருந்தால்**

கேந்திர ஸ்தானமான 4இல் குரு இருந்தால் வசதி வாய்ப்பு, செல்வம், செல்வாக்கு, அசையா சொத்து யோகம், நல்ல பழக்க வழக்கம், நல்ல கல்வி ஆற்றல், சுக வாழ்வு உண்டாகும். தனித்து இல்லாமல் கிரக சேர்க்கையுடன் இருப்பது மிகவும் நல்லது. தனித்து பலம் இழந்தால் சுக வாழ்வு பாதிப்பு, அசையா சொத்து அமைய தடை உண்டாகும்.

**குரு 5இல் இருந்தால்**

5இல் குரு இருந்தால் நல்ல அறிவாற்றல், பரந்த மனப்பான்மை, பொது காரியம், சமூக நல பணியில் ஈடுபாடு, சிறப்பான குடும்ப வாழ்வு, தனித்து இருந்தால் புத்திர தோஷம் ஆகும். சுப கிரக சேர்க்கையுடன் இருந்தால் சிறப்பான புத்திர பாக்கியம் வசதி வாய்ப்பு உண்டாகும்.

**குரு 6இல் இருந்தால்**

குரு 6இல் இருந்தால் எதிரிகளை வெல்லும் அமைப்பு, நல்ல ஆரோக்கியம், சிறப்பான குடும்ப வாழ்வு, பொருளாதார ரீதியாக அனுகூலம் உண்டாகும். குரு பலம் இழந்தால் வயிறு கோளாறு, பெரியவர்கள் சாபத்தால் வாழ்வில் மன குறை உண்டாகும்.

*(தொடரும்)*

**YAMAHA**
*Revs Your Heart*

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விசேட சலுகை எம்மிடம்
Yamaha மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்யும்
வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் முறையில் அதிஸ்டம்



மோட்டார் சைக்கிள்
ஒன்றை வாங்கி

ரூபாய் 3.5 மில்லியனுக்கும்
மேலான பெறுமதியுள்ள

Brand NEW

**WAGONR ஐப்**
**பரிசாக வெல்லுங்கள்**



அத்துடன் பெறுமதியுள்ள வீட்டு எலக்ட்ரானிக்
பொருள்களையும் வெல்லுங்கள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

**DIGITAL ELECTROICE**
62/16, Stanley Road, Jaffna.
Tel: 021 222 4040 Mob : 077 662 3824 Email: nraveen1981@gmail.com



**மண்கும்பான் அருள்மிகு**
**வீரகத்தி விநாயகர்**
**மஹோற்சவம் - 2019**



இன்று (02.04.2019)
செவ்வாய்க்கிழமை

இரண்டாம் திருவிழா
மயில்வாகனத்தில்
மயுர கணபதி
உலா

அனுசரணை
**புதிய நதியா நகை மாடம்**
இல. 73,103, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8397, 021 222 3261



உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
0214931111



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
க.பொ.த (சா/த) - 2018





Congrats!

செல்வி
சி.சௌமியா 9A

செல்வி
ஜெ.மதிநிதா 9A

அத்துடன் செல்வி பா.நிலுக்சா **7A, 2B** இவர்களுடன் சித்தியடைந்த
ஏனைய மாணவர்களையும் பாராட்டுவதோடு
இந்த வரலாற்றுச்சாதனைக்காக உழைத்த அதிபர், ஆசிரியர்
அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**மு/குமுழமுனை மகாவித்தியாலயம்**



**யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்**

**விசேட விலைக்கழிவு**

*திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்*

# இந்தியன் செலக்ஷனின்

## சித்திரைப் புத்தாண்டு விசேட தள்ளுபடி





**புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்**

| | | |
|---|---|---|
| பட்டுச் சாறி | - ~~15000/=~~ | 7500/= |
| கொட்டன் சாறி | - ~~1800/=~~ | 1000/= |
| கொட்டன் Top | - ~~1500/=~~ | 1000/= |
| டெனிம் Top | - ~~1500/=~~ | 1000/= |
| பார்ட்டி புரொக் (பெரியது) | - ~~5000/=~~ | 3500/= |
| பார்ட்டி புரொக் (சிறியது) | - ~~3500/=~~ | 2500/= |
| கொட்டன் சல்வார் | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் (பெரியது) | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் (சிறியது) | - ~~3500/=~~ | 1000/= |

**இன்னும் பல புத்தம் புதிய டிசைன்களில்**

கொட்டன் சாறிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சல்வார்கள், நெற் சல்வார்கள்,
சல்வார் துணிகள், டொப் வகைகள், பார்ட்டி புரொக்ஸ் , மொடன் சூட்ஸ், சேட், T-சேட், ரவுசர்

இம் முறையும் சித்திரைப் புத்தாண்டை
இந்தியன் செலக்ஷனுடன் குதூகலமாகக் கொண்டாடுங்கள்

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**
**காலம் : 23.03.2019 - 14.04.2019 வரை**

## மாவட்ட பொது வைத்தியசாலை, மன்னார்
## பெறுகைகளுக்கான அழைப்பு

### மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கான வழங்கல்கள் / சேவைகள் - 2019/2020

1. மன்னார் பொது வைத்தியசாலைக்குப் பின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்காக தகுதியான, தகைமைவாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகள் கோரப்படுகின்றன.

| இல | விபரம் | பிணை வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. | வாயு சீராக்கி பாராமரிப்பு சேவை செய்தல் NP/04/42/DGH/MN/02/05/2019/AC/01 | 30,000.00 | 1500.00 |
| 2. | சிற்றுண்டிச்சாலை வாடகைக்கு வழங்கல் NP/04/42/DGH/MN/02/05/2019/CAN/02 | 30,000.00 | 1500.00 |

2. தகுதியான விலைக்கேள்விதாரா்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பெறுகைக்கான விண்ணப்பப் படிவங்களை அலுவலக நாள்களில் 02.04.2019 தொடக்கம் 15.04.2019 வரையான காலப்பகுதியில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பெற்றுக்கொள்வதுடன், 16.04.2019 ந் திகதி 10.00 மணிக்கு முன்பாக பூரணப்படுத்தப்பட்ட பெறுகை ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் கேள்வி நேர முடிவில் விலைக் கேள்வியாளர்கள் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும். அத்துடன் 10.00 (16.04.2019) மணிக்கு பின்னர் சமர்பிக்கப்படும் எந்தவொரு பெறுகை ஆவணங்களும் நிராகரிக்கப்படும்.

3. மேலதிக விபரங்களினையும், விலைக்கேள்வி பத்திரங்களையும் மாவட்டபொது வைத்தியசாலை, மன்னார் (கணக்குப்பகுதியில்) (தொலைபேசி இல. 023-2222261) என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.


**வைத்திய கலாநிதி திரு. எஸ். என். ஏச்.பீரிஸ்**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**மாவட்டபொது வைத்தியசாலை,**
**மன்னார்.**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

### ஆனந்தராசா பிரபாகரன் (கண்ணன்)

(தனியார் பேருந்து நேர கணிப்பாளர் -பருத்தித்துறை)



இமையாண் மேற்கு உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட ஆனந்தராசா பிரபாகரன் கடந்த (31.03.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆனந்தராசா தவமணி தம்பதிகளின் அன்பு மகனும் தவமலரின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் சியாமளா, சுதாகரன் (குட்டி - லண்டன்) காலஞ்சென்ற பிறேமிளா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் வர்ஷா, திருஷா, தர்ஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தேவமனோகரியின் அன்பு மைத்துனரும் சுவேதா, சுதேஸ் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2019) செவ்வாய்க்கிழ்மை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பெரியமாவடி வீதி,**
**சங்கத்தானை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**0768342916**

## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகர சபை : சபைநிதி- 2019

01. யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரா்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டிவிலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிா்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டட நிா்மாணத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொது நிதி சுற்றறிக்கை, இல.04/2016(i)ற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆா்வமுள்ள கேள்விதாரா்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 2216468, 021 2222019)** என்னும் முகவரியிலிருந்து 02.04.2019ஆம் திகதியில் இருந்து 16.04.2019ஆம் திகதிவரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை, பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 17.04.2019ஆம் திகதிமாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாகச் சமா்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரா் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
07. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமா்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 நாள்களுக்கு (19.06.2019 வரை) செல்லுபடியாகும்.
08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
09. கேள்வி தொடா்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளா் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 09.04.2019அன்றுகாலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீா்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் (மாதம்) | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை: பாதுகாப்புப் பிணை தொகை | வேண்டப்படும் கேள்விப் பிணை: செல்லு படியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | JMC/WD/CF.(Bu)/2019-53 | Construction of toilet compartments & Dressing Room at old park | 1.535 | 2 | C9/C8 | 16,000.00 | 17.07.2019 |
| 2 | JMC/WD/CF.(Bu)/2019-54 | Reconstruction of Kompayanmanal Cemetery Fence, Internal Road and Pond renovation work | 1.963 | 2 | C9/C8 | 20,000.00 | 17.07.2019 |
| 3 | JMC/WD/CF.(Bu)/2019-55 | Renovation of Auditor General's Department at JMC | 0.780 | 2 | C9/C8 | 8,000.00 | 17.07.2019 |
| 4 | JMC/WD/CF.(R)/2019-56 | Construction of Based platform with Interlock Paving, Road fringe Near to Holy Family Convent school, Jaffna | 2.753 | 3 | C8 | 28,000.00 | 17.07.2019 |

ஆணையாளர்,
பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவா்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

01.04.2019

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### பொன்னையா பரமசாமி



தோற்றம்
06.10.1935

மறைவு
25.03.2017


திதி: 02.04.2019

உன்னதமான குடும்பத் தலைவராக
எமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்து
ஒளியேற்றிய உயர்ந்த உங்கள்
நினைவுகள் எங்கள் இதயங்களில்
என்றும் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கணேசபுரம், கிளிநொச்சி.** **குடும்பத்தினர்.**

## மரணஅறிவித்தல்



### மயில்வாகனம் சங்கரப்பிள்ளை

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சங்கரப்பிள்ளை 31.03.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - அன்னபூரணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் புஸ்பவதியின் அன்புக் கணவரும் பதுமநாபன், செந்தூரன், ஐங்கரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிரூஜினியின் அன்பு மாமனாரும் டேஷ்மிதனின் பாசமிகு பேரனும் கந்தையா, சிவஞானசுந்தரம், செல்வராணி, காலஞ்சென்ற பொன்மணி மற்றும் சிவமணி ,தில்லைநடேசன், கிருபேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.04.2019) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**குமரேசர் வளவு,**
**மல்லாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**0212059849**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம் நினைவு பேருரை

"தமிழர்களின் தொல்தொடர்பியல் மரபுகளும் சம கால தொடர்பியல் சிக்கல்களும்"

பேருரை வழங்குனர் : கோபாலன் இரவீந்திரன்
பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் இதழியல் மற்றும் தொடர்பியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம் சென்னை.

இடம் : கைலாசபதி கலையரங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திகதி : 04.04.2019

நேரம் : பிற்பகல் 3.00 மணி

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பதிவாளர்.


# படப்பிடிப்பில் இயக்குநர் ஐஸ்வர்யா மோதல்



எஸ்.எஸ்.ராஜமித்திரன் இயக்கத்தில் ஆரி ஐஸ்வர்யா இணைந்து நடிக்கும் அலேகா படத்தின் படப்பிடிப்பின் போது இயக்குநருக்கும், ஐஸ்வர்யாவுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

தமிழில் பாயும் புலி, தமிழுக்கு எண் ஒன்றை அழுத்தவும், ஆறாது சினம், சத்ரியன் உள்ளிட்ட படங்களில் நடித்தவர் ஐஸ்வர்யா. பிக் பாஸ் நிகழ்ச்சி யில் பங்கேற்று மேலும் பிரபலமானார். தற்போது கெட்டவன்னு பேரு எடுத்த நல்லவன்டா, அலேகா, கன்னித்தீவு உள்ளிட்ட படங்களில் நடித்து வருகிறார்.

இதில் அலேகா படத்தை புதுமுக இயக்குனர் எஸ்.எஸ்.ராஜமித்திரன் இயக்கி வருகிறார். இதில் கதாநாயகனாக ஆரி நடிக்கிறார். போர்வைக்குள் காதலர்களின் கால்கள் மட்டும் தெரியும்படி உள்ள படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டது. அது சர்ச்சையை ஏற்படுத்தியது. இது காம படம் இல்லை, காதல் படமாக உருவாகிறது என்று படக்குழுவினர் விளக்கம் அளித்தனர்.

இந்த நிலையில், படப்பிடிப்பில் தற்போது இயக்குனருக்கும், ஐஸ்வர்யாவுக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. இதுகுறித்து படக்குழுவினர் கூறும்போது, "படப்பிடிப்புக்கு தினமும் ஐஸ்வர்யா தாமதமாக வந்தார். அவருக்காக மற்ற நடிகர்களும், தொழில்நுட்ப கலைஞர்களும் காத்திருக்க வேண்டி இருந்தது. சரியான நேரத்துக்கு படப்பிடிப்புக்கு வரும்படி ஐஸ்வர்யாவிடம் வற்புறுத்தியும் கேட்கவில்லை. ஒரு கட்டத்தில் இயக்குனர் பொறுமை இழந்து அவரை கண்டித்தார். இதனால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது" என்று கூறினர். இது பட உலகில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.


## பணியாள்கள் தேவை

அனுபவமுள்ள விற்பனை முகவர்கள்
ஆண், பெண் இருபாலரும் தேவை.
அடிப்படைச் சம்பளம் 15000 + கொமிஷன்
அலுவலக உத்தியோகத்தர்கள் உடனடித் தேவை. ஆண், பெண்
(அடிப்படைச் சம்பளம் 25000)

(CS 00580)(4.17)

077 719 8380/031 332 1746



## VISA SERVICES

Nursing துறையில் Diploma / Degree உடையவரா நீங்கள்?

உங்களுக்கான ஓர் அரியவாய்ப்பு...

- Canada வில் நீங்களும் குடியேறலாம்.
- 100% விசா உத்தரவாதமளிக்கும் ஆவண ஒழுங்குபடுத்தல்கள்
- எங்குமில்லாத மிகக் குறைந்த கட்டணங்கள்
- வயதெல்லை 35
- 5 பேருக்கு மாத்திரமே இவ்வரிய வாய்ப்பு

பதிவு செய்ய விரும்புபவர்கள் உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கத்தினை SMS அனுப்புங்கள்.

071 071 6979

விண்ணப்ப முடிவு திகதி:- 03.04.2019

6 வருட கால மக்களின் நம்பிக்கை

Winstar Consultants Pvt Ltd
45,Vembadi Street, Jaffna.
071 071 6979
www.winstarjaffna.com
fb:Winstar Visa Consultants


## மரண அறிவித்தல்

### குமுதினி சபாநாயகம்

*(முன்னாள் உயிரியல் ஆசிரியை யாழ். வேம்படி மகளிர் உயர்தரபாடசாலை)*



பிறப்பு 13.12.1964 இறப்பு 01.04.2019

மூளாயைப்பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குமுதினி சபாநாயகம் நேற்று (01.04.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நாகமணி சபாநாயகத்தின் (உதவிக்கல்விப் பணிப்பாளர் - தீவகவலயம்) அன்பு மனைவியும் சாரங்கா (மாணவி - மருத்துவபீடம் கொழும்பு), மதுஷா (மாணவி - A/L 2018 உயிரியல் யா/வேம்படிமகளிர்உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

539, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 023 7593 (கணவர்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 25 . 09 . 1943
விண்ணில் 03 . 03 . 2019

அமரர் செல்வி

### றூத் தவநாயகி வல்லிபுரம்

குடும்பத்தின் ஜீவனாகி
குலவிளக்காய் நீரிருந்தீர்
கொடுங்காலம் வந்ததுவோ
கொண்டும்மை சென்றதுவோ
ஆறாது உம் பிரிவு
மீண்டும் தான் காணபதற்கு
மீளாதோ உம் வாழ்வு
கண்ணீரால் தான் நனைந்து
கரைக்கின்றோம் எம் வாழ்வை
இமைப்பொழுதும் எம் நெஞ்சில்
நீங்காது உம் நினைவுகள் - என்றும்
கர்த்தருக்குள் ஜீவிக்க பிரார்த்திக்கின்றோம்

உதயசூரியன் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

076 848 5968

## மரண அறிவித்தல்



பிறப்பு 12 . 09 . 1936
இறப்பு 31 . 03 . 2019

### திருமதி ஆனந்தலஷ்மி தர்மலிங்கம்

திருமதி ஆனந்தலஷ்மி தர்மலிங்கம் யாழ் அராலி வடக்கை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட அவர்கள் 31.03.2019 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் சுப்பிரமணியம் தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தர்மரத்தினம் தையல்நாயகி தம்பதிகளின் அன்பு புதல்வியும் தர்ஷினி, வேணுகோபால் ஆகியோரின் அன்பு தாயாரும் ஜெயலஷ்மி, ராஜராஜேஸ்வரன் காலஞ்சென்றவாகளான பாலசுப்பிரமணியம், சபாநாதன், ராஜரத்தினம் அவர்களின் அன்பு சகோதரியும், பவந்தியின் அன்பு மாமியாரும் ஆவார் அன்னாரின் பூதவுடல் 03.04.2019 புதன்கிழமை காலை 8.30 மணியளவில் Mahinda, மலர்ச்சலையில் (591, Galle Road, Mt.Lavina) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதி கிரிகைகளின் பின்னர் 10.00 மணியளவில் மாயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: வேணி: 0112 715 700


## வாடகைக்கு விடப்படும்

அலுவலக, வங்கிகளுக்கு உகந்த மாடிக்கட்டடம் வாடகைக்கு விடப்படும்.

(CS 24318)(4.17)

077 329 7462

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் ½ மைல் தூரத்தில் இல.72, மாட்டீன் றோட் என்னும் இடத்தில் சகல வசதிகளுடனும், வாகனத் தரிப்பிட வசதியுடன் உண்டு.

(CS 24442)(4.17)

076 833 1234

## விற்பனைக்கு

ஆட்டுக்கடாய் விற்பனைக்குண்டு
தொடர்புகொள்ளவும்
T.P
077 078 1976, 077 568 3882

## கட்டுமானப் பணியாளர் தேவை

கட்டுமானத்துறையில் அனுபவம் உள்ள மேசன், மேசன் உதவியாளர், கம்பிவளைப்பவர்கள் ஆகியோருக்கு யாழ்ப்பாணத்தில் வேலைவாய்ப்பு உள்ளது. திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு
077 353 8970, 077 697 7920

## 20/- Banner Printing




Colombo Printers
666, K.K.S Road, Jaffna.
021 221 7030, 077 1974875

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொய்லர் இறைச்சிக்கோழிகள்
மொத்தமாகாவும்,
சில்லறையாகவும் மிகக்குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
சுத்தம்செய்யப்பட்டது

1Kg 480 மட்டும்

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை
077 868 9500

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 22 . 09 . 1956
இறப்பு 01 . 04 . 2019

திருமதி
### மணோன்மணி (மணி) கந்தசாமி

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மணோன்மணி கந்தசாமி நேற்று (01.04.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அகத்தியர் கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - நாகம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான அகத்தியர் - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் பிரசன்னாவின் பாசமிகு தாயாரும் ஜசிந்தாவின் அன்பு மாமியாரும் குணசிங்கம், காலஞ்சென்ற கனகம்மா, மற்றும் கனகலிங்கம் இராசம்மா, கனகாம்பிகை, துரைசிங்கம், சற்குணசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கனகாம்பிகை, இராசலிங்கம், மகேந்திரன், புவனேந்திரராசா ஆகியோரின் மைத்துனியும் நாகராசா, விக்கினேஸ்வரராசா, காலஞ்சென்ற சிறீஸ்கந்தராசா, மற்றும் பஞ்சாட்சரதேவி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2019) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு
077 3510027



மண்ணில் 12 . 04 . 1937
விண்ணில் 31 . 03 . 2019

### சண்முகராசா அன்னலட்சுமி

மட்டுவில் தெற்கு வாகையடி வீதியைப் பிறப்பிடமாகவும் கள்ளிக்குளம், சிதம்பரம், ஓமந்தை, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட சண்முகராசா அன்னலட்சுமி 31.03.2019 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் சண்முகராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னையா வள்ளிப்பிள்ளையின் அன்பு மகளும் சண்முகதேவன் (Myown Engineering), ராகுலன் தேவன், அசோகதேவன், ஸ்ரீவள்ளிதேவி, யோகாம்பிகைதேவி, ஆறுமுகம்தேவன், நர்மதாதேவி காலஞ்சென்ற கலாதேவன் ஆகியோரின் அன்புத் தாயும் சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான வடிவேல், கணேசன் மற்றும் நடேசன் (ஓய்வு பெற்ற Coolwear உத்தியோகத்தர்), குமரேசன், சிவசுந்தரம்(Canada) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற கந்தசாமி (ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர்), தவமணி (Canada), கமலாதேவி (ஆசிரியை), ராஜேஸ்வரி, இராஜேஸ்வரி, விக்கினேஸ்வரி(Canada) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவராசா, தவராசா, குவேந்திரன் (A.K.ரவி), வசந்தராணி, றஞ்சனா, சுபோதினி, மாலினி, சந்திரவதனா (லட்சுமி) ஆகியோரின் பாசமிகு மாமியும் சசி, விஜிதா(லண்டன்), நிரோமி, டெசாந் (சுவிஸ்), டெனி, டெசி(Germany), டெதுஷா, டெனா, டெதுசன், நிரோசன், சுகன்யா, யதுசன் (Germany), சுகந்தா (Germany), சுரேகா(Canada), கோகிலன் (Canada),மதன், சுதன் (Canada), புவி (Canada), கபில்(Norway), மயூரி (Norway),சயந்தன், டென்சிகா,ஜெயன்சி, அயந்தன், காலஞ்சென்ற நிதர்சன் மற்றும் நிதர்சி பிரகாஸ், சந்திரிகா(Norway), சரவணன், சர்மி, கஜன், தர்மினி, சோபி, தீபா, சசி, சங்கீதா, நிரோ, லெனின், கஜன், ஜீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தர்சிகன், சயந்தன், யுகானி(London) நிலான், நிலுக்சி, அக்சி, பவித்திரா, தக்சா, அபிநயா, திசான், மதுமிஷா, பரணிகா, கரிசன், நிதர்சன், கரீஸ், லக்சா, கரனி, காசினி, அச்சிரா, கவிசன், றஞ்சிதன், காவியன், றாகவி, சயந்தவி, பிருந்திகா, சாளினி,கரனி, பவன், நியிகாஸ், பிறின்சிகா, சஜிர், கிருசிகன், கிருசிகா, சானுஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கள்ளிக்குளம் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கள்ளிக்குளம், சிதம்பரம்,
ஓமந்தை - வவுனியா
(CS 00507)
(14,17)
தகவல்:
குடும்பத்தினர்.

## அபிவிருத்தியை...

னர் ஞா.சிறிநேசன்.
மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;
அடுத்து வருவது மோசமாக இருக்குமானால் நாம் இருப்பதை வைத்துத் திருப்தியடைவதே சிறந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஊரக எழுச்சித் திட்டத்தின் மூலம் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் திருப்தியடைந்தால் எமது கட்சி அதைச் சாதகமாகப் பரிசீலிக்கும். இந்த அரசால் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அரசு வழங்கும் உத்தரவாதங்களைக் கடைப்பிடித்தால் நாம் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிப்போம். எமது கட்சி கூடி ஆராய்ந்து இறுதி முடிவை எடுக்கும். எமது எண்ணம் என்னவெனில் அடுத்து வருவது இதைவிட மோசமாக இருக்கும் பட்சத்தில் நாங்கள் இருப்பதைக் கொண்டு திருப்தியடைவதே சிறந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பிரதேச சபைகளுக்கு அதிகளவு வளங்கள் கிடைக்க வேண்டும். அனைத்துப் பகுதிகளுக்கும் சமனான பார்வையில் நிதிகள் பங்கிடப்படுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவு - செலவுத் திட்டத்துக்குச் சாதாகமாக வாக்களிக்கும் - என்றார். (எ-க46)

## வவுனியாவில்...

சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
நேற்றுக் காலை வயலுக்குச் சென்ற 42 வயதுடைய சிவகுமாரன் என்பவர் மீதே கரடிகள் தாக்குதல் நடந்தியுள்ளன. பற்றைகளுக்குள் மறைந்திருந்த சுமார் 3 கரடிகள் தாக்குதல் நடந்தின என்று கூறப்படுகின்றது. தாக்குதலால் காயமடைந்த சிவகுமாரன், அந்த இடத்தில் இருந்து ஓடித் தப்பியுள்ளார்.
கையில் காயம் ஏற்பட்டுள்ள நிலையில் தற்போது வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-110)

## பெற்றோல்....

செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை மாலை நடந்துள்ளது.
கண்ணகிபுரத்தைச் சேர்ந்த நாகன் சாமியன் (வயது-58) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார். இரு பிள்ளைகளின் தந்தையான இவர், தொடருந்துக் கடவைக் காவலாளி என்று தெரியவருகின்றது.
இந்தச் சம்பவம் தொடர்பில் அதே இடத்தைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவர் வாழைச்சேனைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். மதுபோதையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் இறுதியில் சாமியன் எரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. (எ-22)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
**p.கிருபாகரன் சேவியர்**
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி ரீட்டா சேவியர்**




கடந்த 29.03.2019 அன்று காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/அத்தியார் இந்துக் கல்லூரி**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

கடந்த 04.03.2019 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவர்

அமரர்
### அருணாசலம் சிதம்பரநாதன் (சொக்கர்)



அவர்களின் ஆத்ம சாந்தி பிரார்த்தனை நிகழ்வு நாளை (03.04.2019) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புத்தூர் வடக்கு, புத்தூர்.
குடும்பத்தினர்.
021 205 8888

## மரண அறிவித்தல்

### திருமதி கிளாறம்மா யோசேப்




ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிளாறம்மா யோசேப் நேற்று (01.04.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேல் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சந்தியா யோசேப்பின் அன்பு மனைவியும் சந்திரமோகன் காலஞ்சென்றவர்களான ஸ்ரீதரன் ஆனந்தராஜா மற்றும் குணசேகரன், ஜெயகுமார், விஜயகுமார், சிந்தியா, பிரிந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் டெய்சி, புதுகலவசந்தா, சாந்தி, ஆனந்தி, அமராவதி, காலஞ்சென்ற மேரி ரோசலின் மற்றும் மனோகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற திரேசம்மா, லூர்த்தம்மா, மெனிக்கா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.04.2019) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணிக்கு சென். பீற்றேஸ் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக பூதவுடல் நவாலி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 24447/13/18)
தகவல்: குடும்பத்தினர்.





# இறந்த பின் வாழ்வது எப்படி

ஆறாம் வகுப்பு ஆசிரியர் மரங்களைப் பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது ஒரு மாணவன்.
'சேர்' மனிதர்களாம் எண்பது, தொண்ணூறு வயசானதும் இறந்து போய்விடுகிறார்கள். ஆனால் இந்த மரங்கள் மட்டும் எவ்வளவு வயசானாலும் இறப்பதே இல்லை. அது மாதிரி மனிதர்களும் இறக்காமலே வாழ முடியாதா..?
மனிதனா பிறந்தா இறந்து தான் போக வேண்டும் என்பது நியதி. ஆனால் வாழ்கின்ற காலத்தில் நல்ல முறையாக வாழ்ந்தோம் என்றால், இறந்த பின்னும் வாழலாம் என்றார்.
இறந்த பின்னாடி பேயாகத் தான் வாழ முடியும் என்று யாரோ சொல்ல எல்லோரும் சிரித்தனர். உடனே ஆசிரியர்.
அன்னை தெரசா இறந்து ரொம்ப வருடங்கள் ஆகிவிட்டன. இன்றுவரை நாம் யாருமே மறக்கவில்லை. அவர்களைக் பற்றி பாடங்களிலும் படிக்கிறோம். அவர்களுடைய உருவத்தை சிலையாகவும் படமாகவும் வைத்திருக்கின்றோம் அது மட்டுமில்லாம புனிதர் பட்டம் வேற கொடுத்திருக்கின்றோம். இதுக்கு காரணம் என்ன..?
அவர்கள் வாழ்ந்த காலங்களில் ஏழை எளியோருக்கும் நோயாளிக்கும் சுயநலமில்லாத செய்த உதவி தான் காரணம்.
நீங்களும் இறந்த பின்னால் வாழ வேண்டும் என்று எண்ணி வாழ்கின்ற காலத்தில் நல்ல மனிதராக வாழுங்கள் என்றார்.

## சொற் கோபுரம் அமைப்போம்

1. முக்கனிகளில் ஒன்று
2. சிற்பி செதுக்குவது
3. கவிஞன் இயற்றுவது
4. உழவுத்தொழில் செய்பவன்
5. அரசன் வாழும் இடம்
6. சூரியனுக்கு நன்றி செலுத்தும் பண்டிகை
7. திசையை அறிய உதவும் கருவி






AIA இன்ஷ்ஷுவரன்ஸ் TAFA உடன் இணைந்து உதைப்பந்தாட்ட பயிற்சி முகாமில் பங்கேற்க spurs கழக பயிற்றுவிப்பாளர்கள் இலங்கைக்கு அழைத்து வந்தது.
AIA இன்ஷ்ஷுவரன்ஸ் இங்கிலாந்து முன்னணி பிரீமியர் லீக் கழகமொன்றான Tottenham Hotspur கழக பயிற்றுவிப்பாளர்கள் இருவரை கொழும்பில் உதைபந்தாட்ட பயிற்சி முகாம் ஒன்றை நடத்த அழைத்து வந்தது. இந்த பயிற்சி முகாமில் நாடெங்கிலும் இருந்து டயலொக் தேசிய உதைபந்தாட்ட தொடரில் திறமையாக செயற்பட்ட Papare.com, தெரிவு செய்த 50 இளம் திறமைமிக்க உதைபந்தாட்ட ஆர்வளர்கள் பங்கேற்றார்கள். TAFA (Thaabit Ahmed Football Academy) உடன் இணைந்து இந்த பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. ஆசிய பிராந்தியம் முழுவதும் பல மில்லியன் ரசிகர்களை கொண்ட இங்கிலாந்து பிரீமியர் லீக் தொடரில் முதல்தர வரிசையில் இடம்பிடிக்கும் Tottenham Hotspur உதைபந்தாட்ட கழகத்தின் உத்தியோகபூர்வ மேலாடை அனுசரணையாளர் AIA ஆகும். ஆரோக்கியமாக வாழ்க்கைக்கு விளையாட்டு முக்கிய பங்கு வகிப்பதை AIA உணர்ந்துள்ளதுடன். அதன் ஊடாக குழுவாக செயற்படல். ஒழுக்கம் மற்றும் விளையாட்டுத்திறன் காரணமாக மக்கள் வாழ்க்கையில் சிறப்பான தாக்கம் ஏற்படுகின்றது.

## ASHAN & IRFAN, SAMEERA BIG WINNERS IN JAFFNA



Ashan Silva &IrfanFuard, in a Mitsubishi Lancer Evolution IX dominated the cars category at the Northern Speed Rally 2019, held in the Jaffna peninsula last weekend – March 22nd, 23rd & 24th. The longtime driver & co-driver painting beat another experienced duo, ShafrazJunaid&AkhryAmeer, in a Subaru Impreza, into second place. Sri Lanka Army rider SameeraPremaratne on a Yamaha WRF250 won the bikes event from 14-year old 125 cc KTM rider DMD Kalhara. This historic meet was the first-ever national motorsport event held in the Jaffna peninsula.
Multiple-time national racing champion Silva, who curiously had never won a national rally overall despite starring in several past rallies in a lower-powered Honda, set a scorching pace and was never headed in the overall classification after winning the very first stage of the rally by a narrow 22 thousands of a second from fellow Lancer Evolution driver IshraqWahab (co-driven by brother ZaakirWahab). That first stage, a historic night-time Spectator Super Special (never before run at a rally in Sri Lanka) that ran on the streets of the city of Jaffna around the Service Park followed a colorful opening ceremony and ceremonial start presided over by the Mayor of Jaffna & several military brass.
Once the rally moved from Jaffna to the fast and flowing stages in the Chundikulam area, IshraqWahab's challenge fell away due to technical issues (retiring permanently after SS3) but Silva saw close competition from Junaid and another Lancer Evolution driver, YasithGamage (co-driven by DakshinaAmarasinghe), winner of SS4, beating Silva by 33 seconds. However, by the end of the rally Silva had established a commanding lead of 5 minutes and 30 seconds to Junaid and almost 12 minutes to Gamage, who finished 4th overall after booking a 5-minute penalty for failing to start SS1 on account of engine trouble. In fact so great was Silva's pace that despite the sizeable and growing lead, he continued to push hard and on SS9, the second running of the Villu Reverse stage, he set a scarcely believable average speed of 111 KMPH, a new Sri Lankan record for single-stage average speeds. With the winner setting an overall average speed of 99.67 KMPH, experienced Asia Pacific Rally Championship and Indian Rally Championship campaigner and event runner-up Junaid called it the fastest rally he has ever run anywhere in the world. Several drivers commented on the smooth nature of the roads, and the low rate of attrition (only one non-finisher) was a testament to the quality of the stages.
In 3rd overall were one of the star performers of the weekend, rallying debutants NishanthaSenadeera&RoshithaAluthwala, in an unfancied SLH-class Honda Civic. Senadeera'sspectacular driving saw them beat faster SLGT cars on 3 of the 9 completed stages, and running close on several others. 5th overall and first home in the SLS class were Nigel Perera& Umar Farouk in another Civic, after a quiet but consistent run that promised more after setting the third-fastest overall time on SS1.
Trucks & Jeeps class winners JavidhWahab&RizminRazik were unfortunate to finish out of the top 5 after showing great pace the whole rally, as a crash on SS9 put paid to their chances, but Wahab's team was able to get the Mitsubishi Pajero Evolution out for the final stage – despite the time-loss and penalty, they still won the very competitive T&J class by almost a minute from husband and wife duo Buddhi&KumudikaGunasekera in a Toyota Hilux. Another debutant, AmjadRizvi (Nissan Pickup), co-driven by AzaadZiafuddin, finished 3rd in class after a close rally-long battle with the Gunasekeras. YakubAriff&BashryHilmy (Toyota Starlet, SLS) were awarded the prestigious Tony Tranchell Spirit Of The Rally Award for their efforts in continuing and finishing the rally after missing 3 stages and overcoming numerous challenges.
The bikes category also saw several strong performances, with the event won by Sri Lanka Army rider Premaratne, who overcame technical problems with his Yamaha to beat Kalhara by just under a minute in the overall standings. KR Kumarasekaka, HBCI Samaranayake and SAYA Perera from the STF, riding Yamaha XT250s rounded out positions 3 to 5. Jaffna local Sri Ram, on debut on a 250 cc Honda Baja also completed the rally.
Following a longstanding tradition of assisting local communities near rallies held by the organizing club, a charitable donation to 150 local school children was made on behalf of several well-wishers, with a presentation ceremony held at St. Anthony's Church in Vettilaikerny, Mulliyan, near where the stages ran.
The event was organized by the Motor Racing Association in conjunction with the Sri Lanka Army Motorsports Club, and promoted by the Jaffna Motorsports Club.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# திட்டத்தை செயற்படுத்த ஒத்துழையுங்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் குடிதண்ணீர் தேவையை நிறைவு செய்வதற்கான சிறப்பான அதேநேரம் நீடித்துப் பயன்தரக்கூடிய திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பாதுகாப்பான குடிதண்ணீர் ஒவ்வொரு குடிமக்களதும் அடிப்படை உரிமை என்ற வகையில், இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயற்படுத்தி குடாநாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான குடிதண்ணீர் கிடைப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதற்காக அனைத்துத்தரப்பினரும் தமது அரசியல், மத வேறுபாடுகளைக் களைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக யாழ். குடாநாட்டைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது கட்சி பேதங்களுக்கு அப்பால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, செயற்படுத்தி முடிப்பதற்கு தமது முழு உழைப்பையும் வழங்கவேண்டும்.

போருக்குப் பின்னரான காலத்தில் வடக்கில் விரைவாக வளர்ந்து வரும் பகுதி யாழ்ப்பாணம். வடக்கின் 5 மாவட்டங்களிலும் பொதுசன அடர்த்தி அதிகமுள்ள மாவட்டமும் யாழ்ப்பாணமே. இயற்கையான நீர்ப்பிடிப்பு வசதி ஏதுமற்ற இந்த வறண்ட பூமியில் குடிதண்ணீருக்கு நிலத்தடி நீரையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. ஆனால், அதிகரித்துவரும் சனத்தொகை மற்றும் தேவைகள் காரணமாக நிலத்தடி நீரை மட்டுமே குடிதண்ணீருக்கும் விவசாயத்துக்கும் நம்பியிருப்பது முடியாத காரியம். மாற்று வழிகளைத் தேடுவதன் மூலமே குடாநாட்டின் விரைவான வளர்ச்சியை உறுதிப்படுத்த முடிவதுடன் எதிர்காலச் சந்ததிக்கு வளமான வாழ்க்கையையும் விட்டுச் செல்ல முடியும்.

குடாநாட்டின் குடிதண்ணீர்த் தேவைக்கு கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் இருந்து தண்ணீரைப் பெறுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் அரசியலாக்கப்பட்டமை வரலாறு. தமது விவசாயத் தேவை பூர்த்தி செய்யப்படாத வரையில் யாழ்ப்பாணத்துக்குத் தண்ணீர் கொடுக்க முடியாது என்று அந்தப் பகுதி விவசாயிகள் நின்றுகொண்டனர். அந்த அரசியலுக்கு மேலாக மகாவலியில் இருந்து தண்ணீரைக் கொண்டு வருவதற்கும் எதிர்ப்புக்காட்டிய ஓர் அரசியல் நகர்வால் யாழ்ப்பாணக் குடாநாட்டின் எதிர்கால இருப்பே கேள்விக்குள்ளாக்கப்பட்டது.

இரணைமடுவில் இருந்து குடாநாட்டுக்குக் குடிதண்ணீரைத்தரும் திட்டத்தை மறித்து அதற்குப் பதிலாக மருதங்கேணியில் இருந்து கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை வடக்கு மாகாண சபை முன்மொழிந்தது. ஆனால், சபையின் ஆட்சிக் காலத்துக்குள் அதனைச் செயற்படுத்தும் எந்த வழிவகையையும் மேற்கொள்ளும் திறமையை அது கொண்டிருக்கவில்லை. குடிதண்ணீரிலும் அரசியல் நடத்தத் தெரிந்திருந்த அந்தச் சபைக்கு அதற்கான தீர்வைக் கண்டறியும் அறிவோ திறனோ இருக்கவில்லை. விளைவு குடாநாட்டு மக்கள் தொடர்ந்தும் மாசுபட்ட தண்ணீரையே தமது குடிதண்ணீர்த் தேவைக்குப் பயன்படுத்தும் நிலையை ஏற்படுத்தியது.

இந்த அரசியல்களை எல்லாம் கடந்து யாழ். குடாநாட்டுக்குக் கிடைக்கும் மழை வீழ்ச்சியைப் பயன்படுத்தியே குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான வழியை அதிகாரிகள் கண்டடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு சிறப்பான பாராட்டு. வீணாகும் மழைநீரையே சேமித்துக் குடிதண்ணீர் ஆக்கிக்கொள்ளும் இந்தத் திட்டம் பல நடைமுறைச் சாத்தியங்களைக் கொண்டதாகவே தெரிகிறது. சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத அதேநேரம் குடிதண்ணீருக்காகக் குடாநாடு வேறு இடங்களில் தங்கியிருக்கத் தேவையில்லாத நிலையையும் இதன் மூலம் ஏற்படுத்தியிருக்கும் அதிகாரிகளின் முயற்சி உண்மையிலேயே சிறப்பானதுதான்.

இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த அனைத்தும் தயாராக இருக்கின்ற போதும் வன உயிரிகள் திணைக்களத்தின் அனுமதி இன்னும் இந்தத் திட்டத்துக்குக் கிடைக்கவில்லை. திட்டப் பகுதிக்குள் அடங்கும் சில இடங்களில் மங்குரோவ் எனப்படும் சதுப்புநில மரங்கள் காணப்படுவதால் வனஉயிரிகள் திணைக்களம் அதனைத் தனது பகுதி என்று உரிமை கொண்டாடுகின்றது. இந்தப் பகுதி ஏற்கனவே நன்னீர் பிடிப்புப் பகுதியாக மாற்றப்பட்டுவிட்ட நிலையில் அதிலுள்ள மங்குரோவ மரங்கள் வனஉயிரிகள் திணைக்களத்திடமிருந்து விலகிவிட்டபோதும் ஏற்கனவே அட்டவணைப்படுத்தப்பட்ட இடங்கள் என்பதால் அதன் அனுமதி தேவையாக இருக்கின்றது.

இந்த அனுமதியை விரைந்து பெறுவதற்கு யாழ். குடாநாட்டின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது பேதங்களை மறந்து ஒன்றுபடுவதன் மூலமே குடாநாட்டின் எதிர்காலத்தைப் பாதுகாக்க முடியும்.

இந்துமதி

வடக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டவர் வடக்குத் தமிழர்களால் அவ்வளவு அறியப்படாத ஒருவராவார். அவர் அரசின் மீதும், அரச தலைவர் மீதும் முழுமையான விசுவாசம் கொண்டிருப்பதால் பிரச்சினைக்குரிய பகுதியாகிய வடக்குக்கு அவர் நியமிக்கப்பட்டார். ஆனால் அவரது சமீபகால நடவடிக்கைகள் வடக்குத் தமிழர்களைப் பொறுத்தவரையில் திருப்தியளிப்பதாகக் காணப்படவில்லை.



# வடக்கில் உறுதியற்றதான அதிகாரத்தால் ஏமாற்றமே

மாகாணங்களில் ஆளுநர்களின் ஆட்சியை ஏற்க முடியாதெனக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறியுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது. மாகாண சபைகளின் ஆயுட்காலம் நிறைவடைந்தமையால் வடக்கு மற்றும் கிழக்கு உட்பட நாட்டின் ஏனைய மாகாணங்களில் ஆளுநர்களின் ஆட்சி இடம்பெற்று வருகின்றது. இதைவிடுத்து வடக்கிலும், கிழக்கிலும் மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

### அரசதலைவரினது அதிகாரமே ஆளுநர் நியமனத்தில் உண்டு

தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி அரச தலைவரே சகல மாகாணங்களுக்கும் ஆளுநர்களை நியமனம் செய்தார். இந்த வகையில் கிழக்கு மாகாணத்துக்கு ஹிஸ்புல்லாவும் வடக்கு மாகாணத்துக்கு சுரேன் ராகவனும் நியமிக்கப்பட்டனர். ஹிஸ்புல்லாவின் நியனமத்துக்கு எதிராக கிழக்குத் தமிழர்கள் பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். ஓர் அரசியல்வாதியை மூவின மக்களும் வாழ்கின்றதொரு பிரதேசத்துக்கு ஆளுநராக நியமித்தமை தவறெனவும் அவர்கள் வாதிட்டனர். மேலும் ஹிஸ்புல்லா தமிழர்களுக்கு விரோதமான சிந்தனையைக் கொண்டவர் என்பதால் தம்க்கு அவரால் பாதிப்பு ஏற்படுமெனவும் தமிழர்கள் சுட்டிக்காட்டினர். ஆனால் அரச தலைவர் இவற்றையெல்லாம் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

ஏற்கனவே கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கு முஸ்லிம் காங்கிரசைப் பிரதிநிதித்துவம் செய்யும் இராஜாங்க அமைச்சரான ஹரீஸ் முட்டுக்கட்டை போட்டு வருகின்றார். இதனால் கல்முனை வடக்கில் வசிக்கின்ற தமிழ்மக்கள் தமது அன்றாட அரச நிர்வாகச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதன் காரணமாகவே அரசுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாகக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் தனித்து முடிவெடுக்கவுள்ளதாக அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

### வடக்கு மாகாண ஆளுநர் அரசதலைவரின் விசுவாசி

வடக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டவர் வடக்குத் தமிழர்களால் அவ்வளவு அறியப்படாத ஒருவராவார். அவர் அரசின் மீதும், அரச தலைவர் மீதும் முழுமையான விசுவாசம் கொண்டிருப்பதால் பிரச்சினைக்குரிய பகுதியாகிய வடக்குக்கு அவர் நியமிக்கப்பட்டார். ஆனால் அவரது சமீபகால நடவடிக்கைகள் வடக்குத் தமிழர்களைப் பொறுத்தவரையில் திருப்தியளிப்பதாகக் காணப்படவில்லை.

அவர் முற்று முழுதாகத் தமிழ் மக்களுக்குச் சார்பாக நடந்துகொள்ளவேண்டுமென எவருமே எதிர்பார்க்கவில்லை. வடக்கில் இடம்பெறுகின்ற சட்டவிரோதச் செயற்பாடுகளை அவர் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமெனவே இங்குள்ள மக்கள் எதிர்பார்க்கின்றனர். வவுனியா வடக்கில் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டு பெரியளவிலாள சிங்களக் குடியேற்றமொன்றை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டது. பின்னர் அது தொடர்பான செய்திகள் வெளி வராத நிலையில் தற்போது அந்த நடவடிக்கை இரகசியமாகப் பெருமளவில் இடம்பெறுவதாகப் பிரதேச மக்கள் கூறுகின்றனர். வவுனியா வடக்கில் அமைந்துள்ள தமிழ்க் கிராமங்களான ஊற்றுக்குளம் மற்றும் க்ச்சல் சமளங்குளம் ஆகியனவற்றுக்கு இடையில் சிங்களவர்களைக் குடியமர்த்தும் முயற்சிகளே தீவிரமாக இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது.

ஒரு நாட்டின் மூன்றிலொரு பகுதி காடாக இருக்க வேண்டுமென்பது பொதுவான இயற்கை நியதியாகும். சமீபத்தில் கருத்து வெளியிட்ட அரச தலைவர் நாட்டில் காடுகள் மோசமாக அழிக்கப்படுவதாகவும் 33 சதவீத அளவில் இருக்க வேண்டிய காடுகள் 23 சதவீதமே உள்ளதாகவும் கூறினார். மேலும் புலிகளின் தலைவர் பிரபாகரன் காடுகளை அழியவிடாது பாதுகாத்ததாகவும் அவர் புகழாரம் சூட்டினார். தற்போது ஓர் இனத்தின் பிரதேசத்தில் இன்னொரு இனத்தைக் குடியமர்த்துவதற்காகப் பெருமளவு காடுகள் அழிக்கப்படுவதை அரச தலைவர் மௌனமாகவே பார்த்துக்கொண்டிருக்கிறார். இந்தச் சட்டவிரோதமான செயற்பாடு தொடர்பாக வடக்கு ஆளுநரும் மௌனம் காத்து வருகின்றார். ஒரு தமிழர் என்ற வகையிலாவது தமிழ்மக்களுக்கு இன்னல் ஏற்படும்போது அதைத் துடைக்க வேண்டிய பெரும் பொறுப்பு அவருக்கு உள்ளது. ஆனால் வடக்கின் முதலாவது பௌத்த மாநாட்டுக்குத் தலைமை தாங்குவதிலேயே அவர் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

### மாகாண சபை முறைமை தேவையற்றதொன்றுதான்

இலங்கையைப் போன்றதொரு சிறிய நாட்டில் மாகாணசபை முறைமை தேவையற்றதொன்றாகும். இதற்குச் செலவிடுகின்ற நிதியை மக்களின் ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்துவதால் பிரயோசனமாக இருக்கும். வடக்கு மாகாணசபை தனது முழுக் காலமும் ஆட்சியில் இருந்தபோதிலும் அதனால் மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்கவில்லை. மாகாணசபை உறுப்பினர்கள் தமக்குரிய அனைத்து வரப்பிரசாதங்களையும் ஒன்றுகூடவிடாமல் அனுபவித்தனர். சபைக் கூட்டங்களுக்கு அதிகநிதி செலவிடப்பட்டது.

கட்டடங்களுக்குக்கான வாடகை, வாகனங்களுக்கான செலவினமென வெள்ளை யானையைக் காட்டில் பராமரிக்கின்ற அவலநிலைதான் இங்கு காணப்பட்டது. ஆனால் மாகாணசபையால் எள்ளளவு பிரயோசனம்கூட மக்களுக்குக் கிடைக்கவில்லை. மாகாணசபை போய் ஆளுநர் நிர்வாகம் வந்தால் எல்லாமே சரியாகிவிடுமென மக்கள் நம்பியிருந்தனர். ஆனால் ஏமாற்றமே எஞ்சியது.

# போர் வடுக்களோடு இன்றும் வடக்கில் 3 லட்சம் பெண்கள்

யாழ்ப்பாணம், ஏப்.2

வடக்கு மாகாணத்தில் 3 இலட்சத்துக்கும் அதிகமான பெண்கள் போரினால் பாதிக்கப்பட்டு, அதற்கான நீதி வேண்டியும், குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கான வழிவகைகளை வேண்டியும் நித்தம் போராடிக்கொண்டுள்ளனர் என்று வடக்குமாகாணப் பெண்கள் சமாசம் அறிக்கையிட்டுள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் தொடர்பில் அரசிடம் பேசித் தீர்வுகளைப் பெற்றுத்தருமாறு கோரி, வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் நேற்று அந்த அறிக்கை கையளிக்கப் பட்டது.

நிலைமாறுகால நீதிக்காய் எங்களின் குரல் என்ற தலைப்பில் நேற்று யாழ்ப்பாணம் வலம்புரி விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற நிகழ்வின்போதே அந்த அறிக்கை கையளிக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் போரினால்ப் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்கள் வட கிழக்கு உட்பட வடமேல் மாகாணத்தில் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர்.

சுமார் 89 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் போரினால் விதவைகளாக்கப்பட்டுள்ளனர் என்பதற்கு அப்பால் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், காணாமற்போன அங்கத்தவர்களின் குடும்பங்கள் தடுப்புக்காவலிலுள்ள அங்கத்தவர்களின் குடும்பங்களின், உறவினர்களும், மாற்றுத்திறனாளிகளாக்கப்பட்டு குடும்பத்தைத் தலைமை தாங்கமுடியாத நிலையிலுள்ள ஆண்களின் குடும்பங்கள், தாய் தந்தையை இழந்த குடும்பத்தைத் தலைமை தாங்கும் பெண்கள், மாற்றுத்திறனாளிகளாய் குடும்பத்தைத் தலைமை தாங்கும் பெண்கள் என்ற வகைப்பாட்டுக்குள் உள்ள பெண்களென கிட்டத்தட்ட மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட பெண்களும் ஏனைய போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுமாகிய நாம் எமக்கான நீதி வேண்டியும் எங்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கான வழிவகைகளை வேண்டியும் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களாய் உங்களிடம் எங்களது வேண்டுகோள்களையும் சிபாரிசுகளையும் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் மாவட்டங்கள் சார்பாக முன்வைக்கின்றோம்.

**சமூகப்பாதுகாப்பும் வாழ்வாதாரமும்**

போரினால் பாதிக்கபட்ட பெண்களாக நாம் முப்பது வருடங்களாக துயரை அனுபவித்து வருகின்றோம். கணவரை இழந்து, குடும்பத்தின் அங்கத்தவர்களை இழந்து, ஆண்துணையின்றி ஆதரவற்று வாழும் நலிவுற்ற மக்களாகிய நாங்கள், எங்களது பாதுகாப்பையும்,எங்களது பிள்ளைகளின் பாதுகாப்பையும் முதன்மையாகக் கோரி நிற்கின்றோம். எங்களால் எங்களது பிள்ளைகளைத் தனித்து விட்டு தூர இடங்களுக்கு வாழ்வாதார முயற்சிகளில் ஈடுபடச் செல்வது அச்சமாகவுள்ளது.

**இராணுவமயமாக்கல்**

ஒருபக்கம் இராணுவமயமாக்கல் மறுபுறம் அதிகரித்து வரும் இளைஞர்களின் போதைவஸ்துப்பாவனை. நாம் உழைப்பதற்கு ஒருபோதும் அஞ்சுபவர்களல்ல.

ஆனாலும் பல வருடங்களாகத் தொடரும் எங்களது மனக்கவலைகளும் ஆரோக்கியமற்ற நிலையும் எங்களை நோயாளிகளாக்கிவிட்டன.

எங்களது உறவுகள் உயிரோடு இருக்கின்றார்களா இல்லையா என்ற ஏக்கமும், விரக்தியும் எம்மீதே எமக்கு அக்கறையில்லாத நிலையை ஏற்படுத்தி விட்டன.

இருந்தும் நாம் எம் பிள்ளைகளுக்காக வாழ வேண்டியுள்ளது. தொடர்ச்சியான இராணுவ அச்சுறுத்தல்களும் இன்றும் நாமும் காணாமலாக்கப்பட்டோரும் இணைந்து நடத்தும் கூட்டங்களுக்கும், ஆர்ப்பாட்டங்களுக்கும் சென்று வந்ததாலும் எம்மைப் பற்றிய தகவல்கள் இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் சேகரிக்கப்படுகின் றன.

எங்களது உறவுகள் எங்கு உள்ளார்கள் என்றும் எமக்கு தெரியவில்லை.

எங்களது வாழ்வாதாரத்துக்கான காணிகளையும் சட்ட முறைப்படி பெற்றுக்கொள்ள முடியவில்லை.

எங்களது முறைப்பாடுகளுக்கு சரியான பதிலும் நீதியும் எமக்கு கிடைக்கப்பெற வில்லை.வாழ்வதற்கு வீடும் இல்லை வாழ்வாதாரத்தினை மேற்கொள்ளவும் முடியவில்லை.

நிலைமாறுகால நீதியின் கீழ் பால்நிலைக் கண்ணோட்டத்துடன் எங்களை அணுகுங்கள். நிலைத்திருக்கக்கூடிய வாழ்வாதார முயற்சிகளினை வழங்க எற்பாடுகளினை முன்மொழியுங்கள். நாங்களும் மனிதர்கள் தான். எங்களது குடும்பம் பட்டினியாகக் கிடக்கும்போது எங்களது மனங்கள் பதறுகின்றன.

எவ்வளவு வருடங்கள்தான் நாம் பொறுப்பது? எனவே இந்த இடத்தில் உங்களிடம் கேட்கின்றோம் அனைத்துப் பாதிக்கப்பட்ட பெண்களின் குரல்களாய் எமக்கான நீதியினைத் தாமதமின்றிப் பெற்றுத் தாருங்கள். நாமும் இந்நாட்டுப் பிரஜைகளே என்றுள்ளது.

(க-21.ரி)

## தொற்றாநோய் இலவச பரிசோதனைகள்

யாழ்ப்பாணம் ஏப்.2

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்குட்பட்ட புலோலி மேற்கு கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கான தொற்றாநோய் இலவச பரிசோதனைகள் இன்றும், நாளையும் சுகாதார மருத்துவ அதிகாரி பணியக மண்டபத்தில் நடைபெறும்.

பிரிவைச் சேர்ந்த 35 வயதுக்கும் 65 வயதுக்கும் இடைப்பட்ட இருபாலாரும் இதுவரை சிகிச்சை நிலையங்களில் தொற்றா நோய்களுக்கான சிகிச்சை பெறாதோர் பரிசோதனைகளில் கலந்து கொள்ள முடியும்.

உடற்திணிவுச்சுட்டி, குருதியில் சீனியின் அளவு ,கொலஸ்ரோல் அளவு மற்றும் குருதி அமுக்கம் ஆகியன பரிசோதனைகள் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

"ஆரம்ப பரிசோதனை ஆயுளை நீடிக்கும்" என்னும் தொனிப் பொருளில் இலவச பரிசோதனைகள் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## வர்த்தகருக்கு 15,000 ரூபா தண்டம்

சுகாதார விதிமுறை களைக் கடைப்பிடிக்காத இரு வியாபாரிகளில் ஒருவருக்கு ரூபா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான் மன்றுக்குச் சமூகமளிக்காத வியாபாரிக்கு அழைப்பாணை அனுப்புமாறு உத்தரவிட்டு வழக்கை அடுத்த மாதத்துக்கு ஒத்தி வைத்துள்ளார்.

யாழ். மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ. சுரேஸ்குமார் குருநகரிலுள்ள இரு வர்த்தக நிலையங்களைச் சோதனைக்கு உட்படுத்தியபோது சுகாதார விதிமுறைகளுக்கு முரணான வகையில் பூஞ்சணம் பிடித்த சாட்டுத் துண்டில்லாத திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்தமையை அவதானித்துள்ளார்.

அதையடுத்து இரு வர்த்தகர்களுக்கும் எதிராக தலா மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு சுகாதாரப் பரிசோதகரால் யாழ். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மன்றுக்குச் சமூகமளித்த வர்த்தகர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து அவருக்கு ஒரு குற்றத்துக்கு 5ஆயிரம் ரூபா வீதம் 3 குற்றங்க ளுக்கும் ரூபா 15ஆயிரம் அபராதம் விதித்த நீதிவான் மன்றுக்குச் சமூகமளிக்காத வர்த்தகருக்கு அழைப்பானை அனுப்புமாறு உத்தரவிட்டு மேல் விசாரணையை அடுத்த மாதம் 3ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

(எ-115)

## அதிபர்கள், ஆசிரியர்கள் மீண்டும் போராட முடிவு

யாழ்ப்பாணம், ஏப்.2

அதிபர், ஆசிரியர்களுக்கான சம்பள முரண்பாடு உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து மீண்டும் இரு நாள் சுகவீன விடுப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி கொழும்பு கல்வி அமைச்சுக்கு முன்பாக அதிபர்கள், ஆசிரியர்களால் போராட்டம் நடத்தப்பட்டது. அதன்பின்னர் கடந்த மாதம் 13ஆம் திகதி நாடளாவிய ரீதியில் சுகவீன விடுப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதுவரை கோரிக்கைகள் தொடர்பாக அரசு சாதகமான பதில் எதையும் வழங்காத நிலையில் எதிர்வரும் மே மாதம் 9ஆம் திகதியும், 10ஆம் திகதியும் சுகவீன விடுப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆண்டுகளாக அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தீர்க்கப்படாதுள்ளது. 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 22ஆம் திகதி ஆசிரியர் சேவை யாப்பு மற்றும் அதிபர் சேவை யாப்பு ஆகியவற்றின் ஊடாக 30 மாத நிலுவை சம்பளத்தை இல்லாமல் செய்திருக்கின்றார்கள். அதிபர், ஆசிரியர்கள் மீது திணிக்கப்படும் சுமைகளை இல்லாது செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து மீண்டும் போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-7)

# தொடர்ச்சியான நிர்வாக முடக்கல் போராட்டத்தை மேற்கொள்வோம்

*கால் நடை வைத்தியர் சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு*

வவுனியா.ஏப்.2

சாதகமானபதில்இல்லாதுவிடின் தொடர்சியான நிர்வாக முடக்கல் போராட்டத்தை மேற்கொள்வோம் என்று வடக்குமாகாண கால் நடை வைத்தியர்சங்கத்தின்தலைவர் கிருபா நந்தகுமாரன் தெரிவித்தார்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கால்நடை வைத்தியர்களால்வடக்குமாகாணம் தழுவிய ரீதியில் நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்டசுகவீனவிடுப்புப் போராட்டம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :

எமது மாகாணத்தில் உள்ள கால்நடை வைத்திய அலுவலகங்களில்நீண்டகாலமாக நிலவிக்கொண்டிருக்கும் அலுவலர்கள், தொழிலாளர்களின் பற்றாகுறைகள் ஏனைய பௌதீக வளங்களின் வெற்றிடங்களை வெளிக்கொணருவதற்கும் அதனால் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு நாம் மேற்கொள்ளவேண்டிய சேவைகளில் ஏற்படும் இடர்பாடுகளை பொதுமக்களுக்கும், ஏனையதரப்புகளுக்கும் தெரியப்படுத்தும் பொருட்டு குறித்த சுகவீன விடுப்புப் போராட்டம்மேற்கொள்ளப்படுகின்றது.

வடக்கில் உள்ள 34 கால் நடைவைத்தியஅலுவலகங்களிலும் வாகனவசதி குறைவாக காணப்படுகின்றது. இதனால் பண்ணையாளர்களுக்குநேரடியாகச்சென்று வழங்கவேண்டியசேவைகளில் அசௌகரியங்கள் காணப்படுகின்றன.

வடக்கில் உள்ள இருபதுக்கும் குறைவான அலுவலகங்களிலேயேவாகனவசதிகள் காணப்படுகின்றன. அங்குகூட 2000 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யபட்ட வாகனங்களே அதிகம்காணப்படுகின்றன. அதனால்அவைஅடிக்கடிபழுதாகும் நிலையும் ஏற்படுகின்றது.

அதிகமான அலுவலகபணியாளர்களுக்கு வெற்றிடம் இருக்கிறது. கால்நடை அபிவிருத்தி அலுவலர், அபிவிருத்தி போதனாசிரியர் போன்ற பதவிகளுக்கான வெற்றிடங்கள் வடக்கின் சகல அலுவலகங்களிலும் காணப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பாக அரசியல்மட்டத்திலும்சரிநிர்வாக ரீதியாகவும் சரி பல்வேறு கோரிக்கைகளை கடந்த இரண்டு வருடங்களாக முன்வைத்து வருகின்றோம். எனினும் அவர்களால் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எமது திணைக்களத்துக்குச் செய்யப்படவில்லை என்று கூறினார்.

இந்தப் போராட்டம் காரணமாக கால்நடை வைத்திய அலுவலகங்களுக்குச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தந்த பொதுமக்கள் திரும்பிச் சென்றனர். (க-110)

## விபத்தில் மூதாட்டி காயம்

சாவகச்சேரி, ஏப்.2

வீதியைக் கடக்க முயன்ற 70 வயது மூதாட்டி உந்துருளி மோதிக் காயமடைந்தார். உந்துருளியைச் செலுத்தி வந்த ஆசிரியையும் காயமடைந்தார். காயமடைந்த மூதாட்டி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த விபத்து நேற்றுக் காலை நாவற்குழி - கேரதீவு வீதியில் நடந்துள்ளது. வீதியோரம் நின்ற மூதாட்டி பயணிகள் வாகனத்தைக் கண்டு திடீரென வீதியைக் கடக்க முயன்றதால் உந்துருளியுடன் விபத்துக்குள்ளானார் என்று கூறப்படுகின்றது.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (எ-9)

# இயக்கச்சியில் விரைவில் நாய்கள் காப்பகம்

### கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஏப் 2
இயக்கச்சியில் நாய்கள் காப்பகம் விரைவில் திறக்கப்படும் என்று செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார். யாழ்ப்பாணம் கூழாவடிப் பகுதியில் அமைக்கப்பட்ட அபயம் இலவச மருத்துவசேவை நிலையத்திறப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இயக்கச்சியில் நாய்கள் காப்பக வேலைகளில் 80 வீதமானவை நிறைவடைந்துள்ளன. முதற்கட்டமாக 120 பெண் நாய்கள் இரண்டு ஏக்கர் நிலத்தில் பராமரிக்கப்படவுள்ளன. இதற்கான நாய்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக சூழலில் இருந்தே கொண்டு சென்று விடப்படவுள்ளன.


இந்த நாய்களுக்கு நாளொன்றுக்கு ஒரு மூடை அரிசி தேவைப்படும் அவை சைவ நாய்களாகவே வளர்க்கப்படும். யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையின் சிறுவர் மருத்துவமனை இணுவிலிலும், கண் மருத்துவ மனை அரியாலையிலும் அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

.ஆனைக்கோட்டை கூழாவடி இராணுவ முகாம் இருந்த மருத்துவர் மறைந்த அம்பலவாணரின் வீடு அபயம் மருத்துவக் குழுவினரின் சேவை நிலையமாகப் பயன்படுத்தப்படவுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை லண்டனில் இருந்து வருகை தந்த குழந்தை மருத்துவர் இலவசமாக ஆலோசனைகளை வழங்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை சக்கர நாற்காலி தேவைப்படுவோர், ஊன்றுகோல் தேவைப்படுவோர் அபயம் மருத்துவக் குழுவினருடன் அல்லது சிவபூமி அறக்கட்டளையுடன் தொடர்பு கொள்ளலாம் . இலவசமாக அவை வழங்கி வைக்கப்படும். இந்த உதவிகளை புலம்பெயர் உறவுகள் வழங்கியது -என்றார். (ஐ-7)

# யாழ்ப்பாண விவசாயிகளுக்கு 500 மெற்றிக் தொன் உருளைக்கிழங்கு



யாழ்ப்பாணம்,ஏப் 2
**யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பயனாளிகளுக்கு இம்முறை 500 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக மாவட்ட செயலக விவசாய பிரிவு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் உருளைக் கிழங்கு செய்கை சிறப்பாக நடைபெற்று வருகிறது. அவர்களுக்கு 50 வீத மானிய அடிப்படையில் விதை உருளை கிழங்குகள் வழங்கப்பட்டன.

கடந்த வருடம் சுமார் 220 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்குகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

50 கிலோ கிராம் கொண்ட விதை உருளை கிழங்குப் பெட்டிகள் 3 தொடக்கம் 5 வரை வழங்கப்பட்டன. ஆனால் இதை விட அதிகமான எண்ணிக்கையில் தான் பயனாளிகள் விதை உருளை கிழங்கினை கேட்கிறார்கள்.

ஆகவே இதனை அடிப்படையாக கொண்டு இம்முறை 500 மெற்றிக் தொன் விதை உருளை கிழங்கை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நவம்பர் மாதமளவில் விநியோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)



## பச்சிலைப் பள்ளியில் 3 வீடுகளுக்கு அடிக்கல்

கொழும்பு, ஏப். 2
கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முல்லையடி மற்றும் இயக்கச்சிப் பகுதிகளில் அமைக்கப்படவுள்ள 32 வீடுகளில், மூன்று வீடுகளுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வீடமைப்பு அதிகாரசபை அமைச்சர் சஜித் பிரேமதாச 'நாடு பூராகவும் 150கிராமங்கள்' என்னும் திட்டத்தின் ஊடாக இது நடைமுறைப்பத்தப்படுகிறது. நிகழ்வில், கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பரமோதயன் ஜெயராணி வீடமைப்பு அதிகார சபையின் அலுவலர்கள், பயனாளிகள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் பயனாளிகளுக்கு முதற்கட்டமாக 15 ஆயிரம் ரூபாவுக்கான காசோலைகளை வழங்கினார். (து)





# வட்டு. தமிழரசு வாலிபர் முன்னணி நடத்திய பண்ணிசைப் போட்டிகள்

### *30க்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்பு*

யாழ்ப்பாணம், ஏப்.2
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிவாலிபர்முன்னணியினர்பாடசாலை மாணவர்களிடையேயான பண்ணிசைப் போட்டி ஒன்றை நடத்தியிருந்தனர்.

அந்தப் போட்டி நேற்றுமுன்தினம்ஞாயிற்றுக்கிழமைசித்தன் கேணிசிறிகணேசா வித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் ஐந்து பிரிவுகளாக போட்டி இடம்பெற்றது.

தரம் 1,2 மாணவர்களுக்கு எட்டுவரிகளைக் கொண்ட தேவாரம் மற்றும் புராணம், தரம்,3,4,5மாணவர்களுக்கு இரண்டு தேவாரம், புராணம் தரம், 6,7,8ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மூன்று தேவாரம் மற்றும் புராணம், தரம் 9,10 மாணவர்களுக்கு பஞ்சபுராணம், க.பொ. தசாதாரணதரம், மற்றும் உயர்தர மாணவர்களுக்கு சகலகலா வல்லிமாலைஎன்றஅடிப்படையில் இந்தப் போட்டிகள் இடம் பெற்றிருந்தன.

போட்டியில்வட்டுக்கோட்டைத் தொகுதிக்குட்பட்ட சித்தன் கேணி சிறிகணேசா வித்தியாலயம், வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி, மூளாய்சைவப்பிரகாசாவித்தியாசாலை, பொன்னாலை வரதராஜப்பெருமாள்வித்தியாலயம், தொல்புரம் அமரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, வட்டு. கார்திகேயர், வட்டு. சுப்பிரமணிம், வட்டு. மேற்கு அ.மி.தக பாடசாலை, சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா,சங்கானைசிவப்பிரகாசா ஆரம்ப வித்தியாசாலை, சங்கானை அ.மி. த.கபாடசாலை, அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம், அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை, அராலி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக்கல்லூரி, ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 300க்கும் மேற்பட்ட மாண வர்கள் பங்குபற்றியிருந்தனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளு மன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனுடையமுழுஅனுசரணையில் போட்டி இடம்பெற்றது. தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி வாலிபர் முன்னணி இந்தப் போட்டியை ஏற்பாடு செய்திருந்தது என்று அதன் செயலர் சுதாகரன் தெரிவித்தார். (ஐ-21)

## சித்த மருத்துவ காணொலி வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப் 2
வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தால் சித்த மருத்துவம் பற்றிய ஆவணத் தொகுப்பு அடங்கிய காணொலி தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

சித்த மருத்துவம் தற்போது பலராலும் விரும்பட்டு வரும் நிலையில் சித்த மருத்துவ மனைகளுக்கு செல்லும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

தமிழ், சைவ சமயம், மருத்துவம் போன்ற பாரம்பரிய விடயங்களை உள்ளடக்கியதாக சித்த மருத்துவம் இருப்பதால் அது தொடர்பான ஆவணக் காணொலி வெளியிடப்பட்டுள்ளது.

சித்த மருத்துவத்தின் தோற்றம், பாரம்பரியம், இலங்கை வடக்கு மாகாணத்தில் இதன் அபிவிருத்தி மற்றும் சாதனைகளை உள்ளடக்கிய தாக "அகத்தியன் அவிழ்தம்" என்றதலைப்பில் இந்த ஆவண காணொலி வெளியிடப்பட்டுள்ளது. (ஐ-7)



# இலவச மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம்,ஏப் 2
யாழ்ப்பாணம் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவமுகாம் இளவாலை பிரதேச மருத்துவமனையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த இலவச மருத்துவ முகாமில் நூற்றுக்க ணக்கானோர் பங்குகொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

பொது மருத்துவர் பேரானந்தராஜாவோடு மேலும் பல மருத்துவர்களும் கலந்துகொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

தொற்றாநோய்களைக் கண்டறிதல், பற்சிகிச்சை, கண்பரிசோதனைகள் என்பன இடம்பெற்றன.

இதற்கான நிதி அனுசரனையை லண்டன்- இளவாலை மக்கள் ஒன்றியத்தினர் வழங்கியிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-21)

# பல்கலைக் கழகத்தின் கலை வாரம்



யாழ்ப்பாணம்,ஏப் 2
யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கலை வாரம் சிறப்பாக நடைபெற்று நிறைவடைந்துள்ளது . தமிழர் பாரம்பரியங்களை பறைசாற்றும் நோக்கில் இந்த விழா வருடாந்தம் நடத்தப்படுகிறது.

இதன் ஆரம்ப நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி பரமேஸ்வர ஆலய முன்றலில் கோலாகலமாக ஆரம்பமானது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் இ.விக்னேஸ்வரன் கலந்து கொண்டார்.

தொடர்ந்து ஒரு வார காலமாக கலை நிகழ்வுகள் ,பாரம்பரிய விளை யாட்டுக்கள் என்பன நடைபெற்று நிகழ்வுகள் நிறைவுக்கு வந்துள்ளன. இதில் மாணவர்கள் ,விரிவுரையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-7)



# யாழ்ப்பாண மாநகர முதல்வர் அதிகாரம் கிடைத்த பூனையா?

## அங்காடி வியாபாரிகள் கவலை

யாழ்ப்பாணம், ஏப். 2

**எமதுபிரதேசத்தில், எமது சமூகத்திலிருந்து நாங்கள் ஆசையாசையாய் தெரிவு செய்து யாழ்ப்பாண மாநகர சபைக்கு அனுப்பிவைத்த முதல்வர் இ.ஆனோல்ட், தற்போது தமக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறார். யாழ்ப்பாணப் பேருந்து நிலையத்தில் உள்ள வாழ்வாதார அங்காடிக்கடைகளை அகற்றமுதல் மாற்று இடங்கள் அமைத்துத்துத் தரப்படும் என்று கூறியிருந்த முதல்வர், தற்போது கடைகளை அகற்றவில்லை என்றால் மாநகர சபை அகற்றும் என்று கூறுகிறார். இது வேதனையாகவுள்ளது. அதிகாரத்துக்கு வந்துவிட்டால் பூனைகூடப் புலியாகும் என்றகதையாகிவிட்டது முதல்வருடைய நிலை.**

இவ்வாறு யாழ்ப்பாண பேருந்து நிலைய வியாபாரிகள் கவலை தெரிவித்தனர்.

அங்கு அமைந்துள்ள வியாபார நிலையங்களை ஏப்ரல் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அகற்றுமாறு மாநகரசபை முதல்வர் உத்தரவு பிறப்பித் துள்ளார்.


போக்குவரத்துத் துறை அமைச்சர் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது தமக்கு மாற்றிடங்கள் வழங்கப்படும் என்று கூறிய முதல்வர் தற்போது மாற்று இடம்தர முடியாது உங்கள் வாழ்வாதாரத்தை நீங்களே பாருங்கள் என்று தெரிவிக்கிறார்.

இது கவலையளிக்கிறது என்று அங்காடி வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்தைச்சூழ தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்தக் கடைகளுக்கான நில வாடகையை இ.போ. சவினர், மற்றும், யாழ்ப்பாண மாநகர சபையினர் கடந்த காலங்களில் பெற்றுள்ளனர். குறித்த அங்காடிக் கடைகள் உள்ள நிலம் பேருந்து நிலையத்துக்குச் சொந்தமானது என்பதால், அவர்களுக்கும், அந்தப் பகுதி மாநகர சபைக்குச் சொந்தமானது என்பதால் மாநகரசபைக்கும், வெவ்வேறு கட்டங்களில் வரி செலுத்தப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு ரூபா 200ஐ வரியாக அந்த வியாபாரிகள் செலுத்தியுள்ளனர்.

இந்த நிலை காரணமாக, 68 கடை உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களின் குடும்பங்கள் என 136 குடும்பங்கள் வாழ்வாதாரத்துக்கு மாற்றுவழியின்றித் துயரத்துக்குள் தள்ளப்படப் போகின்றன. பல வங்கிகளிலும் தனியார் நிறுவனங்களிலும் கடன்பெற்று நாளாந்தம் மீள்செலுத்தி வியாபாரத்தையும் குடும்பத்தையும் பிள்ளைகளின் படிப்பையும் சுமக்கும் எமக்கு, முதல்வரின் செயற்பாடு நடுவீதியில் கலைப்பதாக அமைந்துள்ளது.

எமது நிலையைக் கருத்தில் எடுத்து அரச அதிகாரிகள், தமிழ்த் தலைமைகள், அரசியல் தலைவர்கள் நல்லதொரு எதிர்காலத்துக்காக குரல்கொடுக்கு மாறு கோருகின்றோம் -என்றனர். (த-21)



## நாச்சிமார் ஆலய சுற்றுவீதி சீரமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப் 2

நல்லூர்த் தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராம எழுச்சித் திட்டத்தின் முதலாவது திட்டமான நாச்சிமார் ஆலய சுற்றுவீதி 2 மில்லியனில் சீரமைத்து நேற்றுமுன்தினம் உத்தியோக பூர்வமாக திறத்து வைக்கப்பட்டது.

தேர்தல் தொகுதி ஒன்றுக்கு 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நாடு முழுவதும் இடம்பெறும் குறித்த திட்டத்தின் கீழ் நல்லூர்ப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து முன்மொழியப்பட்ட திட்டங்களில் குறித்த வீதியும் ஒன்றாகும்.

ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இந்த வீதி முதற்கட்டமாக செப்பனிடப்பட்டது.

இவ்வாறு செப்பனிடப்பட்ட வீதியினை ஆலய வழிபாட்டுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சோ.சேனாதிராயா மற்றும் ஈ.சரவணபவன் , யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இ.ஆனோல்ட் , மாநகர ஆணையாளர் ஜெயசீலன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் திறந்து வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து பெயர்ப் பலகையும் திறந்து வைக்கப்பட்டதோடு குறித்த நிகழ்வில் ஆலய அறங்காவலர்கள் பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-7,105)



## உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.2

கொமர்ஷல் வங்கியின் பருத்தித்துறை கிளையின் சமூக பொறுப்பு நிதியத்தினூடாக வட இந்து ஆரம்ப பாடசாலைக்கு திறன் வகுப்பறை தொகுதி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் திரு. ரவீந்திரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் இ.சிவஞானம் மற்றும் கிளை முகாமையாளர் ஏ.ரி.அரவிந்தன், ஓய்வு பெற்ற பேராசிரியர் மா. நடராஜசுந்தரம், நகரசபைச் செயலர் பு ரமேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-173)

## பிரான்ஸ் தூதுவருடன் மாநகர முதல்வர் சந்திப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.2

இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டின் தூதுவர் எரிக் லவட்யுஸ் யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனோல்ட்டை சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்.மாநகர சபையில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் யாழ்.மாநகர அபிவிருத்தி மற்றும் தற்கால அரசியல் நிலமைகள் தொடர்பில் கலந்துரையாடினார். சுமார் ஒரு மணிநேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில், அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த பிரான்ஸ் அரசு பல உதவித்திட்டங்களை வழங்குவதாகவும் தூதுவர் உறுதியளித்தார். (க-106)





## சிறுவர் சந்தையும் கண்காட்சியும்

வடமராட்சி.ஏப்.2

வடமராட்சி கிழக்கு புனித மரியாள் முன்பள்ளிச் சிறார்களின் சிறுவர் சந்தையும், கண்காட்சியும் மரியாள் முன்பள்ளி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் கண்காட்சி கூடத்தை உடுத்துறை இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் சி.ஜெயேந்திரன் திறந்து வைத்தார். சிறுவர் சந்தையை உடுத்துறை புனித மரியாள் குருமுதல்வர் ரி.ஜோன்சன் திறந்து வைத்தார்.

சிறுவர்களின் திறன் விருத்தியை மேம்படுத்தும் வகையில் இவ்வாறான ஆக்க திறன் கண்காட்சிகள் மற்றும் சந்தை என்பன நடத்தப்பட்டு வருகின்றன. (ஐ-160)

## இம்முறை கூடுதலாக பனைவெல்ல உற்பத்தி

யாழ்ப்பாணம், ஏப்.2

பனைவெல்ல உற்பத்தியில் இம்முறை கூடுதலாக ஈடுபடுவதற்கு பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தயாராகி வருகின்றன.

கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டில் கூடுதலாக பனைவெல்ல உற்பத்தியில் சங்கங்கள் ஈடுபடவேண்டும் என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் கேட்டுள்ளது.

திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு இணங்க சங்கங்கள் பனைவெல்ல உற்பத்தியில் ஈடுபட தயாராகி வருவதாக மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் வ.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

சாவகச்சேரி, தெல்லிப்பழை, பண்டத்தரிப்பு ஆகிய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பனை வெல்ல உற்பத்தியை ஆரம்பித்துள்ளன.

கடந்த ஆண்டு போகத்தின்போது உற்பத்தி செய்யப்பட்ட இந்த பனை வெல்லத்துக்குப் கிராக்கியும், பற்றாக்குறையும் ஏற்பட்டன. அதிகமான பனை வெல்லங்கள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. அத்துடன் வடக்கே வரும் சுற்றுலாப் பயணிகளும் கூடுதலான பனை வெல்லத்தை விரும்பி பெற்றுச் செல்கின்றனர். (ஐ-17)

## எரிகாயங்களுடன் இருவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி, ஏப் 2

மண்ணெண்ணெய் விளக்கு பற்றி எரிந்ததில் எரிகாயங்களுக்கு இலக்கான இரு வர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவங்கள் மட்டுவில் வடக்கு மற்றும் நுணாவில் மேற்கு ஆகிய இடங்களில் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளன.

எரிகாயங்களுக்கு இலக்கான மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி தெய்வேந்திரம் (வயது -60 ) ,நுணாவில் மேற்கைச் சேர்ந்த தர்மராஜா சுசீலா (வயது -35) ஆகியோர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுமேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (ஐ-9)

## அடிக்கல் நடும் நிகழ்வு

பளை ஏப்.2

பளை மத்திய கல்லூரியில் 13 ஆண்டு கட்டாயக் கல்வித் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்படவுள்ள வகுப்பறைத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.



அயலில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழ் கொழும்பு கல்வி அமைச்சினால் 55 இலட்சம் ரூபா செலவில் இக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. அதிபர் க.உதயகுமாரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்லூரி மாணவர்கள் புதிய வகுப்பறைத் தொகுதிக்கான அடிக்கல்லை நட்டு வைத்தனர்.

இந்த வருடம் வடமாகாணத்தில் 13 ஆண்டு கட்டாயக் கல்வித் திட்டத்தின் கீழ் புதிய வகுப்புகள் பளை மத்திய கல்லூரியில் ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (க-9)

## புதுவருட தேசிய கொண்டாட்டம் யாழ்.துரையப்பா மைதானத்தில்

### எதிர்வரும் 9இல் நடக்கவுள்ளது

யாழ்ப்பாணம்; ஏப். 2

2019 ஆம் ஆண்டு சித்திரை மாதம் மலரவிருக்கும் தமிழ் - சிங்களப் புத்தாண்டுக் கொண்டாட்டம் தேசிய விழாவாக் யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. இந்தப் புத்தாண்டுக் கொண் டாட்டத்தைத் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு, தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட செயலகமும் இணைந்து நடத்தத் தீர்மானித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விழாவில் பல்வேறு விளையாட்டுக்கள் மற்றும் கலாசார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. விளையாட்டுக்களில் சில திறந்த போட்டிகள் மாகாண ரீதியாக நடத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

# செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

சாவகச்சேரி,ஏப் .2
அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபையின் சாவகச்சேரி தூய தோமஸ் முன்பள்ளிச் சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.
திருச்சபையின் சாவகச்சேரி போதகர் அருட்திரு பீ.ஜே.சூரியகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக திருச்சபையின் முன்னாள் தலைவர் அருட்திரு ஜீனோ புனிதராஜா, சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் மேர்க் கன்டைல் பாதுகாப்பு சேவையின் வீ.சுகுமார் திருச்சபையின் வடபிராந்திய இணைப்பாளர் ரீ.யூத ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (க-9)

★★★★

கொடிகாமம்,ஏப்.2
அற்புத அன்னை முன்பள்ளியின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அற்புத அன்னை சனசமூக நிலைய மைதானத்தில் முன்பள்ளி ஆசிரியர் திருமதி து.ஜனனகுமாரி தலைமையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சீபன் பாஸ்கர் லேணர்ஸ் அதிபர் கு.டசீபன், சிறப்பு விருந்தினராக ஜே/294 நாவற்குழி மேற்கு கிராம அலுவலர் சிவகுமாரசர்மா.ரனிஸ் பொருளாதார அபிவிருத்தி அலுவலர் எஸ்.துஸ்யந்தன் நாவற்குழி குடும்ப முன்பள்ளிகளின் இணைப்பாளர் ர.தர்மிலா கனடா இராமன் கல்வி அறக்கட்டளை ஞா.மேல்ராஜ் அற்புத அன்னை சனசமூக நிலைய தலைவர் கி.வேலானந்தன் செயலர் ச.நிசாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-159)



## மாணவர் நாடாளுமன்றத் தேர்தல்

கொடிகாமம், ஏப் 2
யாழ்ப்பாணம் மந்துவில் சிறிபாரதி வித்தியாலயத்தின் மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.
அதிபரும் மாணவர் நாடாளுமன்ற செயலாளர் நாயகமுமான திருமதி ஆ.இராஜரட்ணம் தலைமையில் தேர்தல் இடம்பெற்றது.
60 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். 68 வாக்காளர்கள் வாக்களித்தனர். இதில் 64 வாக்குகள் செல்லுபடியான வாக்குகள், 4 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. தேர்தல் முடிவுகளின்படி அதிகளவு வாக்குகளைப் பெற்ற 45 மாணவர்கள் மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-159)

# மணநாளில் ஈருருளியில் வலம் வந்த மணமக்கள்

## இணையத்தளங்களில் பிரபலம்

யாழ்ப்பாணம், ஏப்.2
யாழ்ப்பாணத்தில் வலிகாமம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற திருமண நிகழ்வு ஒன்றில் மணமக்கள் பழைய ஈருருளி ஒன்றில் வலம் வருவது போன்ற நிகழ்வு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.



அந்த நிகழ்வு நேற்று இணையத்தளங்களில் பரவலாகப் பேசப்பட்டிருந்தது.
யாழ்ப்பாணத்தில் தற்போது இடம்பெறும் திருமண நிகழ்வுகளில் பல சுவாரஸ்ய சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. பழைமையை நினைவுபடுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் எங்கோ ஒரு மூலையில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. மாட்டுவண்டியில் மணமக்களை அழைத்து வருதல், குதிரை வண்டியில் அழைத்து வருதல், தப்போது மணமக்கள் ஈருருளியில் செல்லும் நிகழ்வும் இடம்பெற்றுள்ளது. (ஐ-21)

# வடிகால்வாய் துப்புரவு

யாழ்ப்பாணம்,ஏப்.2
குருநகர் பிரதேசத்தில் நீண்ட காலமாக துப்புரவு செய்யப்படாமல் இருந்த இரண்டு வடிகால்வாய்களை துப்புரவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
வடிகால் வாய்களில் தேங்கிய கழிவுகள் யாவும் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.
வடிகால் வாய்களில் தேங்கிய கழிவினால் கழிவு தண்ணீர் ஓடுவதும் தடைப்பட்டு இருந்தது. மாநகர சிறப்பு கழிவகற்றும் பிரிவினரால் குறித்த கால்வாய்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. அகற்றப்படும் கழிவுகள் யாவும் உடனடியாக அங்கிருந்து வாகனம் மூலம் அகற்றப்பட்டு வருகின்றன. (க-17)

# நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப் 2
மறைந்த கந்தையா நீலகண்டனின் நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறும்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறை தலைவர் திருமதி சுகந்தினி சிறி முரளிதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)

# கருத்துப் பகிர்வரங்கம்



சாவகச்சேரி,ஏப்.2
தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பொறிமுறைகள் தொடர்பான ஆலோசனைகள் கருத்துப் பகிர்வரங்கம் உள்ளிட்ட கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை சாவகச்சேரிப் பிரதேச சபையின் தலைமையக புதிய மண்டபத்தில் நடைபெற்றன.
சாவகச்சேரிப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் தவிசாளர் க. வாமதேவன் தலைமையில் நடைபெற்ற கருத்தமர்வுக்கு பிரதேசம் சார் புலமையாளர்கள், புத்திஜீவிகள், துறைசார் வல்லுநர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் போன்றோர் வருகை தந்து அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களைப் பகிர்ந்தனர். (க-131, 9)

# தேசிய ஆக்கத்திறன் போட்டியில் யாழ்ப்பாணம் இரண்டாம் இடம்




யாழ்ப்பாணம், ஏப் 2
தேசிய மட்ட ஆக்கத்திறன் போட்டியில் இரண்டாவது சிறந்த ஆக்கத்திறனுடைய மாவட்ட விருதினை யாழ்ப்பாண மாவட்டம் பெற்றுள்ளது.
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் வருடாந்தம் இந்த நிகழ்வு நடத்தப்படுகின்றது.
இந் நிகழ்வுகள் அம்பாந்தோட்டை வீரவில பிரதேசத்தில் கடந்த 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து ஐந்து நாள்கள் நடைபெற்றன.
இளையோரிடையே நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தி அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக இருக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.
மேற்படி போட்டியில் முதலாம் இடத்தினை குருநாகல் மாவட்டம் பெற்றுக் கொண்டது. (ஐ-422)

# கம்பத்துடன் மோதி மகிழுந்து விபத்து



சாவகச்சேரி, ஏப்.2
மகிழுந்து ஒன்று கட்டுப்பாட்டை இழந்ததில் வீதியோரம் இருந்த மின் கம்பத்துடன் மோதியதில் மின் கம்பம் வீழ்ந்து விபத்துக் குள்ளானது.
இந்தச் சம்பவம் சாவகச்சேரி அஞ்சலக சந்தியில் கடந்த சனிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றது.
கொழும்பிலிருந்து வந்த மகிழுந்தே விபத்து க்குள்ளானது. வாகனத்தில் வந்தவர்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.
இலங்கை மின்சார சபையினர் துரிதமாகச் செயற்பட்டு மின்கம்பத்தினை மாற்றினர். மகிழுந்து சாவகச்சேரி பொலிஸாரால் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# பிளாஸ்ரிக் குப்பைகள் அகற்றல்



யாழ்ப்பாணம்,ஏப் 2
பருத்தித்துறை சுப்பர் மடம் கடற்கரையில் காணப்பட்ட, பிளாஸ்ரிக் குப்பைகள் துப்புரவுப் பணிகளின் மூலம் அகற்றப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணம் வடமராட்சி பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்கரைப் பகுதி, மயானப்பகுதிகளில் நீண்டகாலமாக சூழலுக்கு ஒவ்வாத வகையில் பிளாஸ்ரிக் குப்பைகள் காணப்பட்டன. யாழ்ப்பாணம் பிளாஸ்ரிக் சீறோ போரம் குழுவின் மூலம் அழைப்பு விடுக்கப்பட்ட இந்த துப்புரவுப் பணிகளில், பருத்தித்துறை பிரதேசசபை, பருத்தித்துறை நகர சபை, சுப்பர்மடம் கடற்றொழிலாளர் சங்கம், இன்பர்சிட்டி கடற்றொழிலாளர் சங்கம் ஆகியன ஒத்துழைப்பை வழங்கியிருந்தன.
இதேவேளை இங்கு அகற்றப்பட்ட குப்பைகள் தரம்பிரிக்கப்பட்டு, பருத்தித்துறை பிரதேசசபை மற்றும் நகரசபைகளின் கழிவகற்றல் பிரிவினரின் உதவியுடன் அகற்றப்பட்டன. (ஐ)

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

2018ஆம் ஆண்டு ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதன்படி மாணவர்களின் பெறுபேறுகள் பாடசாலைகளால் வெளியிடப் பட்டுள்ளன.

**வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை**
**ஆங்கில மொழி மூலம்**
தி.அபிராமி - 9ஏ,ஶ்ரீ.ஆரணி - 9ஏ,வி.கேதாகினி - 9ஏ,ஆ.தமிழிசை - 9ஏ,த.தமிழ்மதி - 9ஏ,க.திவ்யா - 9ஏ,அ.துசாயினி - 9ஏ,ப.துஷானி - 9ஏ, அ.வெரோணிக்கா கம்பெலின் - 9ஏ,செ.அகனீதா - 9ஏ, அ.அனோசிகா- 9ஏ,சூ.ஆர்த்திகா- 9ஏ,ர.கீர்த்திகா- 9ஏ,உ.நிதுஷா- 9ஏ,த.பகீரதி - 9ஏ,ஶ்ரீ.ராகவி - 9ஏ,க.ஷாரங்கி - 9ஏ,ச.தரணிகா - 9ஏ,
தி.ஆர்த்திகா - 8ஏபி,சு.கார்முகி -8ஏபி,தே.கோபிகா -8ஏபி,பி.லக்சிகா-8ஏபி,ம.ரம்யா -8ஏபி,சூ.அங்கனி -8ஏபி,சி.அஸ்வினி -8ஏபி,ரா.யதுஷா -8ஏபி,ஜெ.ஜவனிகா -8ஏபி,
த.லோஜனா -8ஏபி,இ.தாரணி -8ஏபி,ஆ.தெய்விகா -8ஏபி,ர.அனிஷ்யா - 8ஏசி,இ.பாமினா - 8ஏசி,இ.இலக்கியா - 8ஏசி,
ந.கர்ணிகா - 8ஏசி,நி.மேரி டனியெலா - 8ஏசி,உ.மிதுலா - 8ஏசி,சி.சிந்தூரி - 7ஏ,கோ.சிவதீபிகா - 7ஏ,ப.சுவேதிகா - 7ஏ,ர.கானதி - 7ஏ, சௌ.ரேசிகா - 7ஏ,அ.ஆரபி - 7ஏ,வி.மதுரா - 7ஏ,மோ.சாம்பவி - 7ஏ,சு.சத்தியா - 7ஏ,ப.சியானுகா - 7ஏ.

**தமிழ் மொழி மூலம்**
தே.ஆத்மிகா - 9ஏ,சி.தனுசா - 9ஏ,ஜெ.மேரி சினேகா - 9ஏ,க.சங்கவி - 9ஏ,ஷ.தபேசன் - 9ஏ,லோ.பிரியங்கா - 9ஏ,
பி.லதிஸ்ரிக்கா - 9ஏ,சி.மருதசகி - 9ஏ,சி.சிவனஜா - 9ஏ,லோ.வைஷ்ணவி - 9ஏ,ந.வதனி - 9ஏ,வி.வினோஷாயினி - 9ஏ,ம.கலைநிலா - 9ஏ,கா.கார்த்திகா - 9ஏ,த.தனுஜா - 9ஏ,நா.சுவஸ்திகா - 9ஏ,ஜோ.தரணிகா - 9ஏ,கு.தயாளரூபினி - 9ஏ,மு.வேணுஷா - 9ஏ,ர.பிரணவி - 9ஏ,சு.கௌசிகா - 9ஏ,ப.கஜந்தா - 9ஏ,ஶ்ரீ.கற்பகா - 9ஏ,வி.நிரோஜா - 9ஏ,சு.நிதுஷா - 9ஏ,சி.பார்க்கவி- 9ஏ,செ.றொஷ்னி - 9ஏ,த.சங்கவி - 9ஏ,ப.செந்தூரி - 9ஏ,ப.தனுஷிகா - 9ஏ,சி.தர்சனா - 9ஏ,ஶ்ரீ.வித்தியாசினி - 9ஏ,இ.ஆரணி -8ஏபி,ஜெ.ஜெயசலோமியா -8ஏபி,அ.மகிழினி -8ஏபி,இ.மேனகை- 8ஏபி,ஜெ.நிக்சலா -8ஏபி,பு.சிசானுகா -8ஏபி,ம.வைஷ்ணவி -8ஏபி,மோ.விதுஸ்சனா -8ஏபி,க.அனுஷியா -8ஏபி,சி.ஆரணி -8ஏபி,ச.பானுகா -8ஏபி,வி.குருஷிகா -8ஏபி,ந.ஜனனி -8ஏபி,தி.லக்சிகா -8ஏபி,பா.மோகனா -8ஏபி,உ.பிருத்திகா -8ஏபி,சி.பிரவீனா -8ஏபி,கு.தயாளநீதினி -8ஏபி,த.வைஷ்ணவி -8ஏபி,ச.குஷாலினி -8ஏபி,மு.மாதுர்ஜா -8ஏபி,கி.நவப்பிரியா -8ஏபி,அ.பிரியதர்சினி -8ஏபி,பா.சங்கவி -8ஏபி,ச.சுருதிகா -8ஏபி,ச.விதுநிஷா -8ஏபி,க.எழிலரசி - 8ஏசி,க.காருண்ஜா -8ஏசி,சி.தர்சிகா - 8ஏசி,ச.கயூதினி-8ஏசி,
ர.வித்தியா - 8ஏஎஸ் த.அபிநஜா - 7ஏ,பா.நிலக்சனா - 7ஏ,க.சாருதா- 7ஏ,ம.சோபியா - 7ஏ,சு.தனுப்பிரியா - 7ஏ,ஜெ.திலக்சனா - 7ஏ,பே.துஷாலினி - 7ஏ,சா.கபீர்த்தனா - 7ஏ,ச.பானுஜா - 7ஏ,
வி.ஜனனிகா - 7ஏ,யூ.யூடினி - 7ஏ,த.மேரி ஜெனிபர் - 7ஏ, சி.பவசாயினி - 7ஏ,இ.சாயினி - 7ஏ,கே.சுரபி - 7ஏ,ம.கயல்விழி - 7ஏ, வ.பிரணவி - 7ஏ,த.தக்சாயினி - 7ஏ,ப.கோபிகா - 7ஏ,அ.கேசினி - 7ஏ, ச.மதுஷா- 7ஏ,சி.சங்கவி - 7ஏ,அ.சுவிஜா - 7ஏ,பு.விதுர்ஷா - 7ஏ,

**அளவெட்டி அருணோதயாக் கல்லூரி**
சி சஜீவன் - 9ஏ, சு.திசாந்-9ஏ, ஆ.மதுசன்- 9ஏ, உ.யதுசா-9ஏ, அ.அனுசாந்தன் - 8ஏபி, உ.ரஜனா - 8ஏபி, யோ.பானுப்பிரியா- 7ஏ2பி, ப.திலக்சனா - 7ஏபிசி, மோ.மருண்சியா -7ஏபிசி, பி.சிறிஜெனனி- 6ஏ3பி, பா.தனோஜன்- 6ஏ3பி, அ.விதுசன்- 6ஏ2பிசி, த.வினிதன்- 6ஏபிஎஸ், பி.துவாரகன்- 5ஏ3பிஎஸ், த.சரணியா- 5ஏ2பி2சி, ஜெ.ஜெனஸ்ரிகா- 5ஏ3பிசி, தே.அபர்ணன்- 4ஏ4பிசி, ஜெ.மோனிக்காடிஜித்- 4ஏ3பி2சி, ச.கம்சினி- 4ஏ2பி3சி, ஜெ.ரஜிதரன்- 3ஏ4பி2சி

**சென்.பற்றிக்ஸ் கல்லூரி**
ரி. ரேணுஜன்- 9ஏ, அ. சௌமியன்- 9ஏ(ஆங்கிலமொழி மூலம்), சி. கிர்ஷிகன்- 8ஏபி, ரா.கிறிஸ்துராஜா- 8ஏபி, டி. நிதர்சன்- 8ஏபி (ஆங்கிலமொழிமூலம்) ஆர். பிரான்சிஸ் குரூஸ்- 8ஏசி, நா.மதுசன்- 7ஏ2பி (ஆங்கிலமொழி மூலம்) த.பிறிதேவ்- 7ஏ2பி, கிங்ஸ்ரன் ஜெரி- 7ஏ2பி, ஆ.நிலோஜன்- 6ஏ2பிசி, ஜீ.ஹரிஸ்ராஜ்- 6ஏ2பிஎஸ் (ஆங்கிலமொழிமூலம்), கொ.தனேஸ் அன்ரீவ்ஸ்- 6ஏ2பிஎஸ் (ஆங்கிலமொழி மூலம்), சி.றெமோ- 5ஏ3பிசி, பீ.சுரேஸ்குமார் பிரகாஸ்- 5ஏ3பிசி, சு.றொனிஸ்ரன்- 5ஏ2பி2சி, சி.கவிசாந்தன்- 5ஏபி2சிஎஸ், ஜெ. ஜெரோஜ் அனிஸ்ரன்- 5ஏபி2சிஎஸ் (ஆங்கிலமொழி மூலம்) ஜீ.டேவிற் பெலிக்ஸ் -5ஏ2பிசிஎஸ், பா.ரகுதாஸ்- 4ஏ5பி, அ. ஜோயல் நிதுசன்- 4ஏ4பிசி, ப.சுவர்ணன்- 4ஏ4பிஎஸ், அ.ஆனந்த் ஜெரோசன்- 4ஏ3பி2சி, நி.நிருஜனன்- 4ஏ3பிசிஎஸ், செ. புல்ஜியோ -4ஏ2பி3சி, தே.ஜெசுதன்- 4ஏ2பி2சிஎஸ்.

**சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி**
த. தனுசன் 9ஏ,செ. மதுசுதன்-7ஏ 2பி,சி. டனுசன்-7ஏபிசி,ஆ. வாகினி -7ஏ2சி (ஆங்கிலம்), சு. தனுசியன் - 6ஏ3பி,கெ. கஜபிரியா - 6ஏ2பிசி,பு. டிலுஸ்ரா6ஏபிசி, பா. விஸ்னுகரசர்மா - 5ஏ4பி,வி. புறுசோத்மன் -5ஏ3பிசி,ச.சாருசஜன்-5ஏ2பி2சி,சு. சாருமதி-4ஏ3பி2சி (ஆங்கிலம்),தி. திகிறித்திகா -4ஏ2பி3சி,சி.தர்சினி-4ஏபி4சி, (ஆங்கிலம்),அ. விலக்சன் -4ஏ2பி2எஸ்,ச. சோபனா- 3ஏ3பி3சி,
நி. ஜெனனி-3ஏ3பி3சி,ச. காயத்திரி-3ஏ3பிசி 2எஸ்,சி.கிஷாலினி - 3ஏபி3சிஎஸ், பா.நிவேஷ் - 3ஏ2பி4சி,ப. பிருந்தன் - 3ஏ4சி 2எஸ்.

**குடத்தனை கரையூர் அ.மி.த.க.பாடசாலை**
இ.நிக்சலா - ஏ2பி3சிஎஸ், அ.விதுஷன்- 3பி3சி2எஸ், அ.பிபிதாஸ்- 2பி3சி2எஸ்.

**எழுதுமட்டுவாழ் வடக்கு அ.த.க பாடசாலை**
சத்தியமூர்த்தி சந்தோஷ் - ஏ 4பி 2 சி எஸ்

**கொடிகாமம் கச்சாய் மகா வித்தியாலயம்**
பு.பவிதன்- 8ஏபி, இ.பிரணவி- 8ஏசி, தெ.சரண்யா- 4ஏ2பிசிஎஸ், க.டயானி- 3ஏபி3சிஎஸ், நே.மிதுனா- 2ஏ4பி2சிஎஸ், வி.விதுராஜ்- 2ஏ2பி4சிஎஸ், அ.அனுசியா- 2ஏ2பி2சி2எஸ், க.கயாளினி- 2ஏ2பி3சிஎஸ், பொ.சசீனா- 2ஏபி5சிஎஸ், இ.நிதர்சனா- 2ஏபி3சி2எஸ்,

**கிளிநொச்சி இந்துக் கல்லூரி**
றேமன் நேசரட்ணம் சயணியா- 9ஏ, த.ரோகினி- 7ஏ2பி, சா.டனுசா- 6ஏ2பிசி, ர.சானுஜன்- 4ஏ4பிசி, வி.அஸ்வினி- 4ஏ5பி.

**நெல்லியடி மத்திய கல்லூரி**
ர.சங்கவி- 9ஏ, ச.மதுசா- 9ஏ (ஆங்கில மொழி மூலம்), சி.லக்சன்- 8ஏபி, சொ.யதுசனா- 8ஏபி, கொ.இஷானி-8ஏபி, க.தமிழினி- 8ஏபி, ஆ.ஆர்த்தி- 8ஏபி (ஆங்கில மொழி மூலம்), கு.அனிதா- 8ஏபி (ஆங்கில மொழி மூலம்), இ.திவிராஜ்- 8ஏசி, அ.வர்சன்- 8ஏசி (ஆங்கிலமொழி மூலம்), ர.அபிரா- 7ஏ2பி, வி.ஜதுசாயினி-7ஏ2பி, ச.நிவசிகா- 7ஏ2பி (ஆங்கிலமொழி மூலம்), ச.சாரங்கா- 7ஏபிசி, க.தனுஷ்கா- 6ஏ3பி, ஜெ.சதுர்ஜன்- 6ஏ2பிசி, க.சதுர்ஜா -6ஏ2பிசி, ம.கீர்த்திகா- 5ஏ4பி, க.டிலக்சனா- 5ஏ3பிசி, கு.நிவேகா- 5ஏ3பிசி, உ.சாளினி- 5ஏ2பி2சி, க.சிவரூபன்- 5ஏபி3சி, ர.விதுசா-5ஏ2பிசிஎஸ், பா.புவின்திரன்- 4ஏ4பிசி, கு. சங்கீதா-4ஏ3பி2சி (ஆங்கில மொழி மூலம்), பி.திவ்யா-4ஏ2பி3சி, பி.பிரணவி- 4ஏபி4சி, சு.நிலானி- 4ஏ2பி2சிஎஸ் (ஆங்கிலமொழி மூலம்).

**மந்துவில் ஶ்ரீபாரதி வித்தியாலயம்**
ப.சுகிர்தா- 6ஏபிசிஎஸ், ப.திலக்ஷி, 3ஏ4பிசிஎஸ், சு.சிவாஜினி- 3ஏ2பி3சிஎஸ், சி.அனுசன்- 2பி3சி3எஸ், ம.தர்மினி-பி2சி5சி, சி.ஜீவிதா- 5சி3எஸ், க.சஞ்சீவன்-2சி6எஸ்.

**அளவெட்டி அருணோதயாக் கல்லூரி**
சி.சஜீவன்- 9ஏ, சு.திசாந்- 9ஏ, ஆ.மதுசன்- 9ஏ, உ.யதுசா- 9ஏ, அ.அனுசாந்தன்- 8ஏபி, உ.ரஜனா- 8ஏபி, யோ.பானுப்பிரியா- 7ஏ2பி, ப.திலக்சனா- 7ஏபிசி, மோ.மருண்சியா- 7ஏபிசி, பி.சிஶ்ரீஜெனனி- 6ஏ3பி, பா.தனோஜன்- 6ஏ3பி, அ.விதுசன்- 6ஏ2பிசி, த.வினிதன்- 6ஏபிசிஎக், பி.துவாரகன்- 5ஏ3பிஎஸ், த.சரணியா- 5ஏ2பி2சி, ஜெ.ஜெனஸ்ரிகா- 5ஏ3பிசி, தே.அபர்ணன்- 4ஏ4பிசி, ஜெ.மோனிக்காடிஜித்- 4ஏ3பி2சி, ச.கம்சினி- 4ஏ2பி3சி, ஜெ.ரஜிதரன்- 3ஏ4பி2சி, பு.சங்கீத்தா- 3ஏ5பிசி, நி.மதுசா- 3ஏ4பிசிஎஸ், சு.கீர்த்திகா- 3ஏ4பிசிஎஸ், ச.ஜஸ்மினி- 3ஏ2பி3சிஎஸ்.

**வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி**
க.ஹர்சிகா- 8ஏசி, சி.ஹஜீபனா- 6ஏ2பிசி, பு.அபர்ணா- 6ஏ2பிசி, சி.பிரவின்ஜா- 3ஏ5பிசி, ய.சனோயினி- 3ஏ3பி2சிஎஸ், ஜெ.பரிதி- 3ஏ2பி3சிஎஸ், ப.அச்சுதன்- 3ஏ2பிசிஎஸ், ஐ.அபிசாயினி- 2ஏ2பிசி4எஸ், சி.தேனுஜா- 2ஏ2சி3எஸ், யோ.மீனலோஜினி- ஏபி4சி3எக், த.அனுயா- ஏபி2சி3எஸ், பி.சஜதீபன்- ஏ4சி2எஸ், ம.தர்மிலன்- ஏ2சி4எஸ், க.கோபிகா- 3பி2சி2எஸ், ஞா.ஏஞ்சலா- 2பி5சி2எஸ், ம.சாரங்கன்- 2பி2சி4எஸ், சி.சாரபன்- 4சி3எஸ், ஜெ.அனோஜன்- 3சி4எஸ்.

**சாவகச்சேரி மகளிர் கல்லூரி**
ந.சரண்யா- 9ஏ(ஆங்கிலமொழி மூலம்), சி.ஆதிரை- 7ஏ2பி (ஆங்கிலமொழி மூலம்), அ.மேனகா- 6ஏ3பி, நா.கிருஷிகா- 5ஏ3பிசி, சி.கௌசிகா- 5ஏபி3சி, பி.சுலக்சனா- 4ஏபி3சிஎஸ், வா.லக்சிகா- 4ஏ5சி, மு.நிவேக்கா- 4ஏ3சிஎஸ், சூ.சோபிதா- 3ஏ6பி, கி.மேரிசெசில்டா- 3ஏ3பிசி2எஸ், ர.சஹ்னாஸ் பேகம்- 2ஏ4பி2சிஎஸ், த.சாதனா- 2ஏ3பி2சிஎஸ், நா.தர்சனா- 2ஏ2பி2சி2எஸ், ஜெ.சிந்துஜா- 2ஏ2பி2சிஎஸ், வி.ஜீவிகா- 2ஏபி2சி4எஸ், து.துளசி- ஏ3பி2சி3எஸ், க.வினிஸ்ரா- ஏ3பிசி3எஸ், து.இலக்சிகா- ஏ2பி3சி2எஸ், ஜெ.மதுசாளினி- ஏ2பி2சி2எஸ், நா.அஜானா- ஏபி4சி3எஸ், செ.கீர்த்தனா- ஏபி5சிஎஸ், சு.பிறன்சிகா- ஏபி2சி3எஸ், யோ.பகீரதி- ஏபிசி4எஸ், த.சாந்தரூபினி- ஏ3சி4எஸ், சு.அஸ்விதா- ஏ2சி2எஸ்.

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**
ஜெ.நிக்சன்- 9ஏ, ரீ.பிருந்தன்- 8ஏசி, சி.லோஜன்- 7ஏபிசி, சி.சிந்துஜன்- 7ஏசிஎஸ், சி.சினோஜா- 5ஏ3பிஎஸ், வி.விதுஜா- 5ஏ2சி2எஸ், ஜெ.அருள்பிரகாஸ்- 4ஏ4பிசி, செ.பிரகாசினி- 4ஏ4பிஎஸ், த.சிவதர்சினி- 4ஏ3பிசி, ப.லிவின்சிகா- 4ஏ2பி2சிஎஸ், த.டிசானி- 4ஏபி2சி2எஸ், ர.பிதுர்சனா- 3ஏ3பிசி2எஸ், கு.கென்சிகா- 3ஏ3சி3எஸ், கு.சிவதர்சன்- 3ஏ4பிசி.

**வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி**
பா.பபசாந்- 9ஏ(ஆங்கிலமொழி மூலம்), சி.விதுசன்- 7ஏ2பி (ஆங்கிலமொழி மூலம்) கு.சோபனா- 4ஏ3பி2சி, வி.மிதுசன்- 3ஏ3பி2சிஎஸ், வே.கஜானி- 2ஏ3பி4சி, து.புவிதா- 5ஏபி2சி, யோ.யோகநேசன்- 2ஏ4பி3சி, ந.புருசோத்தமன்- 2ஏ3பி3சிஎஸ், ம.மிதிலா - 2ஏ3பி2சி 2எஸ், செ.பவித்திரா- 2ஏ2பி4சிஎஸ், கு.வேணுகா- 2ஏ2பி3சி2எஸ், ம.திலக்சி- 2ஏ2பி2சி3எஸ்.

*அடிப்படை வசதிகள் அற்ற*

## அ.த.க.பாடசாலையில் 10 இல் 8 பேர் சித்தி

அடிப்படை வசதிகள் அற்ற கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய 10 மாணவர்களில் 8 பேர் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர் என்று பாடசாலை சமூகத்தினர் தெரிவித்தனர்.

பாடசாலையில் வகுப்பறை வசதிகள், விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் போன்றவை இல்லாத நிலையில் மாணவர்களின் சுயமுயற்சியும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையினாலும் பாடசாலை வரலாற்றில் முதன்முறையாக அதிகளவு மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று சாதனை படைத்துள்ளனர் என்று அதிபர் ஆ.தங்கவேலு தெரிவித்தார்.

பரீட்சைப் பெறுபேறுகளின்படி ரா.ராகவன் - 7 ஏ பிசி, மா.மகிழினி -5 ஏ பி 3 சி,பா.சிந்துஜா - 4 ஏ பி 3 சி, சோ.அபிசன் - 2 ஏ 5பி சிஎஸ், ந.ஜெஸ்னிகா - ஏ3 பி4சிஎஸ், க.நிவேதன் - 2பி 4சி 3 எஸ், பு.சிந்துஷா - பி 2 சீ 4 எஸ், சி.சுலோசனை -2 பி 2 சி 2 எஸ் ஆகியோர் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். (ஐ-9)

*போரின் வடுக்களைச் சுமந்த*

## மாற்றுத் திறனாளி மாணவி சாதனை

முல்லைத்தீவு,ஏப் 2

போரின் வடுக்களைச் சுமத்த மாற்றுத் திறனாளி மாணவி க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சாதனை படைத்துள்ளார்.



மல்லாவி மத்திய கல்லூரியில் கல்வி கற்ற பாலமோட்டை கிழவிகுளம் பகுதியைச் சேர்ந்த செல்வி ச.பிரியங்கா என்ற மாணவியே 6ஏ பி சி சித்திகளைப் பெற்றுள்ளார்.

வன்னி இறுதிப் போரின் போது முள்ளிவாய்க்கால் வரை சென்று எறிகணை வீச்சினால் தனது வலது காலினை முழுமையாகவும்,தாயார் இடது கையை முழுமையாக இழந்தும் போரின் வடுக்களோடும் குடும்ப வறுமையோடும் வாழ்ந்து வந்துள்ளனர்.

இந்நிலையில் மனவலிமையோடு கல்வி கற்று வன்னி மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ளார் பிரியங்கா.

(ஐ-222)

## மக்களுக்கு சேவைசெய்வதே இலக்கு

*மாணவி ஜானுசா தெரிவிப்பு*



கடந்தகால இறுதி போரின்போது சரியான முறையில் மருத்துவ சேவைகள் இடம்பெறவில்லை. எனவே எனது தந்தை உட்பட, அதிகமான மக்கள் உயிரிழந்தனர். இனியும் நாம் உயிர் இழப்புக்களைச் சந்திக்கக்கூடாது. மருத்துவராவதே இலக்கு இவ்வாறு வித்தியானந்த கல்லூரி மாணவி ஜானுசா தெரிவித்தார். இம்முறை க.பொ.த சாதாரணதர பரீட்சையில் 9 ஏ சித்தி பெற்றமை தொடர்பில் அவரிடம் கருத்துக்கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனக்கு 9ஏ சித்திபெற்றதில் மிகவும் சந்தோசமாகவுள்ளது. எமது சமூகத்தின் வலிகளை நான் நன்கு அறிவேன். கடந்தகால போரின்போது சரியான மருத்துவ சேவைகளைப் பெறமுடியாத நிலையில்தான் நிறைய மக்களை நாம் இழந்திருக்கின்றோம்.

என்னுடைய அப்பாவையும் நான் இழந்திருக்கின்றேன். அந்த இழப்புகளை இனியும் நாம் சந்திக்கக்கூடாது. எனவே நான் ஒரு சிறந்த மருத்துவராக வந்து எமது முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு மருத்துவ சேவை செய்வதற்கு ஆசைப்படுகின்றேன். அதற்காக நான் மேலும் என்னுடைய படிப்பை சிறந்த முறையில் கொண்டுசெல்ல முயற்சிப்பேன். - என்றார்.(ஐ-246)

# வெளி இடத்துக்கு மண் விற்பனை பிரதேச மக்கள் மண்ணுக்கு அவதி

கிளிநொச்சி, ஏப் 2

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிளாலிப் பகுதியில் வீட்டுத்திட்டத்துக்கு வழங்கப்பட்ட மண் அனுமதிகளை பயன்படுத்தி வெளி மாவட்டங்களுக்கும் மண்விற்பனை இடம்பெறுவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முகமாலைப் பகுதியில் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

முகமாலைப்பகுதி வீட்டுத்திட்டத்துக்கு மணல் வழங்குவதற்காக கிளாலிப் பகுதியில் மேலதிக மணல் காணப்படுவதாகவும் அதனை அகற்ற வேண்டிய தேவை உள்ளது என தெரிவித்தவர்களுக்குப் பிரதேச செயலகம் ஊடாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அந்த அனுமதி நேரத்தில் மேலதிகமாக மணல் அள்ளப்பட்டு பற்றைகள் மற்றும் இதர இடங்களில் குவிக்கப்பட்டு டிப்பர் உள்ளிட்ட வாகனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அனுமதி வழங்கப்பட்டாத இடங்களிலும் மணல் அகழப்பட்டுள்ளதால் தமது கிராமம் பாதிக்கப்படுவதாக கிராம மக்கள் கவலை தெரிவித்ததுடன். குறித்த அனுமதிகளை அமைப்புக்கள் ஊடாக வழங்கியிருப்பின் இவ்வாறான சம்பவங்களைக் கட்டுப்படுத்தியிருக்கலாம் என தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரிடம் கேட்டபோது:

மண் எடுப்பதற்கான அனுமதி தனியாருக்கு வழங்கப்பட்டது. அவர்களின் காணியில் இருந்து பெறப்பட்டமையால் இவ்வாறு அனுமதிகளை தவறாகப் பயன்படுத்தி விற்பனை இடம்பெறுவதாக இதுவரை எனக்கு முறைப்பாடுகள் கிடைக்கவில்லை. கிடைத்தால் வாகனத்தின் இலக்கத்துடன் அறியத்தாருங்கள். உடனடியாக அவர்களுக்குரிய அனுமதி நிறுத்தப்படும் என தெரிவித்தார். (க-6)

*வீடுகள் கட்டுவதற்கு*

# மணல் இன்றி மக்கள் பரிதவிக்க முகாமுக்குள் களவாக விற்பனை!

## சிறிதரன் எம்.பி பகிரங்கமாகத் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் மட்டுமின்றி கிளிநொச்சியிலும் மக்கள் வீடு கட்டுவதற்கு மணல்இன்றிசிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

ஆனால் கிளிநொச்சி மலையாளபுரம் பகுதி இராணுவ முகாம் ஒன்றில் களவாக மணல் விற்பனை செய்யப்படுகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் குற்றஞ்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பூநகரியில் மட்டுமல்ல அனைத்து இடங்களிலும் மணலைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினை உள்ளது. மலையாளபுரம் பகுதியில் உள்ள இராணுவ முகாமில் மணல் விற்பனை செய்யப்படுகின்றது. களவாக ஏற்றிக்கொண்டுவந்து முகாமில் வைத்து பெருமளவில் விற்பனை இடம்பெறுகிறது.

யாழ்ப்பாணத்தில் ஒரு லோட் மணல் 56ஆயிரம் ரூபாவரை விற்பனை செய்யப்படுகிறது.

கிளிநொச்சியில் ஒரு உழவு இயந்திர மணல் 5 ஆயிரத்துக்கும் கள்ள மணல் என்றால் 6ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்படகிறது.

மணல் தட்டுப்பாடு தொடர்பில் நாங்கள் பேசியுள்ளோம். விடுதலைப் புலிகள் செய்தது போன்று யாட் மூலமாக மணலை வழங்கும் யோசனையை மாவட்டச் செயலருக்கு கூறியுள்ளோம். நாங்கள் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து கொண்டுதான் இருக்கிறோம். கிரவல் வேண்டும் என்றால் முல்லைத்தீவுக்குத்தான் செல்ல வேண்டும். அங்கு மாவட்டச் செயலர் அதற்கான அனுமதியைக் கொடுக்க வேண்டும். ஆனால் கொழும்பில் இருந்து வருபவர்கள் அங்கு கனியவளங்கள் திணைக்களத்திடம் அனுமதிகளைப் பெற்று இங்கு வந்து கிரவல் அகழ்கின்றனர். இப்படியான பிரச்சினைகள் உள்ளன - என்றார். (து-21)

# வாணிபத்துறை பிரதி அமைச்சர் முல்லைத்தீவுக்குப் பயணம்

முல்லைத்தீவு,ஏப் 2

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பயணம் மேற்கொண்டசிறுகைத்தொழில் மற்றும் வாணிபத்துறை பிரதி அமைச்சர் புத்திக்க பத்திரண உள்ளூர் உற்பத்தியாளர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கடந்த 31ஆம் திகதி காலை முல்லைத்தீவுமாவட்ட செயலக மண்டபத்தில் மேலதிக மாவட்ட செயலர் கோ.தனபாலசுந்தரன் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூர் உற்பத்தியாளர்கள் கலந்துகொண்டு அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் பிரதி அமைச்சருக்கு எடுத்துரைத்துள்ளார் கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வடமாகாணரீதியில் சிறந்த உற்பத்தியாளர்கள் பலர் காணப்படுகின்றார்கள். அவர்களின் உற்பத்தி பொருள்களை சந்தைப்படுத்துவதில் பாரிய சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

அத்துடன் உற்பத்தியாளர்களுக்கு போதிய இடவசதி மற்றும் இயந்திர வசதிகள் இல்லாத நிலையை பிரதி அமைச்சரிடம் எடுத்துரைத்துள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள உற்பத்தியாளர்கள் பல புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டாலும், அவற்றை சந்தைப்படுத்துவதில் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளமை, இரசாயன கலப்படம்அற்ற உற்பத்தியாளர்கள் பலர் இங்கு இருந்தாலும் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் இல்லாத நிலை உண்டு. சில ஏற்றுமதிசெய்யப்படும்உள்ளீட்டு பொருள்களை மாவட்டத்தில் இருந்து எடுத்தாலும் அவற்றுக்கான உரிய விலை கிடைக்காமை தெற்கில் இருக்கும் ஏற்றுமதியாளர்கள் மிகக் குறைந்த விலையில் உள்ளீட்டுப்பொருள்களை கொள்வனவுசெய்கின்றமை, புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தமுடியாமை, புதிய உற்பத்திகளை மேற்கொள்ள பொருளாதார வசதி இன்மை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் முல்லைத்தீவு மாவட்ட உள்ளூர் உற்பத்தியாளர்கள் தங்கள் பிரச்சினைகளைத் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

உற்பத்தியாளர்களின் கருத்தை உள்வாங்கிய பிரதி அமைச்சர் இவற்றை எல்லாம் சீர்செய்யும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்துள்ளதுடன், உல்லாசப் பயணிகளை கவரும் வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உற்பத்திகள் இடம்பெற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (க-ரி3)



# வவுனியா மாவட்டத்தின் சமாதான நீதிவான்கள் சங்கத்தின் பொதுக்கூட்டம்

வடஇலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தின் வவுனியா மாவட்டத்துக்கான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் வடஇலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தின் அமைப்பாளர் மாணிக்கம் ஜெகன் தலைமையில் நேற்று முன்தினம் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. வவுனியா மாவட்டத்திலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட சமாதான நீதிவான்கள் இந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றிருந்ததுடன், தலைவராக ந.சிறிஸ்கந்தராசா, செயலராக மாணிக்கம் ஜெகன், பொருளாளராக எஸ். சபாநாதன் மற்றும். உபதலைவராக கெனடி, உபசெயலாளராக வரதராசா ஆகியோரும், நிர்வாக உறுப்பினர்களாக நபீஸ், சு.ஜெகதீஸ்வரன், அமிர்தலிங்கம், யோகன், ஜெமீல், சுப்பிரமணியம், அரியரட்ணம், சந்திரமோகன், அருள் வேல்நாயகி, சர்மிளா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிகழ்வில் வடஇலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தின் தலைவர் கலாநிதி பீ.ஜெயவிந்தன், செயலர் கலாநிதி நி.திசையானந்தன், சமாதான நீதிவான்களான மு.சு.கணேஸ்வரன், சமூகச்சுடர் சந்திரகுமார் கண்ணன், வவுனியா நகரத்தின் கிராம அலுவலர் எஸ்.பி.உமாபதி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (க-110)

### நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை வவு.மக்களுக்கு அறிவித்தல்

வவுனியா மக்களுக்கு நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அவசர அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

குறித்தஅறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: வவுனியா மாவட்ட நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கீழ் உள்ள பாவனையாளர்களது நீர்ப்பட் டியல் கட்டணமானது 500 ரூபாவுக்கு மேல் காணப்படுமாயின் அவர்களுக்கான நீர் விநியோகம் துண்டிக்கப்படவுள்ளது.

எனவே, நீரிணைப்பு துண்டிப்பை தடுக்க 500 ரூபாவுக்கு மேல் உள்ள நீர்ப்பட்டியல் கொடுப்பனவுகளை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன் செலுத்தித் துண்டிப்பை தவிர்த்துக் கொள்ளுமாறு நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது. (க-110)

# கட்டுமான கைவினைஞர்களுக்கான தேசிய தொழில் சான்றிதழ் வழங்கல்

வவுனியா,ஏப் 2



வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாசவின் எண்ணக்கருவுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும் கட்டுமானக் கைத்தொழில் கைவினைஞர்களுக்கான தகுதி அடிப்படையிலான பயிற்சித்திட்டத்தை பூர்த்தி செய்தவர்களுக்கான தேசிய தொழில் சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் வீ.எம். வீ குறூஸின் தலைமையில் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சீ.ஐ.டீ.ஏ உதவிப்பணிப்பாளர் சரத் வனசிங்க, நைற்றா மாவட்ட முகாமையாளர் பவளநாதன் , தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மேலதிக மாவட்ட முகாமையாளர் நிமலநாதன் , ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் பி.ஏ.கருணா தாசா , ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அலுவலர்கள், பயனாளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (க-110)


# டீசலுடன் மண்ணெண்ணெய் கலப்படம் பாவனையாளர் அதிகார சபை சோதனை

வவுனியா,ஏப் 2

வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் டீசலுடன் மண்ணெண்ணெய் கலந்து விற்பனை செய்யப்படுவதாக பாவனையாளர் ஒருவர்செய்தமுறைப்பாட்டின் அடிப்படையில் பாவனையாளர் அதிகார சபையினரும், பொலிஸாரும் பரிசோதனை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு 10.30 மணியில் இருந்து இரவு 12 மணிவரை இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கிணறு அமைப்பதற்கான இயந்திரத்துடன் கூடிய ஹன்ரர் ரக வாகனத்துக்கு வழமையாக டீசல் அடிக்கும் பாவனையாளர் ஒருவர் அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தாம் பெறும் டீசல் தொடர்பில் சந்தேகம் அடைந்தார், இதனையடுத்து வவுனியா பாவனையாளர் அதிகாரசபையினருக்கு முறைப்பாட்டை மேற்கொண்டதுடன், வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் இயங்கும் தமிழ் மொழி மூலமான தொலைபேசி அழைப்பு முறைப்பாட்டு




பிரிவுக்கும் தனது முறைப்பாட்டை மேற்கொண்டார்.

சம்பவ இடத்துக்கு வந்த வவுனியா பொலிஸார் டீசல் மாதிரிகளை எரிபொருள் நிரப்புநிலையத்தில் இருந்து பெற்று அதனை சுயமாக பரிசோதித்தனர்முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெறும் போதும் பெற்றோல் நிலையம் தொடர்ந்து இயங்குவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது. (க-222)

# அனுமதியின்றி அரச சாராயம் விற்பனை செய்த நபர் கைது

கிளிநொச்சி,ஏப் .2

அனுமதி இன்றி அரச சாராயத்தை விற்பனை செய்த நபரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாகப் பளைப் பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வண்ணாங்கேணி வடக்குப் பகுதியில் அனுமதி இன்றி அரச சாராயத்தை விற்பனை செய்த நபரை கைது செய்துள்ளதாகவும், அவரிடம் இருந்து 20 கால் போத்தல் சாராயம் மீட்கப்பட்டுள்ளதாகவும்,பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்த நபரை மேலதிக விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரைப் பிணையில் செல்ல கிளிநொச்சி நீதிவான் மன்று உத்தரவிட்டுள்ளது. (க-6)



# வவுனியாவில் இளையோருக்கு அரசியல் பயிற்சி

வவுனியா,ஏப் 2

வவுனியாவில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனமான அன்பிற்கும் நட்புக்குமான இளைஞர் வலையமைப்பு நிறுவனத்தின் ஏற்பாட்டில் இளையோர்களுக்கான அரசியல் பயிற்சி முகாம் இடம்பெற்றது

இளையோரின் மத்தியில் அரசியல் விழிப்புணர்வூட்டும் நிகழ்சித்திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணம், வவுனியா, பதுளை, கண்டி, மாத்தளை, திருகோணமலை, நுவரெலியா, மட்டக்களப்பு உட்பட 15 க்கும் மேற்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 35 இளையோருக்கு இந்தப் பயிற்சி வழங்கப்பட்டது.

பயிற்சி முகாம் கடந்த சனிக்கிழமை 30 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் அன்புக்கும் நட்புக்குமான இளைஞர் வலையமைப்பின் தலைமை காரியாலயம் அமைந்துள்ள இடத்தில் இடம்பெற்றது.

நல்லாட்சி, ஜனநாயகம், நாடாளுமன்ற செயற்பாடு, அரசின் தற்போதய செயற்பாடு, மனித உரிமை மீறல்கள் உட்பட பல்வேறு விடயங்கள் இந்தப் பயிற்சி முகாமில் ஆராயப்பட்டன. பயிற்சியில் ஈடுபட்ட தரப்பினர் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவுள்ளதாக இந்த நிறுவனத்தின் பயிற்சி இயக்குநர் இரவீந்திரன் தெரிவித்தார். (க-402)

# வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடல்

வவுனியா,ஏப்.2

காத்தார் சின்னகுளம் கிராமத்துக்கு வீட்டுத்திட்டத்துக்கான அடிக்கல் நட்டு வைக்கப்பட்டது.

பலவருடங்களாக தற்காலிக கொட்டில்களில் வசித்து வந்த காத்தார் சின்னக்குளம் கிராம மக்களுக்கு 102 வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் செயலர் கி.டினேஸ் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாடுபூராகவும் 150 மாதிரிக் கிராமங்களை மார்ச் 31 ஆம் திகதி ஆரம்பிக்கும் வேலைத் திட்டத்தின் கீழ், தேசியவீடமைப்பு அதிகாரசபையால், வவுனியா காத்தார் சின்னக்குளம் கிராத்துக்கு வீடுகள் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது

நிகழ்வில் வீடமைப்பு அதிகாரசபையின் . மாவட்ட முகாமையாளர் எம். குரூஸ், முகாமையாளர் திருமதி. சுவர்ணராஜா,வட மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், நகரசபை உறுப்பினர்களான அப்துல்பாரி, எம். லரிப், பிரதேசசபை உறுப்பினர் யோகராஜா, கிராம அபிவிருத்தி சங்க தலைவர் க.சிதம்பரப்பிள்ளை, மற்றும் அரச அதிகாரிகள் வீட்டுப்பயனாளிகள் ஊர் மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (க-110)



# முதியோர் இல்லத்தின் கட்டட திறப்பு நிகழ்வு

முல்லைத்தீவு,ஏப். 2

கனகராயன்குளம் தங்கம்மா முதியோர் இல்லத்தின் புதிய கட்டட திறப்பு நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவ கலாநிதி சி.சிவமோகன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவின் கனகராயன்குளம் பகுதியில் இயங்கும் தங்கம்மா முதியோர் இல்லத்தில் அந்தப் பகுதி மாணவர்களுக்கான இலவச கற்றல் நடவடிக்கைகளுக்குரிய கட்டடத் திறப்பு நிகழ்வு,முதியோர் இல்லம் மற்றும் இலவச கற்கைநெறிப் பிரிவின் அதிபர் திருமதி கவிதாஸ் வினோதினி தலைமையில் கடந்த 30 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவ கலாநிதி சி.சிவமோகன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு முதியோர் இல்ல நிர்வாகத்தினரால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றினார்.

தொடர்ந்து நிர்வாகத்தினர் மற்றும் முதியோர் இல்ல நிறுவுநர் பேராசிரியர் முருகர் குணசிங்கம் ஆகியோருடன் கலந்துரையாடி அவர்களது தேவைகளை கேட்டறிந்ததுடன், அவர்களது உடனடி தேவைகளில் ஒன்றான போட்டோ பிரதி இயந்திரத்துக்குரிய நிதியைத் தனது நிதி ஒதுக்கீட்டின் மூலம் வழங்குவதாகவும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் நெடுங்கேணி பிரதேச சபை உறுப்பினர் ந.விநாயகமூர்த்தி, கனகராயன்குளம் மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், முதியோர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.(க-222)

# இழப்பீடுகள் இல்லை என விவசாயிகள் கவலை

முல்லைத்தீவு, ஏப் 2

ஒட்டுசுட்டான் கமநலச்சேவை நிலையத்தின் கீழ் உள்ள காலபோக விவசாயச் செய்கை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து பயிர் காப்புறுதிச் சபையால் பாதிக்கப்பட்ட விவசாயத்தரவுகள் திரட்டப்பட்ட போதிலும் இதுவரையில் இழப்பீடுகள் வழங்கப்படவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்தனர். தற்போது சிறுபோகச் செய்கை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் விதை நெல் எடுக்கவோ நிலங்களை பண்படுத்தவோ முடியாதுள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர் .

எனவே விவசாயிகளின் இன்னல் கருதி விரைவில் இழப்பீட்டுத் தொகையைப் பெறக் காப்புறுதிச்சபை ஆவன செய்ய வேண்டுமென பாதிப்புக்குள்ளான விவசாயிகள் கேட்டுள்ளனர். (க-500)



# மாணவர்கள் மதிப்பளிப்பு

2018 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் துறை ரீதியாக முதல் பத்து நிலைகளை பெற்ற மாணவர்களை மதிப்பளிப்பும் பாராட்டும் நிகழ்வு மற்றும் பல்கலைகழக மாணவர்களுக்கு நிதி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றுள்ளன.

2 நிகழ்வும் 31ஆம் திகதி கிளிநொச்சி பழைய மருத்துவமனை கேட்போர் கூடத்தில் கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் தலைவரும் யாழ் போதனா மருத்துவமனைப் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி தங்கமுத்து சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றன. (க-222)

# காணி நடுவர் சபைக்கு பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்பின்றிச் சிரமம்

வவுனியா,ஏப் 2

வவுனியாவில் சிறப்பு காணி நடுவர் சபைக்கு பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்பின்மையால் சிரமம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வவுனியாவில் இயங்கி வரும் வவுனியா மாவட்ட சிறப்பு காணி நடுவர் சபையினருக்கு வவுனியா பிரதேச செயலகம் மற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயலகங்கள் போதிய ஒத்துழைப்பு வழங்காமையினால் சிறப்பு காணி நடுவர் சபையை நடத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக வவுனியா சிறப்பு காணி நடுவர் சபைத்தலைவர் நவரட்ணம் தெரிவித்தார். வவுனியா குடியிருப்பு பகுதியில் உள்ள இலங்கை திருச்சபை கலவன் பாடசாலையில் காணி நடுவர் சபை வாராந்தம் இடம்பெற்று வருகிறது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள தனியார் மற்றும் அரச காணிப் பிரச்சினைகளுக்கு இணக்கம் எட்டப்பட்டு வருகிறது. இதில் அரச காணிப்பிணக்குகளுக்கு தீர்வு காண்பதற்கு பிரதேசசெயலகத்தைச் சேர்ந்த பிரதேச செயலர் மற்றும் காணிஅலுவலர் எவரேனும் பிணக்குகளைத் தீர்க்க குறித்த நடுவர் சபைக்கு வருகை தரவேண்டும். இதற்கான அழைப்புக் கடிதங்கள் பலதடவை வழங்கப்பட்டபோதும், வவுனியா பிரதேச செயலகம் மற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயகத்தின் காணிசம்பந்தமான அலுவலர்களோ அல்லது பொறுப்பான பிரதேச செயலர்களோ வருவதில்லை. இதனால் அரச காணிப்பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கமுடியாத நிலையும் பெருமளவான பொதுமக்களும் மன உளைச்சலுடன் வீடுகளுக்கு திரும்பிச் செல்கின்றனர்.

இந்த நிலை காணி நடுவர்களுக்கு பிரதேச செயலகத்தின் மீது இதுவரை வைத்திருந்த நம்பிக்கை இழக்கப்படுவதாகவும், குறித்த விடயம் நீதியமைச்சின் கவனத்துக்கு கொண்டு வரவுள்ளதாகவும் நாம் பிரதேச செயலக காணி அலுவலர்கள் அல்லது பிரதேச செயலர்களை எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் தவிசாளர் தெரிவித்தார். (க-402)



மன்னார் மறைமாவட்ட மறைவாழ்வுக் கல்விப் பணி யாளர்களுக்கான தவக்காலத் தியானம் மடுமாதா திருத்தலத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகி கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலையுடன் நிறைவடைந்தது. குறித்த தவக்கால தியானத்தில் 350 மறைவாழ்வுக் கல்விப் பணியாளர்கள் பங்கு பற்றியுள்ளனர். (ம- 56)

# முல்லைத்தீவு வலயத்தில் 20 மாணவர்கள் 9 ஏ சித்தி

முல்லைத்தீவு,ஏப் 2

முல்லைத்தீவு வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் 20 பேர் 9 ஏ தரச் சித்திகளைப் பெற்றுள்ளனர் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பிரபாகர் தெரிவித்தார்.

இதன்படி முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியில் 3 பேரும், முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் 2 பேரும், குமுழமுனை மகா வித்தியாலயத்தில் 2 பேரும், செம்மலை மகா வித்தியா லயத்தில் ஒருவரும், கலைமகள் வித்தியாலயத்தில் ஒருவரும், சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தில் ஒருவரும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் 7 பேரும், விசுவமடு மகா வித்தியாலயத்தில் 2 பேரும், இரணைப்பாலை றோ.க வித்தியாலயத்தில் ஒருவருமாக 20 பேர் 9ஏ தரச் சித்திகளைப் பெற்றுள்ளனர். (ஐ-222)

# எத்தகைய சவால் வந்தாலும் போதை ஒழிப்புத் தொடரும்

## அரசதலைவர் சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 2
உயிர் அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது போதைப்பொருளுக்கு எதிரான போராட்ட களத்தில் இறங்கியது எதிர்கால சந்ததியினருக்கு நல்லதோர் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காகவே. எத்தகைய சவால்கள் வந்தாலும் அந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வருவேன்.



இவ்வாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
அதிவண. கார்டினெல் மெல்கம் ரஞ்சித்தின் வழிகாட்டலின் கீழ் அனைத்து மதத் தலைவர்களினதும் பங்குபற்றலில் மோதரை, விட்ஸ்வைக் பூங்காவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும்போது மேற் கண்டவாறு தெரிவித்தார் என்று அரசதலைவர் ஊடகப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
நாட்டுக்காக முன்னெடுக்கப்பட்ட போதை ஒழிப்பு வேலைத் திட்டத்துடன் சகல மக்களும், அனைத்து தரப்பினரும் கைகோர்த்துள்ளனர். 'போதையிலிருந்து விடுதலை பெற்ற நாடு' எனும் தொனிப்பொருள் வெகு விரைவிலேயே யதார்த்தமாகும்.
சட்டவிரோத போதைப் பொருளுக்கு எதிரான சட்டதிட்டங்களை தற்போது வலுவூட்டியுள்ளதுடன், போதைப்பொருள் கடத்தற்காரர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கும் திகதி மற்றும் அட்டவணையைத் தீர்மானித்துள்ளேன் என்றும் அரசதலைவர் தெரிவித்தார்.
போதையிலிருந்து விடுதலை பெற்ற நாட்டுக்காக மேல் மாகாண கத்தோலிக்க திருச்சபையிலிருந்து எதிர்ப்பு பதாகைகளை ஏந்தி அமைதி ஊர்வலம் இடம்பெற்றது.
அதில், அதிவண. கார்டினெல் மெல்கம் ரஞ்சித் உரையாற்றினார்.
ஏனைய மதத்தலைவர்களும்தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதேச மக்கள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்- என்றுள்ளது.
வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் இடம் பெறுகின்றபோதும் நூற்றுக்கணக்கான கிலோகிராம் போதைப் பொருள்கள் இன்னும் மீட்கப்படுகின்றன. (து)

### போதனாசிரியர் பதவிகளுக்கு வெற்றிடம்

யாழ்ப்பாணம்,ஏப் 2
கட்டடத்துறை சார்ந்த கட்டட அமைப்பு உதவியாளர், மரவேலை தொழிற் நுட்பவியலாளர் (கட்டடம்), நீர்க்குழாய் பொருத்துநர் ஆகிய கற்கைநெறிகளை கற்பிப்பதற்கு பொருத்தமானவர்களிடம் இருந்துவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
குறிப்பிட்ட துறைகளில் டிப்ளோமா அல்லது என். வி. கியூ 5 சான்றிதழ் மற்றும் ஒரு வருட காலத்துக்கு மேல் இத்துறையில் செய்முறையுடன் கூடிய கற்பித்தல் அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
விண்ணப்பதாரிகள் தமது சுயவிவரக்கோவையை "உதவிப் பணிப்பாளர், இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை, வீரசிங்கம் மண்டபம், இல.12/4, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு இலங்கைதொழிற்பயிற்சி அதிகார சபை உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (ஐ)

### விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஏப் 2
இலங்கைதொழிற்பயிற்சி அதிகார சபையும் ஜேர்மன் அபிவிருத்தி கூட்டிணைவு. நிறுவனமும் இணைந்து கட்டடத்துறை சார்ந்த இலவச கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களை கோரியுள்ளன.
கட்டட நிர்மாண உதவியாளர், மரவேலை தொழில் நுட்பவியலாளர் (கட்டடம்), தண்ணீர்க்குழாய் பொருத்துநர் ஆகிய தொழிற்பயிற்சிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.
இந்த கற்கை நெறிகள் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர் வரும் மே மாதம் ஆரம்பிக்கப்பட்டு 120 நாள்கள் முழுநேர கற்கைநெறிகளாக நடைபெறவுள்ளது.
இந்தப் பயிற்சி நடைபெறும்போது பயிலுநர்களுக்கான போக்குவரத்து வசதி, ஊக்குவிப்புக் கொடுப்பனவு பயிற்சி நிறைவில் என்.வி.கியூ சான்றிதழ், உபகரணப் பொதி மற்றும் பெரிய கட்டடத்துறை சார்ந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்பும் பெற்றுத் தரப்படும்.
இதில் இணைந்து கொள்பவர்களுக்கான வயதெல்லை 18 தொடக்கம் 35 வரை ஆகும்.
எனவே இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் தமது சுயவிவரக்கோவையை "உதவிப் பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, வீரசிங்கம் மண்டபம், இல.12/4, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (ஐ)

# இனப் பாகுபாடுகளால் அனுகூலம் இருக்காது

## ஆசிய மன்ற முகாமையாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஏப். 2
இன, மொழி பாகுபாடு காட்டிக் கொண்டு பிரிந்து வாழ்வது எந்தவிதத்திலும் எமக்கு அனுகூலத்தை ஏற்படுத்தாது என்று ஆசிய மன்றத்தின் திட்ட முகாமையாளர் சட்டத்தரணி ஷாஜஹான் றொஷான் தெரிவித்தார்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய சமாதானப் பேரவை நடத்தும் சமாதான செயற்பாடுகள் பற்றி மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் ஆலோசனைக் குழுக்களின் உறுப்பினர்கள், மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிகள் ஆகியோருக்குத் தெளிவுபடுத்தும் ஆலோசனைக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
மட்டக்களப்பு கிறீன் கார்டன் விடுதியில் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையின் இணைப்பாளர் இ.மனோகரன் தலைமையில் இடம்பெற்ற இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
மனித நேயத்தை மதிக்கின்றபோது வேறுபாடுகளைத் தாண்டி நாம் அனைவரையும் ஒன்றிணைக்கின்ற சக்தியாக மாறுவதனால் தான் சமாதானத்தை அடைந்து கொள்ள முடியும்.
சர்வமதக் குழுக்களும் ஏனைய சிவில் குழுக்களும் இனங்களையும் மதங்களையும் தாண்டி மனித நேயத்தை வளர்ப்பதில் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும்.
பொலிஸாருக்கும் மக்களுக்கும் பிணக்குகள் எற்படும்போது சட்டத்தையும் சமூகப் பொறுப்பையும் மதிக்க வேண்டும்.
பொதுமக்களிடம் கடுமையாக நடந்து கொள்கின்ற பொலிஸ் அலுவலர்களுக்கு எதிராக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் எழுத்து மூலமாக முறைப்பாடு செய்யலாம். தேசிய பொலிஸ் ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்யலாம்.
ஒரே ஒரு உரிமையைத் தவிர எங்களது அனைத்து உரிமைகளையும் நாம் அரசுக்குக் கொடுத்துள்ளோம். கொடுக்காத ஒரே ஒரு உரிமை வாக்குரிமை.
நாம் அரசுக்குக் கொடுத்துள்ள உரிமைகளை எப்போது அரசு பாதுகாக்கத் தவறுகின்றதோ அப்போது அரசுக்கு எதிராக உயர்நீதிமன்றம் சென்று நியாயம் கேட்கலாம்.
அரசதலைவர் தனது சத்தியப்பிரமாணத்தில் இலங்கை அரசியல் யாப்பை மீறமாட்டேன், சட்டத்தின் முன் அனைவரும் சமம், எவரும் சித்திரவதைக்கு உட்படுத்தப்படமாட்டார், மதங்கள் அனைத்தும் சுதந்திரமானவை, கருத்துச் சுதந்திரம் எல்லாவற்றையும் பாதுகாப்பேன் என்று சத்தியப்பிரமாணம் செய்து தான் அரசதலைவர் பதவியேற்கிறார்.
எமது எதிர்கால சந்ததியினரை மன உறுதிப்பாடு கொண்டவர்களாக நாம் வளர்த்தெடுக்க வேண்டும், அவர்களுக்கு எதிராக குற்றம் இழைக்கப்படுகின்றபோது, குற்றம் இழைக்க எத்தனிக்கப்படுகின்ற போது தைரியமாக பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்யக்கூடிய பிள்ளைகளை நாம் உருவாக்க வேண்டும் - என்றார். (த-46)

# உறவுகள் ஏங்கித் தவிக்கின்றன: அரசு உரிய பதில் வழங்கவில்லை

## துரைரெட்ணசிங்கம் எம்.பி.தெரிவிப்பு

மூதூர், ஏப். 2
வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்று ஒவ்வொரு தாய்மாரும், உறவுகளும் ஏங்கித் தவிக்கின்றார்கள். அதற்கு அரசு சரியான பதில் இன்னும் வழங்கவில்லை என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார்.
விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் அனுசரணையில் கிழக்கு மாகாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நாடாளுமன்ற உறுப்பினரை திருகோர்ண மலை லோட்டஸ் பாக் விடுதியில் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர். தமது கோரிக்கை அடங்கிய மனுவைக் கையளித்த பின் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அரச வாகனங்களில் வந்து கடத்திச் செல்லப்பட்டவர்கள், தாய் தந்தை முன்பாக பிள்ளையை விசாரணையின் பின்னர் விடுகிறோம் என்று அழைத்துச் செல்லப்பட்ட பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் உள்ளது. நாங்களும் நாடாளுமன்றில் பேசிக்கொண்டிருக்கிறோம். அதற்கான தீர்வு கிடைக்கவில்லை.
ஒவ்வொரு நாடும் அபிவிருத்தி பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது நமது நாட்டில் மாத்திரம் தாய் தந்தையர்கள், உறவுகள் தமது பிள்ளைகளைப் பறி கொடுத்துவிட்டு அதற்காக வீதியில் நின்று போராட்டம் நடத்தும் நிலை காணப்படுகின்றது. நீதி கிடைக்கும்வரை நீங்கள் போராட்டம் நடத்துங்கள், எங்களால் முடிந்த ஒத்துழைப்புக்களை வழங்குவோம்.
வடக்கு - கிழக்கில் 90 ஆயிரம் விதவைப் பெண்கள் உள்ளனர். பிள்ளைகளை வீட்டில் விட்டு பெண் தலைமை தாங்கும் குடும்பங்களால் நிம்மதியாக தொழில் செய்ய முடியாமலுள்ளது, வெளிநாடு சென்று உழைக்க முடியாதுள்ளது.
எங்கு பார்த்தாலும் கற்பழிப்பும், சிறுவர் முறைகேடுகளும் அதிகரித்துள்ளன.
வடக்கு - கிழக்கு அபிவிருத்தி விடயமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாளை அரசதலைவரைச் சந்தித்துப் பேசவுள்ளது. மனு ஒப்படைக்கப்படும். (த-40)





### தோட்டத்தில் விசமிகளால் தீ வைப்பு

ஹெற்றன், ஏப். 2
ஹற்றன் பிட்டவீன் தோட்டப்பகுதியில் ஏற்பட்ட தீ காரணமாக 10ஏக்கர் மானாவாரிச் செய்கை எரிந்து நாசமடைந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இனந்தெரியாதோர் நேற்று முன்தினம் தீ வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இத்தகைய இடங்களுக்கோ காடுகளுக்கோ தீ வைப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸார் கோரியுள்ளனர். (து)

### அரசியல்வாதிகளைவிடவும்

# புலிகளே தமிழ் மக்கள் மீது அக்கறையாக இருந்தனர்!

### பசில் ராஜபக்ச கூறுகிறார்



கொழும்பு ஏப். 2

தமிழ் அரசியல் தலைவர்களை விட, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கே தமிழ் மக்கள் மீது அதிக அக்கறை என்று முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வார இதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர்களுக்கு தமிழ் மக்கள் தொடர்பில் எவ்வித அக்கறையும் கிடையாது. இவர்கள் சுயநல சிந்தனை கொண்டவர்கள், இதனைத் தமிழ் மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்த் தலைவர்களைவிட தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்கள் மீது அதிக அக்கறை கொண்டிருந்தனர். இந்த அரசு மாகாண சபைத் தேர்தலை பிற்போடுவதற்கு முக்கிய காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே. மாகாண சபைத் தேல்தலை நடத்தினால் இவர்களுக்கு 20 சதவீத வாக்குகள்கூடக் கிடைக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## கருணா அம்மானை கைது செய்யாதது ஏன்?

### சார்ள்ஸ் எம்.பி. கேட்கிறார்

கொழும்பு, ஏப். 2

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினராக இருந்த கருணா அம்மான் எனப்படுகின்ற விநாயகமூர்த்தி முரளிதரனை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யவில்லையே ஏன்?

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

இந்த வருடத்துக்கான வரவு செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதம் தற்போது நாடாளுமன்றில் இடம்பெற்று வருகின்றது. அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மிக முக்கியமாக இலங்கையில் போர் ஏற்பட்ட காலத்தில் நடைமுறையில் இருந்த பயங்கரவாதத் தடைச்சட்டம் போர் நிறைவடைந்து 10 வருடங்களாகியும் நடைமுறையில் இருக்கின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் அதாவது சாட்சிகள் இல்லாமல் ஒருவரைக் கைது செய்ய முடியும்.

கைது செய்கின்ற நபர் அவரை துன்புறுத்தி அந்தத் துன்புறுத்தலின் மூலம் அவர் தான் குற்றங்களைச் செய்தார் என்று ஒப்புக் கொண்டால் அவர்களுக்கு நீண்டகால தண்டனை வழங்குவதற்கு விசாரணையற்ற முறையில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு குற்றத்தடுப்புப் பிரிவுக்கு அரசதலைவர் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

அந்தச் சட்டத்தின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மறைமுகமாக உதவி செய்ததின் அடிப்படையில் 100 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

கருணா அம்மானை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யாதது ஏன்? விசாரணை செய்யவில்லையா? அதேபோன்று கே.பி மற்றும் பிள்ளையான் ஆகியோர் கைது செய்யப்படவில்லை அல்லது விசாரணைக்கு உட்படுத்தபடவில்லை என்பது குறித்து அமைச்சர் இந்த சபைக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் தெளிவுப்படுத்த வேண்டும் - என்றார். (த)

## தற்போதைய அரசிலும் சஞ்சலமே நீடிக்கிறது

### பிரான்ஸ்தூதுவரிடம் முதல்வர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 2

இந்த அரசு மக்கள் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யவில்லை. சிறுமுன்றேற்றங்களை மட்டும் ஏற்படுத்தியிருப்பினும் எதிர்பார்ப்பின் காரணமாகவே மனச் சஞ்சலமே காணப்படுகின்றது என்று, பிரான்ஸ் நாட்டுத் தூதுவரிடம் எடுத்துக் கூறினேன் என்று யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ. ஆனோல்ட் தெரிவித்தார்.

இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டுத் தூதுவர் யாழ்ப்பாண மாநகர சபையில் நேற்று முதல்வரைச் சந்தித்துப் பேசினார்.

பழைய ஆட்சியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களுக்கு புதிய ஆட்சியில் நீதி எதிர்பார்க்கப்பட்டது, கிட்டவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோரின் விடயத்தில் எந்த விமோசனமும் இல்லாதமை அதிர்ச்சி, கவலையளிக்கின்றது.

மாகாண சபையின் பயணத்தில் வெற்றியடையவில்லை என்பதனையும் தெரிவித்தோம். இது எவருடைய தவறு எனக் கேட்டார். சரியாகச் செயற்படாதமை எமது தவறு என்று ஏற்றுக்கொண்டேன். பாதாள சாக்கடைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தேன். ஜூலையில் ஆராய்ந்து 2020இல் 160 மில்லியன் யூரோவில் இது ஆரம்பிக்கப்படும் - என்றார்.

உலக வங்கியின் பணிகள் தொடர்பிலும் பெரு நகர அபிவிருத்தி தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார். இந்த அலுவலகமும் நிரந்தர அலுவலகம் கிடையாது என்று சுட்டிக்காட்டினேன். யாழ்ப்பாணத்திலிருந்து உள்ளூர், வெளியூர் வானூர்தி சேவையை ஆரம்பிப்பது வளர்ச்சியை ஏற்படுத்தும் எனவும் முதல்வர் சுட்டிக்காட்டினார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-105)

## விக்கி கூறும் கருத்து அதிர்ச்சியளிக்கிறது

### கம்மன்பில கூறுகிறார்

கொழும்பு, ஏப். 2

மன்னார் புதைகுழியில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக, புளோரிடாவின் பீட்டா ஆய்வகத்தில் நடத்திய கார்பன் ஆய்வு அறிக்கையை வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நிராகரித்திருப்பது குறித்து கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

"ஓய்வுபெற்ற நீதியரசர் இத்தகைய முடிவை எடுத்திருப்பது உண்மையிலேயே அதிர்ச்சி அளிக்கிறது.

மன்னார் புதைகுழி விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் செய்கிறது. அமெரிக்க ஆய்வகத்தின் அறிக்கை தொடர்பாக அவர்கள் அதிர்ச்சியும் ஏமாற்றமும் தரும் வகையில் நடந்து கொள்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## நிலையற்ற தன்மையால் தீர்மானங்கள் முடக்கம்

### மகிந்த ராஜபக்ச தெரிவிக்கிறார்

கொழும்பு, ஏப். 2

நாட்டின் நிலையற்ற தன்மை காரணமாக நாட்டை அபிவிருத்தியடையச் செய்வதற்காக அரசு எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ள முடியாதுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

எந்தவொரு தேர்தலிலும் வெற்றி பெறுவதற்கு தமது அணி தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மாளிகாவத்தை கார்ல்டன் பாலர் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். (த)

## அரிசி விலை குறைய வாய்ப்பு

கொழும்பு, ஏப். 2

அரிசி வகைகளின் விலைகள் 10 ரூபாவால் குறைவடையவுள்ளதாகக் கூறப்படுகிறது.

அதிகளவில் நெல்லுற்பத்தி செய்யப்பட்டதன் காரணமாக கடந்த வாரம் தொடக்கம் அரிசி வகைகளின் விலை குறைவடைந்திருந்தது.

நாட்டரிசி மற்றும் சம்பா அரிசிகளின் விலை கிலோ ஒன்றிற்கு 90 ரூபா வரையில் குறைவடைந்திருந்தது.

அதற்கமைய அடுத்த வாரம் தொடக்கம் விலைக் குறைப்பு சந்தைகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விலை வீழ்ச்சி குறித்து கலந்துரையாடலின் போது இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படுமென்று விவசாய ஆராய்ச்சி நிலைய பொருளாதார நிபுணர் துமிந்த பிரியதர்ஷன தெரிவித்துள்ளார். (த)

## போர்க் குற்றச்சாட்டிருந்தும் இணைந்த பயிற்சி சிறப்பே

### கடற்படை முன்னாள் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 2

பொய்யான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இலங்கை இராணுவத்தினரை ஒதுக்கி வைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்ற நேரத்தில், இலங்கைப் படையினருடன் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட ஆஸ்திரேலியா முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது என்று இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய - இலங்கைப் படைகளுக்கிடையில் கடந்த வாரம் நடந்த கூட்டுப் பயிற்சிகள் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

இலங்கையை முக்கியமான பாதுகாப்புப் பங்காளராக ஆஸ்திரேலியா அங்கீகரித்துள்ளது.

அனைத்துலக கப்பல் பாதையில், விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலை இல்லாதொழிப்பதில் ஆற்றிய பங்களிப்புக்காக இலங்கைக் கடற்படை பெருமைப்பட முடியும்.

பொய்யான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இலங்கை இராணுவத்தினரை ஒதுக்கி வைக்கும் முயற்சிகள் முன்னெடுக் கப்படுகின்ற நேரத்தில், இலங்கைப் படையினருடன் கூட்டுப் பயிற்சியை மேற்கொள்ள ஆஸ்திரேலியா முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது - என்றார். (த)

## கூட்டமைப்பின் வரலாறு தெரியாதவர்தானா மனோ?

### மாவை எம்.பி கேட்கிறார்



யாழ்ப்பாணம், ஏப். 2

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்ப காலத்தில் எங்கெங்கு போட்டியிட்டது என்ற வரலாறு தெரியாது, அமைச்சர் மனோகணேசன் பேசிக்கொண்டிருக்கிறார். தமிழீழத்தைக் கைவிட்ட கூட்டமைப்பு கொழும்பில் போட்டியிடலாம் என்று கூறியிருப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தந்தை செல்வா பிறந்த தின நிகழ்வின் பின்னர் தமிழ் அரசுக் கட்சி அலுவலகத்தில் அவரிடம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழத்தைக் கைவிட்ட கூட்டமைப்பு கொழும்பில் போட்டியிடலாம் என்று கூறியதை ஏற்றுக்கொள்ளமுடியாது. எமது கட்சியின் கிழை கொழும்பிலும் இருக்கிறது. அந்த உறுப்பினர்களுடன் அண்மையில் கலந்துரையாடினோம். அங்கு இளம் சட்டத்தரணிகள் பலரும் இருந்தனர். அப்போது அவர்கள் கூட்டமைப்பு கொழும்பில் போட்டியிட வேண்டும். தாம் வாக்களிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கவில்லை. கூட்டமைப்புக்கு வாக்களிப்பதற்கு கூட்டமைப்பு கொழும்பிலே போட்டியிடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

நாங்கள் இலங்கையில் பல பாகங்களிலும் போட்டியிட்டுள்ளோம், புத்தளம் மாட்டத்தில் கூட எமது வேட்பாளர்கள் நிறுத்தப்பட்ட வரலாறுகளை நான் அவருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது கொழும்பில் இருக்கும் எங்களுடைய ஆதரவாளர்களும், கட்சியின் முக்கியமானவர்களும் எங்களிடம் கேட்கிறார்கள் வருகின்ற பொதுத் தேர்தலிலே நாங்கள் கொழும்பிலே போட்டியிட வேண்டும் என்று. அப்படி ஒரு தேர்தலில் நாங்கள் போட்டியிடுவதற்கு ஆயத்தங்கள் செய்கின்றபோது உங்களுடைய கோரிக்கைகளையும் ஆராய்வோம் என்று நான் கூறியிருக்கிறேன் - என்றார். (த-21)

# சம்பள இழுபறிக்குக் காரணம் அமைச்சர்களும் எம்.பிக்களுமே

## ஜே.வி.பி. எம்.பி. ரத்நாயக்க கூறுகிறார்



கொழும்பு, ஏப். 2
நாடாளுமன்றில் ஏராளமான அமைச்சர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் தேயிலைத் தோட்டங்கள் காணப்படுகின்றமையால்தான் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தை வழங்க பின்னடிக்கிறார்கள் என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

பொகவந்தலாவ ஏ.கே.கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கின்ற அரைவாசிப் பேருக்குச் சொந்தமாகத் தேயிலைத் தோட்டங்கள் காணப்படுகின்றன. ஏன் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளம் வழங்க முடியாதென்றால், ஆயிரம் ரூபா வழங்கினால் இவர்களும் ஆயிரம் ரூபா வழங்கவேண்டும். அதனால்தான் நாடாளுமன்றில் மௌனிகளாக இருக்கிறார்கள்-என்றார். (து)

# சுமந்திரன் கூறியது முதலைக் கண்ணீர்

யாழ்ப்பாணம், ஏப்.2
பன்னாட்டு விசாரணைப் பொறிமுறைவேண்டும் என்றும் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்குச் செல்வோம்என்றும்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் கூறியமை முதலைக்கண்ணீர் விடும்செயலுக்கு ஒப்பானது என்று தமிழ் மக்கள் கூட்டணியின் கொள்கைபரப்புச் செயலர் அருந்தவபாலன் தெரிவித்துள்ளார்.

இந்தமுறை நடைபெற்ற மனித உரிமைகள் சபையில் இனப்படுகொலை செய்த இராணுவத்தினரைக் காப்பாற்றும் வகையில் அங்குசென்று செயற்பட்டுவிட்டு அவர் இப்படிக் கூறுகிறார் என்றும் அருந்தவபாலன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் கிளிநொச்சி அலுவலகத்தில் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அரசியல் செயற்பாட்டாளர்களுக்கான அரசியல் பயிலரங்கு நேற்று முன்தினம் நடைபெற்றது. அதை ஆரம்பித்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு சுமந்திரனைச் சாடினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கட்சியின் செயலர் நாயகம் விக்னேஸ்வரன், கலப்புநீதிமன்றம் தொடர்பில் வெளியிட்டகருத்தைத் திரிவுபடுத்தி சுமந்திரன் சிலஊடகங்களுக்கு அறிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்ட கலப்பு நீதிமன்றம் ஒன்றை சட்டரீதியாக அமைக்க முடியாது என்ற இலங்கை அரசின் வாதம் தவறானது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகவே பகவதி தலைமையில் அமைக்கப்பட்ட பன்னாட்டு சுயாதீனக் குழுவை ஒரு உதாரணமாக எமது கட்சியின் செயலர் நாயகம் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதில் சுமந்திரனுக்கு என்ன மயக்கம் இருக்கின்றது என்று விளங்கவில்லை.

என்றுதமிழ்மக்கள்கூட்டணியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## மறுசீரமைப்பு கோவை கையளிப்பு

முல்லைத்தீவு,ஏப் 2
சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைக்கும் செயற்றிட்டத்தின் மற்றுமொருஅங்கமாகசிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேச சபை வேட்பாளர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட அந்தந்த வட்டாரங்களுக்கான மறுசீரமைப்பு படிவக் கோவையை முன்னாள் பிரதி அமைச்சரும் நாடாளுமன்றஉறுப்பினருமான காதர் மஸ்தான் 30 ஆம் திகதி உரிய வேட்பாளர்களிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் ஜனாப் நிஜாஸ், ஒட்டுசுட்டான் பிரதேச சபை உறுப்பினரும் தொகுதி அமைப்பாளருமான சத்திய சுதர்சன் மற்றும் பிரதேச சபைவேட்பாளர்கள்ஆதரவாளர்கள்எனப்பலரும்கலந்து கொண்டனர். (க-222)

# மைத்திரியின் ஒதுக்கீட்டுக்கு மட்டும் ஆதரவளிப்பது நல்ல செயற்பாடல்ல

## காவிந்த ஜயவர்தன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 2
நாடாளுமன்றில் பாரம்பரிய கோட்பாடுகளை சிறிலங்கா சுதந்திரக் கட்சி மதித்துச் செயற்பட வேண்டும். அரசதலைவருக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு மாத்திரம் ஆதரவு வழங்கிவிட்டு ஏனைய அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்துவிலகிக் கொள்வது பொருத்தமற்ற செயற்பாடு.

இவ்வாறுநாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

அரசின் இரண்டு அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீடு தோல்வியடைந்தமை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரண்டு அமைச்சுக்களின் மீதான நிதி ஒதுக்கீடு தோல்வியுற்றமையால் அரசு பலவீனமடைந்து விட்டது என்று குறிப்பிட முடியாது. அரசியல் சூழ்ச்சிக்குத் துணைபோன எதிர்க்கட்சியின் முறையற்ற செயற்பாடுகளின் காரணமாகவே இருஅமைச்சுக்களின் நிதி ஒதுக்கீடு தோல்வியடைந்தது. வாக்கெடுப்பு இடம்பெறும் போது ஆளும் தரப்பினர் நாடாளுமன்றுக்குச் சமூகமளிக்கவில்லை. இதனையே எதிர்த் தரப்பினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

ஐக்கிய தேசிய கட்சி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை முடியுமானவரை நிறைவேற்றி வருகின்றது. கடந்த காலங்களில் அபிவிருத்திப் பணிகள் நிறைவேற்ற முடியாமைக்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்தின. குடும்ப ஆட்சியை முற்றாக வெறுப்பதாக குறிப்பிட்ட அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தற்போது குடும்ப ஆட்சி உருவாகுவதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்தி வருகின்றார்.

மீண்டும் இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும். பொதுமக்கள் முன்னணியுடன் பரந்துபட்ட கூட்டணி அமைப்பது சுதந்திரக் கட்சியை மேலும் பலவீனப்படுத்தும். சிறிசேன முறையான அரசியல் தீர்மானங்களை இனியாவது மேற்கொள்ள வேண்டும். ஐக்கியதேசிய கட்சி தனித்து போட்டியிட்டாலும் வெற்றிபெறும் - என்றார். (கு-31)

# விரைவாக வழங்கப்படும் வீட்டுத் திட்டங்கள்



கிளிநொச்சி, ஏப். 2
தலைமை அமைச்சரின் பணிப்புரைக்கு அமைய வீட்டுத்திட்டங்கள் விரைவாக வழங்கப்படுகின்றன என்று இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபை உருவாக்கப்பட்டு 40 ஆண்டுகள் நேற்றுமுன்தினம் நிறைவடைந்த நிலையில் மாதிரிக் கிராமங்களை உருவாக்கும் தேசிய வேலைத்திட்டம் நேற்று முன்தினம் கிளிநொச்சியிலும் முன்னெடுக்கப்பட்டது.

40 ஆவது ஆண்டை சிறப்பிக்கும் வகையில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கிளிநொச்சி அலுவலகத்துக்கான 40 இலட்சம் பெறுமதியில் அமைக்கப்படவுள்ள விடுதிக்கும், 15 இலட்சம் பெறுமதியில் அலுவலகத்தை பெரிதாக அமைப்பதற்காகவும் அடிக்கல் நடப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 8 மாதிரிக் கிராமங்களை அமைப்பதற்கான அடிக்கல் நட்டு வைக்கப்பட்டதுடன், 40 பயனாளிகளுக்கு பதினைந்தாயிரம் ரூபா பெறுமதியான காசோலைகளும், சீமெந்து பைகளும் வழங்கி வைக்கப்பட்டன. (க-6)

## போதைப் பொதி, ஆயுதங்களுடன் ஒருவர் கைது

மட்டக்களப்பு, ஏப். 2
குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் கைதானவரிடமிருந்து ஆயுதங்களும் போதைப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஐயன்கேணியில் கடந்த சனிக்கிழமை அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவருக்கு எதிராக ஏற்கனவே 3 வழக்குகள் உள்ளன என்றும் அந்த வழக்குகளில் அவர் தேடப்பட்டு வருபவர் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

அவரிடமிருந்து 80 மில்லிக்கிராம் குடு, கைக்குண்டு, வாள்கள் -3, ரீ56 ரக துப்பாக்கிரவைகள் -9 ஆகியன மீட்கப்பட்டுள்ளன. விசாரணை இடம்பெறுகிறது.

அதன் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-46)

# உள்ளூராட்சி சபைகள் ஊடாக இருதரப்பு உறவு வலுப்படும்

## கட்டார் உள்ளூராட்சிமன்றத் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.2
இலங்கை- கட்டார் நாடுகளுக்கிடையிலான இரு தரப்பு உறவுகளை மாகாண உள்ளூராட்சி மன்ற சபைகள் ஊடாக வலுவான முறையில் முன்னெடுக்கத் தயாராக இருப்பதாக கட்டார் நாட்டு மாகாண உள்ளூராட்சி மன்ற சபைகளுக்கான தலைவர் இளவரசர் முஹம்மத் பின் ஹமூத் ஷாபி அல் ஷாபி தெரிவித்தார்.

உள் நாட்டலுவல்கள் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேர்வர்தனவின் வழிகாட்டலின் கீழ் கட்டார் நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான அரசியல் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற சபைகளுக்கான தலைவர் இளவரசருமான முஹம்மத் பின் ஹமூத் ஷாபி அல் ஷாபின் தலைமையில் மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு கடந்த வியாழக்கிழமை இலங்கைக்கு வந்திருந்தனர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கட்டார் நாட்டில் 21 உள்ளூராட்சி மன்ற சபைகள் உள்ளன. இவற்றுக்கெல்லாம் சிறப்பாக ஒரு தலைமைச் சபை இருக்கிறது. இலங்கையில் வித்தியாசமான முறையில் உள்ளூராட்சி மன்ற சபைகள் அமைந்துள்ளன. உள்ளூராட்சி மன்ற விடயங்கள் தொடர்பாக இலங்கையுடன் இணைந்து செயற்படுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். தொழில்நுட்ப ரீதியிலான அறிவுகளையும் தேவையைக் கருத்திற்கொண்டு அதன் பிரிவுகளை இரு நாடுகளுக்கும் சமரசமாகப் பகிர்ந்து கொண்டு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு இலங்கைக்கான இந்தப் பயணம் சிறந்த பயணமாக அமைந்துள்ளது என்று தெரிவித்தார். (து)

## விபத்தில் சாவு

மட்டக்களப்பு, ஏப். 2
மட்டக்களப்பு கோட்டைக் கல்லாற்றில் இடம்பெற்ற விபத்தில் சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் துறைநீலாவணை 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த யோகராசா கௌதமன்(றொபின் வயது- 26) என்பவரே உயிரிழந்தார். (து)

# வெவ்வேறு அமைச்சுக்களுக்கான ரூ.10,000 கோடி இன்னுமில்லை

கொழும்பு. ஏப். 2
வெவ்வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டிய சுமார் 10 ஆயிரம் கோடி ரூபா நிதியை திறைசேரி விடுவிக்கவில்லையென அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது என்று சிங்கள மொழிப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றஅமைச்சரவைக்கூட்டத்தில்வெவ்வேறு அமைச்சர்கள் இது குறித்து விசனம் வெளியிட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார அமைச்சுக்கான 900 கோடி ரூபா நிதியும், பெரு நகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுக்கான 1350 கோடி ரூபா நிதியும், பெருந் தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சுக்கு வழங்கப்பட வேண்டிய பெருந்தொகை நிதியும் வழங்கப்படாமலிருப்பதாகவும், இது தொடர்பில் குறித்த அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகியோர் அமைச்சரவைக் கூட்டத்தின் போது சுட்டிக்காட்டியிருந்தனர்.

நிதி அமைச்சு இது குறித்து ஆராய்வதாகவும், எதிர்வரும் மே மாதம் செலுத்தப்படாமலுள்ள கட்டணங்களை செலுத்தி முடிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

அதேவேளை புத்த சாசனம் மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுக்கான 500 மில்லியன் ரூபாவும், வழங்கப்படவில்லை என்றும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு-31)

# 765 கிலோ போதைப் பொருள் நேற்று பகிரங்கமாக அழிப்பு



யாழ்ப்பாணம், ஏப் 2
பாதுகாப்பு படையினரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற விசாரணை நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள 765 கிலோவுக்கு அதிகமான போதைப்பொருள்கள் அரச தலைவர் முன்னிலையில் நேற்று அழிக்கப்பட்டன. நேற்று மதியம் களனி மகுறுவெலவில் அமைந்துள்ள சுரவீர களஞ்சிய வளாகத்தில் அவை பாதுகாப்பாக அழிக்கப்பட்டன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமைய இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் தலைமையில் பன்னாட்டு விதிமுறைகளுக்கு அமைவாக போதைப்பொருள்கள் அழிக்கப்பட்டன. பொலிஸாரால் கைப்பற்றப்படும் போதைப்பொருள்களுக்கு என்ன நடக்கின்றது என்பது தொடர்பில் பொதுமக்கள் இடையே தோற்றுவித்திருக்கும் சர்ச்சைகளுக்கு தீர்வளிக்கும் முகமாக அரச தலைவரின் பணிப்புரையின் கீழ் இந்தநடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி 926 கிலோகிராம் கொகெயின் போதைப்பொருள் பகிரங்கமாக அழித்தொழிக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி கொழும்பு துறைமுகத்துக்கு கப்பல் மூலமாக கொண்டுவரப்பட்ட போதைப்பொருள்களே அவ்வாறு அழிக்கப்பட்டன.
அதேவேளை, ஏப்ரல் 3ஆம் திகதிக்கு பின்னர் சட்டவிரோத போதைப்பொருள்கள் தொடர்பான சுற்றிவளைப்புகளை மேலும் தீவிரப்படுத்துவதுடன், போதைப்பொருள்களை இலங்கையிலிருந்து முற்றுமுழுதாக இல்லாதொழிக்கும் வேலைத்திட்டங்களைதுரிதமாகமுன்னெடுத்துச் செல்வதற்கு அரச தலைவரின் பணிப்புரைக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-7)

# கஞ்சா விற்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது

வவுனியா, ஏப்.2
வவுனியாவில் பாடசாலை ஒன்றுக்கு அண்மையில் வர்த்தக நிலையம் என்ற போர்வையில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
வன்னி மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் சிறப்புப் போதை ஒழிப்புப் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர்.
வவுனியா, பண்டாரிக்குளத்தில் உள்ள கல்லூரி ஒன்றுக்கு அண்மையில் கஞ்சா விற்பனை நடைபெறுகின்றது என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்துப் பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர். அவர்கள் அந்தப் பகுதிச் சென்று வர்த்தக நிலையத்தில் சோதனையிட்டனர். அங்கு 15 கிராம் 500 மில்லிகிராம் கஞ்சா மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
கஞ்சாவை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் வர்த்தக நிலையத்தை நடத்திய 31 வயதான ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.
கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்றும், அவர் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-222)

வழங்கப்படும் என்பதில் அனைவரும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.
இன நல்லிணக்கத்துக்காக உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களைச் செயற்படுத்தும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. குற்றமிழைத்தவர்களுக்கு நாட்டின் அரசமைப்புக்கு அமைவாகத் தண்டனை வழங்க அரசு இணங்கியுள்ளது.
கடந்த காலங்களில் அரசு வழங்கிய வாக்குறுதிகளை மீறாத வகையில் செயற்படுத்துவதற்கான பொருத்தப்பாடுகளை கடந்த ஜெனிவா அமர்வில் அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன வழங்கியுள்ளார்.
நாட்டின் நீதித்துறையின் மீது நம்பிக்கையிழந்து, வெளிநாட்டு நீதிபதிகளை இங்கு கொண்டுவந்து இந்த விடயத்தைக் கையாள்வது அரசமைப்புக்கு முரணானது என்பதை அயலுறவு அமைச்சர் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.
பன்னாட்டு நீதிமன்றம், கலப்பு நீதிமன்றம் என்பவற்றை விட உள்நாட்டுப் பொறிமுறை முறை மூலமே இதற்குத் தீர்வு காணப்பட வேண்டும் - என்றார். (எ)

## சித்திரவதைக்கு...

வுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு எதிர்வரும் 12ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருந்து பல்வேறு தரப்புகளுடன் பேச்சு நடத்தவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
மோல்டோவாநாட்டைச்சேர்ந்த விக்டோரியா ஸகாரியா தலைமையிலான குழுவே வரவுள்ளது. மொரிசியஸைச் சேர்ந்த சத்யபூசண்குப்தா டோமா, சைப்பிரசைச் சேர்ந்த பெட்ரோஸ் மைக்கலிடோஸ், பிலிப்பைன்ஸ்சைச் சேர்ந்த ஜூன் லொபிஸ் ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.
ஜெனிவாவில் கடந்த மாதம் 18ஆம் திகதி முதல் 22ஆம் திகதிவரை நடைபெற்ற சித்திரவதையைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் உபகுழுக் கூட்டங்களின்போது இலங்கைக்கான பயணம் தொடர்பாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
இந்தக் குழு பிரிட்டன், காபோன், செனகல், கானா, பல்கேரியா ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்யவே முன்னர் திட்டமிட்டிருந்தது. இந்தக் கூட்டத்தின் பின்னரே இலங்கை, ஆர்ஜென்ரீனா, பலஸ்தீன் ஆகிய நாடுகளுக்கும் பயணம் மேற்கொள்ளத் தீர்மானித்தது. (எ)

பிரச்சினையைத் தீர்க்கத் தற்போது 4 முதன்மைத் திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. இவற்றில் பிரான்ஸ் நாட்டால் வழங்கக் கூடிய உதவிகள் மற்றும் திட்டங்கள் தொடர்பாக ஆராய வேண்டும் என்றும் ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.
வடக்கு மாகாண இளைஞர்கள் மத்தியில் சமூகக் கலந்துரையாடல்களை ஏற்படுத்தக் கூடிய திரைப்படங்களின் திரையிடல்களை ஒழுங்கு செய்ய வேண்டும் என்றும் வடக்கு ஆளுநர், தூதுவரிடம் கேட்டுக் கொண்டார்.
ஆளுநரான இந்தச் சந்திப்பு ஆக்கபூர்வமாக இருந்தது என்று தெரிவித்த தூதுவர், பிரான்ஸ் நாட்டால் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளக் கூடிய உதவித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்படும் என்று தெரிவித்தார் - என்றுள்ளது. (எ)

## யாழ்...

ளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.
அவருக்கு நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் பொலிஸ் அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்பளிக்கப்பட்டது. மதத் தலைவர்களின் ஆசியுடன் அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.
இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை பிராந்தியங்களுக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சர்கள், பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபராக பாலித பெர்ணான்டோ முன்னர் கடமையாற்றியிருந்தார். அவர் கடந்த மாதம் ஓய்வு பெற்றதை அடுத்து ராஜித சிறிதமிக்க யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-26)

## கூட்டமைப்பு...

செயலணிக் கூட்டம் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் எந்தத் தீர்க்கமான முடிவுகள் எவையும் எட்டப்படவில்லை என்று அறிய முடிகின்றது.
இந்தக் கூட்டத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சிறிது நேரமே பங்கேற்றார் என்றும், அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகளும் கலந்துரையாடினர் என்று கூறப்படுகின்றது.
ஊரக எழுச்சித் திட்டம் தொடர்பாகவும், ஐ ரோட் திட்டம் தொடர்பாகவும் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. ஐ ரோட் திட்டங்கள் மே அல்லது ஜூன் மாதமளவில் ஆரம்பிக்கும் என்று தலைமை அமைச்சர் கூறியுள்ளார். யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் வீதி, பருத்தித்துறை - கொடிகாமம் வீதி என்பவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து சீரமைப்பது என்று கூட்டத்தில் பேசப்பட்டுள்ளது.
காணி விடுவிப்புத் தொடர்பாகப் பேசப்பட்டுள்ளது. அத்துடன் காணிகள் கையகப்படுத்தப்படுவது தொடர்பாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும் இந்த விடயங்களில் காத்திரமான முடிவுகள் எவையும் கூட்டத்தில் எடுக்கப்படவில்லை.
பலாலி வானூர்தித் தளத்துக்கு மேலதிக காணிகளைக் கையகப்படுத்துவது தொடர்பாக அதிகாரிகள் பேசியுள்ளனர். அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசா எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். மக்களைக் குடியமர்த்திவிட்டு பின்னர் வானூர்தி நிலையத்தை விஸ்தரிக்கலாம் என்று அவர் கூறினார் என்றும், அவ்வாறு பின்னர் அபிவிருத்திக்காகக் காணி கையகப்படுத்துவது சிக்கலை ஏற்படுத்தும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டினார் என்றும் அறியமுடிகின்றது. அந்த விடயத்திலும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.
கூட்டத்தில் அதிக நேரம் யாழ்ப்பாணம் தொடர்பான அபிவிருத்திகள் பற்றியே அதிகம் பேசப்பட்டன என்றும் அதனால் அதிருப்தியுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கூட்டத்தின் இடைநடுவே புறப்பட்டுச் சென்று விட்டார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ)

## கோடிகளால்...

இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்தன, விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.
இது தொடர்பாக அவர்கள் தெரிவித்துள்ளதாவது
இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இன்று (நேற்று) இரகசியப் பேச்சு நடத்தியுள்ளார்.
அதில் இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்புக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கூட்டமைப்பினரிடம் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுள்ளார்.
ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடு என்ற பெயரில் தலைமை அமைச்சரின் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல கோடி ரூபாவைச் சலுகையாகக் கோரியுள்ளனர் என்றும், அதற்குத் தலைமை அமைச்சரும் இணங்கியுள்ளார் என்றும் அறிகின்றோம்.
நாட்டு மக்களின் நிதி கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் சுகபோக வாழ்க்கைக்குச் செலவாகப் போகின்றது. தமிழ் மக்களின் தன்மானத்தைக் காற்றில் பறக்க விட்டு சலுகை அரசியலில் சரணாகதி அடைந்துள்ளனர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள். கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 14 பேர் ரணில் அரசிடமிருந்து பல கோடி ரூபாவை சலுகையாகப் பெறவுள்ளனர்.
ஆனாலும் வரவு - செலவுத் திட்டத்தை நாம் தோற்கடித்தே தீருவோம். சிறி லங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர், ஜே.வி.பியினர், ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அதிருப்தியாளர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரண்டு அதிருப்தியாளர்கள் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்காளிக்கவுள்ளனர் என்றனர். (எ-22)

## முடியுமானால்...

கொழும்பு, ஏப்.2
முடிந்தால் வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பைத் தோற்கடித்துக் காட்டுங்கள் என்று சவால் விட்டுள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.
சம்பிக்க ரணவக்க, வஜிர அபேவர்த்தன ஆகியோரிடம் உள்ள அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் குழு நிலை வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டன. இது படு தோல்வி என்று கூறிவரும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச ஆதரவு அணியினர், இரு அமைச்சர்களும் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.
நேற்றுக் கொழும்பில் செய்தியாளர் சந்திப்பு நடத்திய ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான முஜிபூர் ரஹ்மான், இயலுமானால் இறுதி வாக்கெடுப்பை மகிந்த ஆதரவு அணியினர் தோற்கடித்துக் காட்டட்டும் என்று சவால் விட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
குழுநிலை விவாதத்தில் பொதுவாக வாக்கெடுப்பு கோரப்படுவதில்லை. அதனால் ஆளுங் கட்சி உறுப்பினர்கள் மாலைநேரத்தில் சபையில் இருக்கவில்லை. இதைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி ஒளிந்திருந்தே மகிந்த தரப்பு தாக்குதல் நடத்தியுள்ளது.
அப்படியே அவர்களுக்குப் பலம் துணிவு இருப்பின் ஏப்ரல் 5ஆம் திகதி நடைபெறும் வரவு-செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பை தோற்கடித்துக் காட்டட்டும் - என்றார். (எ-22)

## கலப்பு...

கையாள்வது அரசமைப்புக்கு முரணானது என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.
நேற்றுமுன்தினம் கேகாலை, ருவன்வெல்லவில் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போது அந்தக் கட்சியின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இவ்வாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
போர் இடம்பெற்றபோது நடந்த தவறுகளுக்கு உள்நாட்டுப் பொறிமுறை மூலம் தண்டனை

## பிரான்ஸ்...

சந்திப்பு நடந்தது என்று வடக்கு ஆளுநரின் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
இந்தச் சந்திப்பில் வடக்கு ஆளுநர் வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகளைத் தெளிவுபடுத்தினார். போர் முடிந்து 10 ஆண்டுகள் கடந்தும் வடக்கு மாகாணத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை நிலையில் பெரும் மாற்றம் ஏற்படவில்லை. இன்றும் அவர்கள் கடினமான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களின் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய அடிப்படை வழிமுறைகளை மேற்கொள்ள முயற்சிக்கின்றோம். இந்த மாற்றத்தை ஏற்படுத்தப் பிரான்ஸ் அரசால் மேற்கொள்ளன் கூடிய உதவிக்ளை வழங்க வேண்டும் என்று கோருகின்றோம் என்று ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.
யாழ்ப்பாணத்தில் நீர் பிரச்சினை உள்ளது. அதைத் தீர்க்க சாத்தியமான வழிமுறைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். இந்தப்

# நேபாளத்தில் கடும் புயல் இதுவரை 35 பேர் சாவு

காத்மண்டு,ஏப்.2

நேபாளத்தைத் தாக்கிய கடுமையான புயலால் 35பேர் சாவடைந்தனர். இந்தச் சாவுகளுக்குப் புயல் மாத்திரமன்றிப் புயலுக்கு முன்னர் ஏற்பட்ட மழை மற்றும் வெள்ளமும் காரணங்கள் என்று கூறப்படுகிறது. நேபாளத்தில் கடந்த சில நாள்களாகக் கன மழை பெய்து வருகிறது. இதனால் ஏற்பட்ட வெள்ளத்தால் மக்கள் பெரும் இடரை எதிர் நோக்கினர். இந்த நிலையில் அங்கு கடும் புயல் ஏற்பட்டது. இதனால், இடரில் சிக்கியிருந்த பலர் பரிதாபமாகச் சாவடைந்தனர். மேலும் பலர் படுகாயமுற்றனர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. இதனால் சாவுகள் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

ஸ்லோவாக்கியாவில் சம்பவம்

# அரசியல் அனுபவமற்ற முதல் பெண் அதிபர்!



ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னி றுத்திப் பரப்புரையில் ஈடுபட்ட ஜுசானா காபுட்டோவா என்கிற பெண் வேட்பாளர் ஸ்லோவாக்கியாவின் அதிபராகியுள்ளார். இதன் மூலம் ஸ்லோவாக்கியாவின் முதல் பெண் அதிபர் என்கிற புகழ் அவருக்குக் கிடைத்திருக்கிறது. ஸ்லோவேக்கியாவின் நாடாளுமன்றத்தில் ஓர் உறுப்பினரைக் கூடக் கொண்டிராத தாராளவாத முற்போக்குக் கட்சியின் சார்பாகப் போட்டியிட்ட எவ்வித அரசியல் முன் அனுபவமும் இல்லாத அவர் தன்னை எதிர்த்து நாட்டின் ஆளும் கட்சி முன்னிறுத்திய வேட்பாளரான மார்ஸ் செஃபோகோவிக் என்பவரை வீழ்த்தித் தேர்தலில் வெற்றியீட்டியுள்ளார். ஆளும் கட்சியின் தரப்பில் நிறுத்தப்பட்ட வேட்பாளர் 42 சதவீத வாக்குகளைப் பெற ஜுசானா 58 சதவீத வாக்குகளுடன் தனது வெற்றியைப் பதிவு செய்தார். சட்டவிரோதமாகக் குப்பை கொட்டியது தொடர்பாக ஸ்லோவாக்கியாவில் 14 ஆண்டுகள் நடந்த வழக்கொன்றை முன்னெடுத்துச் சென்ற ஜுசானா, அதில் பெற்ற வெற்றியின் மூலம் நாடுமுழுவதும் சிறந்த வழக்கறிஞராக அறியப்பட்டார். 45 வயதான ஜுசானா இரண்டு குழந்தைகளுக்குத் தாயானவார்.

**பின்னணி**

கடந்த ஆண்டு ஸ்லோவாக்கியாவில் புலனாய்வுப் பத்திரிகையாளர் ஒருவர் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து அங்கு,தேர்தல் நடந்தது. கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ஸ்லோவாக்கியாவின் அரசியல்வாதிகளுக்கும், திட்டமிட்டு நடத்தப்பட்டதாக கருதப்படும் குற்றங்களுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து ஆய்வு நடத்தியபோதே அந்தப் பத்திரிகையாளர் தன்னுடைய மனைவியுடன் சேர்த்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். தான் அதிபர் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக முடிவெடுத்ததற்கு அந்தப் பத்திரிகையாளரின் சாவு முக்கிய காரணம் என்று ஜுசானா கூறியிருந்தார். பத்திரிகையாளரின் சாவைத் தொடர்ந்து ஸ்லோவேக்கியாவின் தலைமை அமைச்சர் தன்னுடைய பதவியிலிருந்து விலகியிருந்தார்.

# எல்லைச் சுவர் அமைப்பது அவர்களுக்கே சிறையாகும்

## கடிந்து பேசினார் போப் பிரான்சிஸ்



றபட்,ஏப்.2

**சுவர் கட்டுபவர்கள் அந்தச் சுவருக்குள்ளேயே சிறைப்பட்டு விடுவார்கள், முன்னோக்கிச் செல்ல இயலாது, சுவர் கட்டினால். சுவருக்குள்ளேயே அடைக்கப்பட்டு விடுவார்கள் என அருட்தந்தை போப் பிரான்சிஸ் தெரிவித்தார்.**

மொரக்கோ நாட்டில் இருந்து அருட்தந்தை போப் பிரான்சிஸ் வத்திக்கான் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போது வானூர்தியில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலலளித்தார். அப்போதே போப் பிரான்சிஸ் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

"செல்வந்த நாடுகள் வறிய நாடுகளுக்கு உதவி செய்ய வேண்டும் அப்படி உதவிசெய்ய முடியாத அளவு அகதிகள் தங்கள் நாட்டுக்குள் வந்தால் அவர்களைத் தங்களின் சிநேகிதமான அண்டை நாடுகளுக்கு அனுப்பிவைக்கலாமே தவிர அவர்களின் வருகையைத் தடுக்கக் கூடாது" என்றார். மெக்சிக்கோவின் எல்லையில் அமெரிக்கா கட்டிக்கொண்டிருக்கும் எல்லைச் சுவர் பற்றி ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே போப் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்கா - மெக்சிக்கோ இடையேயான எல்லைச் சுவர் பற்றிய போப்பின் இந்தக் கருத்து இதற்கு உடந்தையான அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்பைக் கடிந்து வெளியிடப்பட்டிருக்கின்றது என்று பன்னாட்டு அரசியலவதானிகள் பலரும் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

# இருள் சூழ்ந்த நாடாகியது வெனிசுவெலா!

கரகஸ்,ஏப்.2

வெனிசுலாவின் அரசியல் நிலையற்ற தன்மையால் அந்த நாட்டு மக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொள்கின்றனர். உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள், குடிநீர் என அத்தியவசியத் தேவைகளுக்கான தட்டுப்பாடும், பற்றாக்குறையும் அங்கு பெருமளவில் நிலவுகிறது. வறுமை தலைவிரித்தாடுகிறது.

மருத்துவ மனைகள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டன. மின் தடைகள் அடிக்கடி ஏற்படுவதால், வானூர்தி நிலையங்கள் உட்பட வெனிசுலாவின் அனைத்துப் பகுதிகளும் இரவில் இருளில் மூழ்குகின்றன. அமெரிக்காவின் தலையீட்டாலும், அது விதித்துள்ள ஏகப்பட்ட தடைகளாலும் வெனிசுலா மக்கள் உணவின்றி உயிர் மாய்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தமது இக்கட்டான நிலை காரணமாக அவர்கள் வெனிசுலா அரசுக்கு எதிராக வன்முறைகளில் ஈடுபடுகின்றனர்.

வெனிசுலா அரசுக்கு எதிராகச் செயற்பட்டுவரும் வெனிசுலாவின் எதிர்க்கட்சித் தலைவரான குவைடோவின் ஆதரவாளர்கள் வெனிசுலா மக்களுடன் இணைந்து வன்முறையைப் பெரியளவில் மாற்றி விடுவதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. குவைடோ அமெரிக்காவின் ஆதரவுடன் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.





# 6.6 கோடி ஆண்டுகளுக்கு முன்பு டைனோசர்கள் அனைத்தும் அழிவு

## ஆதாரம் கண்டுபிடித்தனர் ஆய்வாளர்கள்

நியூயோர்க்,ஏப்.2

6.6 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் விழுந்த குறுங்கோள் ஒன்றால் டைனோசர்கள் ஒட்டுமொத்தமாக அழிந்ததாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். அமெரிக்காவின் வடக்கே டக்கோட்டா மாகாணத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின்போது பூமியைத் தாக்கிய குறுங்கோளால் அழிவுற்ற மீன்கள், மரங்கள் ஆகியவற்றின் புதைபடிமங்கள் வாயிலாகத் தொடரப்பட்ட ஆராய்ச்சியிலேயே இது தெரியவந்துள்ளது. அதுமட்டுமின்றி, குறுங்கோள் தாக்கத்தின் காரணமாகக் கடலில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்தும் அதன் மூலம் தெரியவந்துள்ளது.

இதுகுறித்த விவரங்கள் பி.என்.ஏ.எஸ். என்னும் அறிவியல் சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளன. சுமார் 12 கிலோ மீற்றர் அகலம் கொண்ட அந்தக் குறுங்கோள் தற்போதைய மெக்சிக்கோ வளைகுடா பகுதியில் விழுந்து சிதறிய பாறைகள் அனைத்து திசைகளிலும் பல கிலோமீற்றர் தூரத்துக்குச் சிதறின. அப்போது, மீண்டும் பூமியின் நிலப்பரப்பில் வந்து விழுந்த அவை ஏற்படுத்திய சேதங்களை ஆராய்ந்ததிலேயே இந்த தகவல்கள் வெளிவந்துள்ளன.

குறுங்கோள் மோதியதால் ஏற்பட்ட அதிர்ச்சியின் காரணமாக அந்தப் பகுதியை மிகப் பெரிய அளவில் நீர் சூழ்ந்திருக்கக் கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். மெக்சிக்கோ வளைகுடாப் பகுதியை தாக்கிய இந்தக் குறுங்கோளால் ஏற்பட்ட சுனாமி அலைகள், பல மணிநேரங்கள் சுமார் 3ஆயிரம் கிலோ மீற்றர்கள் பயணித்து வடக்கு டக்கோட்டாவை அடைந்திருக்கும் என்றும் இந்தப் பெரும் அசம்பாவிதமே டைனோசர்களின் அழிவுக்கு வித்திட்டது என்றும் கூறப்படுகிறது.





ஹேனா அஹ்மத் அலி பகர் என்கிற இந்தப் பெண் குழந்தை அன்றைக்குத் தனக்குக் கிடைத்த உணவால் பெரும் மகிழ்ச்சியடைந்தவளாகத் தனது தந்தையின் மடியில் அமர்ந்துள்ளாள். யேமனின் ஹேடியாடா எனும் கிராமத்தில் நடந்தது இந்த நிகழ்வு.

# கிராமத்துக்குள் நுழைய வேட்பாளர்களுக்குத் தடை



நிலக்கோட்டை,ஏப்.2
பலமுறை கோரிக்கை விடுத்தும் அடிப்படை வசதிகள் செய்து தராததால் எதிர்வரும் பரப்புரைக்காக எந்தவொரு வேட்பாளரும் கிராமத்துக்குள் நுழையக்கூடாதுஎன்றுநூத்துலாபுரம்கிராம மக்கள்தடை விதித்தனர். அதன் முதற்கட்டமாகப் பரப்புரைக்குச் சென்ற தி.மு.க. வேட்பாளர் திருப்பி அனுப்பப்பட்டார். தி.மு.க. வேட்பாளரான சவுந்திர பாண்டியன் தும்பலப்பட்டி, பங்காள பட்டிஆகியகிராமங்களில்நேற்றுமுன் தினம் பரப்புரையில் ஈடுபட்டார்.

தொடர்ந்து நூத்துலாபுரம் கிராமத்தில் பரப்புரைக்காக வாகனத்தில் சென்ற போது, ஊர் எல்லையில் நின்று கொண்டிருந்த இளைஞர்கள், பெண்கள் சிலரால் அவர் தடுத்து நிறுத்தப்பட்டார்.

தடுத்தி நிறுத்திய அவர்கள் நூத்துலாபுரம் கிராமத்துக்கு வீதி, குடிநீர், கழிவறை உள்ளிட்ட எந்த அடிப்படை வசதிகளும் செய்து தரப்படவில்லை.

நாங்களும் மாறி, மாறி கட்சிகளுக்கு வாக்களித்துப் பார்த்துவிட்டோம். எங்கள் கிராமத்துக்கு எந்தப் பலனும் இல்லை. எனவே, பரப்புரைக்காக எந்தவேட்பாளரும்எங்கள்கிராமத்துக்குள்வரவேண்டாம்என்றனர். இதைக் கேட்ட வேட்பாளர் சவுந்திரபாண்டியன், நான் எதிர்க் கட்சி வேட்பாளர், இதுவரைதேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அ.தி.மு.காவைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஏதும் செய்யவில்லை. என்னைவெற்றிபெறச்செய்தால்அடிப்படை வசதிகள் செய்து தருவேன் என்றார்.

இதற்குப்பதிலளித்தகிராமமக்கள், எங்கள் கிராமத்துக்குத் தனிப்பட்ட முறையில் தாராளமாக நீங்கள் வந்து செல்லலாம். ஆனால்வாக்குக்கேட்டுவராதீர்கள். உங்களுக்குமட்டும்அல்ல, எந்தக் கட்சி வேட்பாளர்கள் வந்தாலும் இதே நிலைதான்.

நாளை அ.தி.மு.க. வேட்பாளர் வந்தாலும் அவரையும் எங்கள் கிராமத்தில் பரப்புரை செய்ய அனுமதிக்க மாட்டோம் என்றனர்.

இதையடுத்து, உங்கள் கிராமத்துக்கு மற்றொரு நாளில் வருகிறேன் என்று கூறிவிட்டுச்சவுந்திரபாண்டியன்திரும்பிச்சென்றார்.

## பெட்டிகள்,சாக்குகளில் கட்டுக்கட்டாகப்பணம்

*வரித்துறை அதிகாரிகளிடம் சிக்கின*

வேலூர்,ஏப்.2
வேலூரில்வருமான வரித்துறையினர் நடத்திய திடீர்சோதனையில் சீமெந்துக் கொள்கலன் ஒன்றுக்குள் பெட்டிகள், சாக்கு மூட்டைகளில் கட்டுக்கட்டாக அடுக்கி வைத்திருந்த பணத்தாள்கள் கைப்பற்றப்பட்டன. பணத்தாள்களைக் காகிதத்தில் சுற்றி அதன்மீது வேலூர் தொகுதிக்குட்பட்ட வட்டார இலக்கம், மற்றும்பெயர்கள்எழுதப்பட்டுஇருந்ததாகத்தெரிவிக்கப்படுகிறது. அவற்றைக் கைப்பற்றிய வருமான வரித்திணைக்களத்தினர் அவற்றின்பெறுமதிபலகோடிகள்என்று தெரிவித்தனர். எதிர்வரும் தேர்தலையொட்டிஅரசியல்கட்சிகளின் கறுப்புப் பணம் வெளிவருதைத் தடுக்கும் நிலையில் அரசதரப்பினர் கடுமையான சோதனைகளில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



## பரப்புரைக்குச் சென்றவரை திருப்பி அனுப்பிய மக்கள்

*குடி நீர் வழங்குமாறு கோரிக்கை*

அரக்கோணம்,ஏப்.2
தமிழகம்- அரக்கோணம் கிராமத்துக்கு அருகே வாக்குக் கேட்டுப்பரப்புரையில்ஈடுபடுவதற்குச்சென்ற வேட்பாளரை வழி மறித்துக் குடிநீர் வழங்குமாறு கோரி வெறுமையான குடங்களுடன் மக்கள் வீதி மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் வாக்குக் கோட்டுச் சென்றவர் நடுவீதியில் தடுத்து நிறுத்தப்பட்டார். அரக்கோணம் மக்களவைத் தொகுதியில் அ.தி.மு.க. கூட்டணி சார்பில் போட்டியிடுகின்ற பா.ம.க. வேட்பாளர் ஏ.கே.மூர்த்தியே இவ்வாறு தடுத்து நிறுத்தப்பட்டார்.

வளர்புரம் என்கின்ற காலனிப் பகுதிக்குள் ஏ.கே.மூர்த்தி செல்லமுயன்றபோது, அங்குள்ளமக்கள் அவரைத்தடுத்து நிறுத்தி, எந்த அடிப்படை வசதிகளும் எங்கள் பகுதிக்குச் செய்து தவில்லை, எங்களுக்குக் குடிநீர் வசதியைச் செய்து தரும் வரை வாக்குக் கேட்டு இங்கு வர வேண்டாம் எனக் கூறினர். அங்கு சல சலப்பு ஏற்பட்டது இதையடுத்து, அந்தப் பகுதிக்குள் செல்லாமல் ஏ.கே.மூர்த்தி திரும்பிச் சென்றார்.

## பொள்ளாச்சி சூத்திரதாரிகளை ஆதாரத்துடன் இனங்காட்டுவேன்

*டிடிவி.தினகரன் உறுதி*



நாமக்கல்,ஏப்.2
பொள்ளாச்சியில் பாலியல் கொடுமைகளைச் செய்தவர்களை மே 23ஆம் திகதிக்குப் பிறகு ஆதாரங்களுடன் வெளியிடுவேன் என்று டிடிவி.தினகரன் தெரிவித்தார்.

நாமக்கல் தொகுதியின் அ.ம.மு.க. வேட்பாளர் சாமிநாதனுக்காகப் பரப்புரையில் ஈடுபட்ட போதே டிடிவி.தினகரன் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தினகரன் மேலும் தெரிவித்ததாவது:

கல்லாப்பெட்டிகளை வீட்டுக்கு அனுப்புவதற்குப் பரிசுப்பெட்டிக்கு வாக்களியுங்கள். பொள்ளாச்சி பாலியல் கொடுமைகளைச் செய்தது எவர் என்பது குறித்து மே 23ஆம் திகதிக்குப் பிறகு ஆதாரங்களுடன் வெளியிடுவேன் - என்றார்

## மத வேறுபாடுகள் களைந்த இந்தியாவை உருவாக்குவோம்

*பிரியங்கா காந்தி பரப்புரை*

லக்னோ,ஏப்.2
ஒருவருடைய மதத்தைப் பற்றி இன்னொருவர் கேள்வி எழுப்பாத இந்தியாவை உருவாக்க வேண்டும் எனத் தேர்தல் பரப்புரையின்போது பிரியங்கா காந்தி கூறினார். உத்தரபிரதேசத்தில்பிரியங்காகாந்திசுற்றுப்பயணம் செய்து வருகிறார். அதன்போதே பிரியங்கா காந்தி இவ்வாறு தெரிவித்தார்.

அத்தோடு, "சுதந்திரத்துக்குப் பிறகு அரச குடும்பங்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டன. தலைமை அமைச்சராக இருந்த எனது பாட்டி அதை விரும்பவில்லை. நாங்களும்எந்தச்சலுகைகளையும் விரும்பவில்லை. இந்த நாட்டில் வாழ்பவர்கள் அனைவரும் சமமாக இருக்க வேண்டும். இந்துவா, முஸ்லிமா, கிறிஸ்தவரா என்று ஒருவருடையமதத்தைப்பற்றிகேள்விஎழுப்பாத இந்தியாவை உருவாக்க வேண்டும். நீஎந்த மதத்தை சேர்ந்தவன் என்ற கேள்வியை முன்வைக்காத தலைமுறை உருவாக வேண்டும். உங்களுக்குசமஉரிமைஅளிக்கப்படவேண்டும். இளைஞர்கள் சாதனை படைக்க வேண்டும். இவை என் கனவு" என்று பிரியங்காகாந்திமேலும்தெரிவித்தார்.



## இன்றைய நாள்

**மேடம்:** உங்களின் பேச்சு செயலில் தயக்கம் ஏற்படலாம். தொழிலில் லாபம் சுமாரான அளவில் இருக்கும். பெண்கள் செலவுக்காகக் கடன் வாங்க நேரிடலாம். பிராணிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது.

**இடபம்:** மனதில் நேர்மை நிறைந்திருக்கும். குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** வாழ்வில் மனச்சாட்சிப்படி நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருகிற குளறுபடியை சரி செய்ய முயல்வீர்கள். லாபம் சுமார். வெளியூர் பயணம் செல்ல நேரிடும்.

**கடகம்:** புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும். தாமதமான பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். சேமிப்புக் கூடும்.

**சிம்மம்:** நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கன்னி:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தன்னம்பிக்கையுடன்செயல்படுவது அவசியம். தொழில் வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். வாகனத்தில் பராமரிப்புச் செலவு ஏற்படலாம்.

**துலாம்:** குடும்ப விஷயத்தைப் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். இஷ்ட வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவு சுமாராக இருக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**விருச்சிகம்:** மதி நுட்பத்துடன் செயல்படுவீர்கள். கடந்த கால முயற்சிக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் உயரும். பெற்றோரின் தேவையைஅறிந்துநிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பூர்வீக சொத்து மூலம்திடீர்லாபம்வரும். சிக்கனத்தால் சேமிக்க முயல்வர்.

**மகரம்:** கருத்துவேறுபாடு உள்ளவரிடம் விலகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. மாணவர்கள் படிப்பில் ஆர்வமுடன்

**கும்பம்:** நண்பர்களால் பிரச்னைக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பணவரவைவிட நிர்வாகச்செலவு அதிகரிக்கும்.

**மீனம்:** பெற்றோரின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சீராக இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேறும். பிள்ளைகளின் செயல்பாடு நிம்மதிக்கு வழிவகுக்கும்..




# யாழ்.லீக்கின் கால்பந்தாட்டம் குருநகர் பாடும்மீன் சம்பியன்!

யாழ்ப்பாணம், ஏப். 2
யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் குருநகர் பாடும்மீன் அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டநேர முடிவில் குருநகர் பாடும்மீன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அந்த அணியின் சார்பில் சாந்தன், கெயின்ஸ் இருவரும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தனர். இறுதியாட்ட நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் அனுர டீ சில்வா கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் பொதுச்செயலர் ஜஸ்வர் உமர், யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் முன்னாள் தலைவர் சூ. அன்ரனிப்பிள்ளை கிளிபேட் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம-23)



## இன்றைய மோதல்கள்

**நாமகள் கழக கால்பந்தாட்டம்**

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**செந்தமிழ் கழக கால்பந்தாட்டம்**

வற்றாப்பழை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வற்றாப்பழை செந்தமிழ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் அணியை எதிர்த்து அலையோசை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். ஜோசப் அணியை எதிர்த்து இளம்பறவை அணி மோதவுள்ளது.

**நல்லூர் செயலக விளையாட்டு விழா**

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா நல்லூர் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தலைமையில் பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரமும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் இ.குருபரனும், யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டுத் துறை அலுவலர் கே. விஜிதரனும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் சதாசிவம் நிமலனும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மக்கள் வங்கி முகாமையாளர் த. பகீரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)



## ஜமஹா சம்பியனானது

யாழ்ப்பாணம், ஏப். 2
அரியாலையின் 100ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் ஜமஹா அணி கிண்ணம வென்றது.
பழைய பூங்காவில் அமைந்துள்ள கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஜமஹா அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. அணி மோதியது. 59:42 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஜமஹா அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-23)

## சென்றலைட்ஸ் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஏப். 2
அரியாலையின் 100ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் சென்றலைட்ஸ் அணி கிண்ணம் வென்றது.
பழைய பூங்காவில் அமைந்துள்ள கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி மோதியது. 92:63 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சென்றலைட்ஸ் அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-23)

## ஏபி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஏப். 2
அரியாலையின் 100ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடத்தப்படும் ரி-20 தொடரில் ஏபி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் ஏபி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ரைட்டோன் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய ரைட்டோன் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அரவிந்தன் 28 ஓட்டங்களையும், உதயசாந்தன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஏபி அணி சார்பில் விஸ்ணு 3 இலக்குகளையும், வினோந்தன், பார்த்தீபன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
135 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஏபி அணி 18 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. அதிகபட்சமாக விஸ்ணு 32 ஓட்டங்களையும், ஆதித்தன் ஆட்டம் இழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அஜந், அருண் இருவரும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். (ம-23)



# ரி-20யில் ரெய்னா புதிய சாதனை

இந்திய அணி வீரரான சுரேஸ் ரெய்னா ரி- 20 போட்டிகளில் 6 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த முதலாவது இந்திய வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

12 ஆவது ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் சென்னை அணி - ராஜஸ்தான் அணிகள் மோதின. இதில் சென்னை அணி வீரர் சுரேஸ் ரெய்னா 36 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். இந்தப் போட்டியில் இவரால் பெரிதாக விளையாட முடியாவிட்டாலும், இந்திய ரி- 20 அரங்கில் 6 ஆயிரம் ஓட்டங்களை எட்டிய முதல் இந்திய வீரர் எனும் பெருமையைப் பெற்றார்.

ரி-20 போட்டிகளைப் பொறுத்தவரை சுரேஷ் ரெய்னா இதுவரை ஒட்டு மொத்தமாக 288 இன்னிங்ஸ்களில் விளையாடி 8,058 ஓட்டங்களை பெற்றுள்ளார்.

இதில் ஐ.பி.எல். போட்டிகளில் 179 போட்டிகளில் விளையாடியுள்ள ரெய்னா சென்னை அணிக்காக மட்டும் 150 போட்டிகளில் விளையாடியுள்ளார்.


அண்மையில் டெல்லி அணிக்கு எதிரான ஆட்டத்தின்போது, ரெய்னா, ஐ.பி.எல். போட்டியில் 5 ஆயிரம் ஓட்டங்களை எட்டிய முதல் இந்திய வீரர் எனும் பெருமையைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.






டோனியின் அதிரடியில்

# சென்னை அணி 'ஹட்ரிக்' வெற்றி



ஐ.பி.எல். தொடரின் 12ஆவது போட்டியில் சென்னை - ராஜஸ்தான் அணிகள் நேற்றுமுன்தினம் மோதின. இதில் டோனியின் அதிரடி சென்னை அணியில் 8 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் சென்னை அணியைத்துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. சென்னை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ராயுடு, வோட்சன் களமிறங்கினர். அணி ஓர் ஓட்டத்தைப் பெற்ற போது ராயுடு ஆட்டமிழந்தார். இணைந்தார் ரெய்னா. அணி 100 ஓட்டங்களை எட்டுவதற்குள் 4 இலக்குகளை இழந்து தடுமாறியது. அணித் தலைவர் டோனி ரெய்னாவுடன் இணைந்து அணியை நிலை நிறுத்தினர். டோனி ஆட்டமிழக்காது 4 ஆறு ஓட்டங்கள், 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 75 ஓட்டங்களைக் குவித்தார். ரெய்னா 36 ஓட்டங்களையும், பிராவோ 27 ஓட்டங்களையும் பெற்றனர். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது.


பந்து வீச்சில் ஆர்ச்சர் 2 இலக்குகளையும், குல்கர்னி, ஸ்ரோக்ஸ், உனாட்கட் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ரஹானே, பட்லர் களமிறங்கினர். அணி ஓட்டமெதனையும் பெறாது முதலாவது இலக்கை இழந்தது. அணி 100 ஓட்டங்களை எட்டுவதற்குள் 5 இலக்குகளைப் பறிகொடுத்து தடுமாறியது. அதிகபட்சமாக ஸ்ரோக்ஸ் 46 ஓட்டங்களையும், ரிப்பத்தி 39 ஓட்டங்களையும் பெற்றனர். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 8 ஓட்டங்களால் வெற்றியைத் தவறவிட்டது.

பந்து வீச்சில் சாஹர், தாஹீர், தாகூர், பிராவோ தலா இரண்டு இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சென்னை அணியின் வீரர் டோனி தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தனது 'ஹட்ரிக்' வெற்றியை பதிவு செய்யது.

# ஸ்டூவர்ட் பிராட் சாஹலுக்கு பதிலடி



மும்பை - பெங்களூர் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் மும்பை அணியின் வீரர் யுவராஜ் சிங் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி பந்து வீச்சாளர் சாஹலின் பந்து வீச்சில் முதல் 3 பந்துகளிலும் தொடர்ச்சியாக ஆறு ஓட்டங்களை அடித்தார்.

இது குறித்து சாஹல் தெரிவிக்கையில்:

யுவராஜ் சிங் 3 ஆறு ஓட்டங்களை அடித்தபோது, நான் ஸ்டூவர்ட் பிராட் போன்று உணர்ந்தேன் - என்றார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் முகமாக ஸ்டூவர்ட் பிராட் தெரிவித்ததாவது:

10 வருடத்தில் நான் 437 இலக்குகளை வீழ்த்தியுள்ளேன். இந்த விடயத்திலும் என்னைப் போன்று உணர்வார் என்று நம்புகிறேன் - என்றார்.

2007ஆம் இடம்பெற்ற ரி-20 உலகக் கிண்ணத்தில் இங்கிலாந்து பந்து வீச்சாளர் ஸ்டூவர்ட் பிராட்டின் பந்தில் அவர் 6 பந்துகளிலும் தொடர்ச்சியாக ஆறு ஓட்டங்கள் அடித்து சாதனை படைத்திருந்தார்.

அதன்பின் ஸ்டூவர்ட் பிராட் இங்கிலாந்தின் முக்கியமான இரண்டு பந்து வீச்சாளர்களில் ஒருவராக திகழ்ந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. சாஹல் இன்றும் இந்திய டெஸ்ட் அணியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வோர்னர், பெய்ர்ஸ்டோ அதிரடியில்

# மண்டியிட்டது பெங்களூர்

ஐ.பி.எல். தொடரின் 11ஆவது போட்டியில் ஹைதராபாத் - பெங்களூர் அணிகள் மோதியன. இதில் ஹைதராபாத் அணி 118 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணி முதலில் ஹைதராபாத் அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. ஹைதராபாத் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக வோர்னர், பெயர்ஸ்டோ களமிறங்கினர். இருவரும் இணைந்து அணிக்கு பலமான இணைப்பாட்டத்தை வழங்கினர். அணி 185 ஓட்டங்களைப் பெற்ற போதே பெயர்ஸ்டோ 114 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். வோர்னர் 100 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்திலிருந்தார். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 231 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்கு இமாலய இலக்கை நோக்கிக் களமிறங்கிய பெங்களூர் அணி 50 ஓட்டங்களை எட்டுவதற்குள் 6 இலக்குகளை இழந்து தடுமாறியது. ஹைதராபாத் அணியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் அணி 19.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 113 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அதிகபட்சமாக கிரான்ஸ்ஹோம்ப் 37 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் மொகமட் நபி 4 இலக்குகளையும், சன்டீப் சர்மா 3 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ஹைதராபாத் அணி வீரர் பெயர்ஸ்டோ தெரிவு செய்யப்பட்டார்.



# கருணாரத்னே நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்

மது போதையில் மகிழுந்தை செலுத்தி விபத்தை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இலங்கை அணி வீரர் திமுத் கருணாரத்னே கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுதலையானார். பின்னர் நடைபெற்ற விசாரணைகளின் அடிப்படையில் அவர் மதுபோதையில் வாகனம் செலுத்தியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டதால் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணித் தலைவர் பொறுப்புக்கு இவரின் பெயர் பரிசீலிக்கப்பட்டு வந்த நிலையில், இந்த சர்ச்சையில் சிக்கி இருக்கிறார் கருணாரத்னே.

இலங்கை கிரிக்கெட் சபையும் அவர் மீது விசாரணை நடத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 950
சீட்டிழுப்பு திகதி 2019.03.31 ஞாயிற்றுக்கிழமை
V 16 33 45 72
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1557
சீட்டிழுப்பு திகதி 01.04.2019
வெற்றி இலக்கங்கள் 05 11 27 37 A
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ 28, 922, 616/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

BCHS
British college of higher studies
English/ Sinhala/ Computing
Certificate course in English
Diploma in English
Spoken English
IELTS (Academic/General)
IELTS Life skills (A1, B1 exams)
Spoken Sinhala with grammar
Computer hardware & net working
Multimedia (Audio & Video editing)
Internet & Emails
Microsoft package
Fundamentals of ICT
புதிய பிரிவுகள் ஆரம்பம்...
பதிவுகள் இன்று முதல்....
15, Stanley Road, Sirambiyady lane, Jaffna.
(லங்கா சதொச மேல் மாடி)
021222 4550 / 076 1380212



# மியாமி ரென்னிஸ் தொடர்

# பெடரர்- ஆஷ்லி பார்தி கிண்ணம் வென்றனர்

மியாமி பகிரங்க ரென்னிஸ் போட்டி அமெரிக்காவில் இடம்பெற்று வருகின்றது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வீராங்கனை ஆஷ்லி பார்தி வெற்றி பெற்றார்.

ஆஷ்லி பார்தி - செக் குடியரசின் கரோலின் பிலிஸ்கோவாவை எதிர் கொண்டார். இதில் ஆஷ்லி பார்தி முதல் சுற்றை மிகுந்த கடினத்தின் மத்தியில் 7:6 என்ற கணக்கில் கைப்பற்றினார். இரண்டாவது சுற்றை ஆஷ்லி பார்தி 6:3 என்ற கணக்கில் இலகுவாகக் கைப்பற்றினார். இறுதியில் பார்தி 7:6, 6:3 என்ற நேர் செற் கணக்கில் பிலிஸ்கோவாவை வீழ்த்தி வெற்றி பெற்றார். ஆஷ்லி பார்தி தனது ரென்னிஸ் வாழ்க்கையில் பெற்ற முதல் பட்டம் இதுவாகும். இவர் பெண்களுக்கான ரென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் 11 ஆவது இடத்திலிருந்து 9 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். மற்றுமொரு ஆட்டத்தில் ஆண்களுக்காக ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் பெடரர் - ஜோன் இஸ்நெர் மோதினர். இதில் பெடரர் 6:1, 6:4 என்ற நேர் செற் கணக்கில் இலகு வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினார். இவர் 4 ஆவது முறையாக மியாமி கிண்ணத்தை கைப்பற்றுவது குறிப்பிடத்தக்கது.

A/L - 2021
புவியியல்
DMI யாழ்.நகர் | CCA சுன்னாகம்
புகழ் மானிப்பாய் | ஆட்ஸ் அக்கடமி புத்தூர்
தமிழியற் கல்லூரி கோப்பாய்
N. BABU
ஆரம்பம் - 06.04.2019 சனி
0779365087

ஆங்கிலம்
தொழில் புரிவோர் இளைஞர் யுவதிகள் மற்றும் வெளிநாடு செல்வோருக்கான புதிய 3 மாத ஆங்கிலப்பயிற்சிநெறி.
சனி ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் : 06.04.2019 சனி
பிரிவு 01 : காலை 08-10 பிரிவு 02 : மாலை 03-05
3 மாத காலத்தில் ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
இவ்வாரத்திற்குள் இணைவோருக்கு கட்டணம் ரூபா 3000 மட்டுமே.
SARMSON
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர்.
021 222 4282 077 621 4567

DMI
A/L - 2K21
ஏப்ரல் 06
(கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்)
DMI - Jaffna காலை 09.00மணி
DMI- Chunnakam மாலை 03.00மணி

PHYSICS
A/L 2021
ஆரம்பம்: 03.04.2019 புதன் 5.30 Pm
ஆசிரியர்: M.ஸ்பெல்மன் Bsc. PGDE
இடம் : MSI. மணிக்கூட்டு வீதி, BMC Lane Jaffna Town
* Personal Class * Group Class
ஆக கற்க விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்
T.P 077 611 6724

சதாபொன்ஸ் கல்வி நிலையம்
(ஒழுக்கம் சார் கல்வி)
மாலிசந்தி அல்வாய்
O/L மீட்டல் வகுப்புக்கள்
03.04.2019 புதன்கிழமை
காலை 7.30 மணிக்கு ஆரம்பம்
அனுமதி இன்று முதல்
- 077 309 5176, 021 226 3206

சதாபொன்ஸ் கல்விநிலையம்
(ஒழுக்கம் சார் கல்வி)
மாலிசந்தி அல்வாய்
A/L 2021 கலை வர்த்தகப் பிரிவு
வகுப்புக்கள் ஆரம்பம்
03.04.2019 புதன்
மாலை 3.00 மணி
077 309 5176/021 226 3206

# டேவிட் வோர்னருக்கு மனைவி வாழ்த்து



ஆஸ்திரேலியா அணி வீரர் டேவிட் வோர்னர் பந்தைச் சேதப்படுத்திய விவகாரத்தில் ஓராண்டு தடை விதிக்கப்பட்டிருந்தார். கடந்த சில நாள்களுக்கு முன்னர் தான் அவரது தடை நீக்கப்பட்டது. அவர் தற்போது இடம்பெறும் ஐ.பி.எல். போட்டியில் ஹைதராபாத் அணிக்காக விளையாடி வருகின்றார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஹைதராபாத் - பெங்களூர் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் அவர் சிறப்பாக துடுப்பெடுத்தாடி சதம் கடந்தார். ஓராண்டு தடையின் பின்னர் அவர் இந்த ஐ.பி.எல் தொடரில் நடைபெற்ற ஒவ்வொரு போட்டியிலும் 50 ஓட்டங்களைக் கடந்து சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றார். இது குறித்து அவரது மனைவீ கேண்டிஸ் தனது ருவிற்றரில் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.


அவரது மனைவி தெரிவிக்கையில்;

தடைக்குப் பின்னர் சிறப்பாக விளையாடி வரும் வோர்னரால் மிகவும் பெருமையடைகின்றேன். அத்தோடு சதம் அடித்ததற்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3168 திகதி: 2019.04.01 திங்கட்கிழமை
SATURDAY FORTUNE
நீலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 02 09 29 40 U
போனஸ் இலக்கம் 21
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட் 37,777,775/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 572
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.04.01
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,607,820/-
வெற்றி இலக்கங்கள் 41 56 57 74 Z
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

31 ஆம் நாள் நினைவஞ்சலி
"உயிர்ப்பும், உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவான் 11:25)



மண்ணில் 20.05.1947
விண்ணில் 03.03.2019
அமரர். அலோசியஸ் ஞானேந்திரன் கூஞ்ஞ
(பனங்கட்டிக்கொட்டு மேற்கு, மன்னார்.)
அன்பொழுக நாளும் அனைவரையும் ஆதரித்து
ஆறுதல் மொழிகளெல்லாம் அள்ளி யுடன்வழங்கி
இன்பம் பயக்கும் இனியவாய்ச் சொல்லாலே
இகத்தி லிருப்பவரைக் கவர்ந்தென்றும் வாழவைத்து
துன்பம் எதுவந்த போதும் தயங்காது
துணையாக யேசு பொன்மொழிகள் மனத்திருத்தி
வன்மம், பகை, எதுவும் வந்தும்மைத் தாக்காது
வளமாக வாழ்ந்தவரே! இறைவனடி இணைந்திடுக!
பிரிவால் துயருறும் :
J.A. கமிலஸ் சுஜாத்தா குடும்பத்தினர் [மகள், மருமகன்]
எமில்நகர், மன்னார்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.